



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:227 | 03-03-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

03.03.2026 மாசி 19
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.28

திதி:
இன்று மாலை 5.52 வரை பௌர்ணமி பின்பு பிரதமை.

நட்சத்திரம்:
இன்று காலை 8.07 வரை மகம் பின்பு பூரம்.

யோகம் :
இன்று காலை 11.00 வரை சுகர்மம் பின்பு திருதி.

கரணம் :
இன்று காலை 6.10 வரை பத்திரை பின்பு மாலை 5.52 வரை பவம் பின்பு பாலவம்

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.27 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 6.07 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

நல்ல நேரம்
காலை 10.30 –11.30
மாலை 1.30 – 2.30

இராகு காலம்
பிற்பகல் 3.00 –4.30


எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
காலை 10.30 – 12.00

இன்று ஹோலி பண்டிகை

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை, தூதரக முயற்சி மூலம் தீர்வு: பிரதமர் வலியுறுத்தல்



**புதுடெல்லி, மார்ச்.3:**

மத்திய கிழக்கில் மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்படுவதையே இந்தியா ஆதரித்து வந்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். மத்திய கிழக்கின் தற்போதைய நிலை கவலை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியில், கனடா பிரதமர் மார்க் கார்னி உடன் இணைந்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரதமர் மோடி, மத்திய கிழக்கில் தற்போது அதிகரித்து வரும் மோதல் குறித்த கேள்விக்கு பதில் அளித்தார். அப்போது அவர், “இத்தகைய பிரச்சினைகளுக்கு, பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இந்தியா எப்போதும் வலியுறுத்தியுள்ளது. மோதல்களை அமைதியான முறையில் தீர்க்கும் நிலைப்பாட்டை இந்தியா நீண்ட காலமாக பின்பற்றி வருகிறது.

பயங்கரவாதம், தீவிரவாதம், தீவிர சிந்தனைகள் ஆகியவை நமக்கு மட்டுமல்லாது, உலகம் முழுவதற்கும் பெரிய சவால்களாக உள்ளன. இத்தகைய அச்சுறுத்தல்களை சமாளித்து உலக அமைதியையும் நிலைத்தன்மையையும் உறுதி செய்ய நாடுகளுக்கு இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு அவசியம்.

உலகம் முழுவதும் உருவாகும் பதற்றங்கள் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் தெளிவாக இருந்துள்ளது. இந்தியா தொடர்ந்து அமைதி மற்றும் நிலைத்தன்மையை வலியுறுத்தி வருகிறது. இரண்டு ஜனநாயக நாடுகள் ஒன்றிணைந்து செயல்படும்போது, அமைதிக்கான குரல் மேலும் வலிமை பெறும்” என தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்த கேள்விக்கு பதில் அளித்த பிரதமர் மோடி, “பிராந்தியத்தில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நிலைமையை நெருக்கமாக கண்காணித்து வருகிறது. அங்குள்ள நாடுகளுடன் இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருக்கிறது.” என தெரிவித்துள்ளார்.

> பயங்கரவாதம், தீவிரவாதம், தீவிர சிந்தனைகள் ஆகியவை நமக்கு மட்டுமல்லாது, உலகம் முழுவதற்கும் பெரிய சவால்களாக உள்ளன. இத்தகைய அச்சுறுத்தல்களை சமாளித்து உலக அமைதியையும் நிலைத்தன்மையையும் உறுதி செய்ய நாடுகளுக்கு இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு அவசியம்.

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து நடத்திய வான் தாக்குதலில், ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். மேலும், அந்நாட்டின் 40 முக்கிய அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து அரசியல் தலைமைகள், ராணுவத் தளபதிகள், ஆயுத கிடங்குகள் ஆகியவற்றை குறிவைத்து இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பதிலுக்கு, இஸ்ரேலுக்கு எதிராகவும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்தும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா இஸ்ரேலை தாக்கியதைத் தொடர்ந்து, லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

# டெல்லி சென்றார் எடப்பாடி; அமித்ஷாவை சந்திக்கிறார்

**சென்னை, மார்ச்.3:**



க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று டெல்லி புறப்பட்டு சென்றார்.

தமிழக சட்டசபைத் தேர்தல் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ள நிலையில் கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதிப் பங்கீடு என கட்சிகளின் தேர்தல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

சட்டசபை தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான அண்ணா தி.மு.க. தலைமையிலான கூட்டணியில், பா.ஜ.க., பா.ம.க., த.மா.கா., அ.ம.மு.க., இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

அண்ணா தி.மு.க. கூட்டணியில் கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க., இந்த முறை 35 தொகுதிகள் கேட்டு வருகிறது. இதேபோல் பாமக 18, அமமுக 10, தமாகா 6 தொகுதிகளை கேட்கிறது. மேலும், இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் ஆகிய கட்சிகள் தலா 2 தொகுதிகளையும், 4 சிறிய கட்சிகள் தலா 1 தொகுதியையும் கேட்டு வருகின்றன.

கடந்த (2021) சட்டசபை தேர்தலில் அண்ணா தி.மு.க. 179 தொகுதிகளில் போட்டியிட்டது. ஆனால், இந்த முறை கூட்டணி கட்சிகள் கேட்பதை கொடுத்தால் 81 தொகுதிகளை விட்டு கொடுக்க வேண்டியது உள்ளது. இதை வைத்து பார்த்தால், இந்த முறை அண்ணா தி.மு.க.வுக்கு 153 தொகுதிகளே கிடைக்கும் என்ற நிலை உள்ளது.

**அமித்ஷாவை சந்திக்கிறார்**

இந்தநிலையில்தான், அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று திடீரென டெல்லி பயணம் மேற்கொண்டு இருக்கிறார். அங்கு, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து அவர் பேசுவார் என தெரிகிறது.

ஏற்கனவே கடந்த ஜனவரி 4-ந் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா திருச்சி வந்தபோது, அவரை சந்தித்து பேசுவதை எடப்பாடி பழனிசாமி தவிர்த்தார். ஆனால், அவர் டெல்லி திரும்பிய பிறகு அங்கு சென்று அவரை சந்தித்து பேசினார்.

அதுபோல் இந்த முறையும் பிரதமர் மோடி நேற்று தமிழகம் வந்து சென்றிருக்கும் நிலையில், எடப்பாடி பழனிசாமி அவசர அவசரமாக டெல்லி செல்வது, அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இந்த சந்திப்பின்போது தொகுதி பங்கீடு குறித்து விவாதிக்கப்படும் என தெரிகிறது.

முன்னதாக மதுரையில் தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்கள் சுமார் 30 நிமிடங்கள் வரை ஆலோசனையில் ஈடுபட்டனர். அப்போது கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதிப் பங்கீடு குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் இதில் எந்தவித முடிவும் எட்டப்படவில்லை எனவும் கூறப்பட்டது.

# தமிழகம் எல்லாத் துறைகளிலும் ‘ஆல் ரவுண்டர்’: ஸ்டாலின் பேச்சு

**சென்னை, மார்ச் 3:**

தமிழகம் எல்லா துறைகளிலும் ‘ஆல் ரவுண்டர்’ என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். மதுரை வந்த பிரதமர் மோடி பொய்யை அவிழ்த்து விட்டிருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு லீடர்-ஷிப் உச்சி மாநாடு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பேசியதாவது:

எல்லா துறைகளிலும் ஆல்-ரவுண்டராக உயர்ந்து இருக்கிறோம். எல்லா பகுதிகளிலும் பரவலான, சமச்சீரான எல்லோருக்குமான வளர்ச்சியை எங்கள் திராவிடமாடல் ஆட்சியில் சாதித்து காட்டியிருக்கிறோம்.




**தி.மு.க.வுக்கு ஆதரவு அலை**

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் தங்களின் பகுதியில், தங்களின் வீட்டில் எந்த அளவிற்கு முன்னேற்றம் வந்திருக்கிறது என்று கண்கூடாக பார்க்கிறார்கள். அதனால்தான், ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது.

அரசுப் பள்ளி மாணவர்களை உலக அளவில் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பும் மாடல் ஸ்கூல்ஸ், விமான நிலையத்திற்கு இணையான பேருந்து நிலையங்கள், உயர்சிறப்பு மருத்துவமனைகள், சிறு விளையாட்டரங்கங்கள், ஏழைகளுக்கு தரமான குடியிருப்புகள் இப்படி ஒவ்வொரு செக்டாரிலும் நாங்கள் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாடு வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு வீட்டுமனை பட்டாக்களை மக்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலமாக 75 லட்சம் வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு 3 கோடி மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பெரிய பெரிய மேம்பாலங்கள், பல்வேறு நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் போடப்பட்டிருக்கிறது. கிராம சாலைகளையும் மேம்படுத்தி இருக்கிறோம். பெருநகரங்களுக்கு நடுவே அழகிய பூங்காக்களை அமைக்கிறோம். அறிவுக் கோயில்களாக பிரமாண்ட நூலகங்கள் கட்டப்படுகிறது.

**விளைச்சலில் சாதனை**

உழவர்களுக்கு தனி பட்ஜெட் போட்டு, விளைச்சலில் சாதனை படைத்திருக்கிறோம்.

மாசில்லாத போக்குவரத்திற்காக மாநிலம் முழுவதும் இபஸ் பயன்பாட்டை அதிகரித்துக் கொண்டிருக்கிறோம்.

எங்கள் மேல் பொய் பரப்புபவர்களுக்கு பதிலடி கொடுப்பது மாதிரி, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்களில் குடமுழுக்கு நடத்தியிருக்கிறோம். மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கியிருக்கிறோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேல், இந்த ஆட்சியே மகளிர் மற்றும் மாணவர்களுக்கான ஆட்சி என்று சொல்லும் அளவிற்கு திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்கள் எல்லாமே அவர்களுக்காகதான் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப், காலை உணவுத் திட்டம், தோழி விடுதிகள் என நிறைய இருக்கிறது. என்னால் உறுதியாக சொல்ல முடியும், இத்தனை முத்திரைத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தும் வேறு மாநில அரசு இந்தியாவிலேயே நிச்சயமாக இருக்க முடியாது.

இதையெல்லாம் யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

நாங்கள் இப்படி ஆல்ரவுண்டர் -ஆக அடித்து ஆடுவதால்தான், இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலம் தமிழ்நாடு என்று ஒன்றிய பா.ஜ.க. அரசே பாராட்டி சொல்லியிருக்கிறது. நம்பர் ஒன் மாநிலம் மட்டுமல்ல, இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டிய ஒன் அண்ட் ஒன்லி மாநிலமும் நம்முடைய தமிழ்நாடுதான். பொருளாதார வளர்ச்சியில் மட்டுமல்ல, மனித வளர்ச்சிக் குறியீட்டி-லும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.






## திருக்குறள் குறள்-547

**இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்**



உலகத்தை எல்லாம் அரசன் காப்பாற்றுவான், நீதிமுறை கெடாதவாறு ஆட்சி செய்வானாயின் அரசனை அந்த முறையே காப்பாற்றும்.

## சிந்திக்க ஒரு நொடி




லட்சியம் இல்லாத
வாழ்க்கை முள்
இல்லாத கடிகாரம்
போன்றது ...

அது ஓடினாலும்
பயனில்லை
நின்றாலும் பயனில்லை

**உஷா முத்துராமன்**

## மாசி மகத்தை முன்னிட்டு கௌதம நதிக்கரையில் ஸ்ரீசந்திரசேகரர் தீர்த்தவாரி





**திருவண்ணாமலை மார்ச்03:**
அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் மாசி மகம் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ சந்திரசேகரர் அலங்காரத்துடன் பள்ளிகொண்டாப்பட்டு கௌதம நதிக்கரையில் தீர்த்தவாரி நடைபெற்றது. வண்ண மலர்களால் அலங்கரித்து, மேள வாத்தியங்களுடன், வானவேடிக்கையுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கௌதம நதிக்கரையில் நீராடி ஸ்ரீ சந்திரசேகரரை வேண்டி அருள் பெற்றனர். பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## காங்கிரஸ் கட்சியே 2ஆக பிளக்கும்.. தவெக நோக்கி திரும்புதா மேலிட பார்வை?



**சென்னை, மார்ச் 03:**
திமுக – காங்கிரஸ் கூட்டணியில் விரிசல் எழுந்துள்ளது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியுள்ளது. தொகுதிப் பங்கீட்டில் இரு தரப்புமே பிடிவாதமாக இருப்பதால் சீட் நம்பரை உறுதி செய்ய முடியாத நிலை உள்ளது. மேலிடத்தின் கவனம் விஜய் பக்கம் திரும்பி இருப்பதால் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பிளவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தமிழகத்தில் விரைவில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், திமுக தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தையை தீவிரப்படுத்தியுள்ளது. டி.ஆர். பாலு தலைமையிலான 7 பேர் கொண்ட குழு, தொகுதி பங்கீடு தொடர்பாக கூட்டணி கட்சிகளை ஒவ்வொன்றாக அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

## தமிழக வெற்றிக்கழக கொள்கை விளக்க பொதுக்கூட்டம்




புதுக்கோட்டை திலகர் திடலில் தமிழக வெற்றிக்கழக கொள்கை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. மத்திய மாவட்ட தலைவர் பர்வேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் பரப்புரைச் செயலாளர் நாஞ்சில் சம்பத், துணைப் பொதுச்செயலாளர் ராஜ்மோகன், கொள்கை பரப்பு இணைச் செயலாளர் லயோலா மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

## பெண்களே..!! இதுவரை உங்களுக்கு ரூ.5,000 உரிமைத்தொகை வரவில்லையா..



**சென்னை, மார்ச் 03:**
2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, குடும்ப தலைவிகளின் பொருளாதார சுமையைக் குறைக்கும் வகையில் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய 3 மாதங்களுக்கான உரிமைத்தொகை ரூ.3,000 மற்றும் கோடைக்கால சிறப்புத் தொகையாக கூடுதலாக ரூ.2,000 என மொத்தம் ரூ.5,000 ஏற்கனவே 1.31 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை இல்லத்தரசிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், அடுத்தகட்டமாக ஜூன் மாதத்திலிருந்து நிரந்தரமாக ரூ.2,000 வழங்கப்படவுள்ளது.

உரிமைத் தொகை உயர்வு மட்டுமின்றி, இத்திட்டத்தை மேலும் பரவலாக்கும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது.

தற்போது விடுபட்டுள்ள தகுதியுள்ள பெண்கள் மற்றும் புதிய விண்ணப்பதாரர்களை இத்திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான வழிகாட்டுதல்கள் ஜூன் மாத அறிவிப்பில் இடம்பெறக்கூடும் என தெரிகிறது. இதன் மூலம் பயனாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.



சென்னை.மார்ச் 03: தமிழகத்தில் பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிடும் வகையில், திராவிட மாடல் அரசு பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நிலையில்,, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் சக்கரபாணி, குட் நியூஸ் ஒன்றை வெளியிட்டுள்ளார்.. இது ரேஷன்தாரர்களுக்கு புதிய நம்பிக்கையை தந்து வருகிறது.. குடும்ப அட்டைதாரர்களின் வசதியையும், நன்மையையும் கருத்தில் கொண்டு தமிழக அரசு ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டு அதை செயல்படுத்தியும் வருகிறது

## செய்யாறு சட்டசபை தொகுதிக்கு பொறுப்பாளர்கள் – நிர்வாகிகள் ஆதரவுடன் தி.மு.க.வில் விருப்ப மனுவை தாக்க செய்தார்

### மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம்.கே.கார்த்திகேயன் !





**செய்யாறு, மார்ச் 303:**
மக்களிடம் செல்வாக்கு இருப்பவர்கள் தான் 2026 சட்டசபை தேர்தலில் கனிசமான வாக்குகளை பெற்று, வெற்றி பெறுவார்கள் என, பரவலாக பேசப்பட்டு வருகிறது. அந்த வகையில் செய்யாறு சட்டசபை தொகுதியில் எந்தப் பக்கம் திரும்பினாலும் தி.மு.க.,வின் பொறுப்பாளர்கள், தொண்டர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி குழுக்கள் என, பெரிய பட்டாளமே, ஏழாச்சேரியை சேர்ந்த மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம்.கே. கார்த்திகேயனுக்கு 'பெரிய ஆதரவு' கொடுத்து வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு உட்பட்டது செய்யார் சட்டசபை தொகுதி. இந்தத் தொகுதியில் வன்னியர்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். தி.மு.க., – அ.தி.மு.க., கட்சியும், அதன் கூட்டணி கட்சிகளை சேர்ந்தவர்கள் யாரை 'களத்தில் இறக்கினாலும்' அவர்கள் வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். இவர்கள் தான் செய்யார் சட்டசபை தொகுதியில் கடந்த 50 ஆண்டுகளாக மாறி மாறி எம்.எல்.ஏ.,வாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஆனால், அந்தந்த காலகட்டத்தில் மக்களிடம் செல்வாக்கு பெற்றவர்கள் தான், தேர்தலின் போது கனிசமான வாக்குகளை வாங்கி சட்டசபைக்கு உறுப்பினராக அனுப்பி வைக்கப்படும் முறை இன்று வரையிலும் தொடர்கிறது.

தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை தொகுதி மக்கள், 5 ஆண்டுகளின் இவரது செயல்பாடு – அனுகுமுறை – பேசும்படி அளவுக்கு தொகுதிக்கு என்ன திட்டங்களை கொண்டு வந்துள்ளார் என, கண்காணித்து வருகின்றனர். ஆனால், செய்யார் தொகுதி மக்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு எந்த சட்டமன்ற உறுப்பினரும் 2வது முறையாக தேர்வு செய்யும் அளவுக்கு திருப்திகரமாக இல்லை என, மக்களால் இறுதி கட்டத்தில் முடிவு எடுப்பதையும் – பரவலாகப் பேசப்படுவ தையும் காதுகளில் கேட்க முடிகிறது.

இந்த முறை 2026 சட்டசபை தேர்தலில் செய்யார் தொகுதியில் தி.மு.க., சார்பில் ஏழாச்சேரி கிராமத்தை சேர்ந்த எம்.கே. கார்த்திகேயனுக்கு 'டிக்கெட்' கொடுத்து களத்தில் இறக்கினால் மக்கள் செல்வாக்குடன் கனிசமான ஓட்டுக்களை பெற்று சுலபமாக வெற்றி பெறுவார் என, மக்களால் தேர்தலுக்கு முன்பே பேச துவங்கிவிட்டனர். இவர், தான் நேற்று விருப்ப மனு கொடுப்பதற்காக சென்னை அறிவாலயத்திற்கு தி.மு.க., தொண்டர்கள் – நிர்விகிகள் என, 'பெரிய மக்கள் கூட்டத்துடன்' சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுக்குமாடி குடியிருப்புகள் திறப்பு



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் ரூ.840.76 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5,367 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

## தந்தைக்கும் மகனுக் கும் இடையே யான மோதல் இப்போது உச்சகட்டம்



தமிழக அரசியலில் தந்தைக்கும் மகனுக் கும் இடையே யான மோதல் இப்போது உச்சகட்டத்தை எட்டியுள்ளது. பாமக நிறுவனர் ராமதாஸ், திமுக மற்றும் தவெக ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைக்க முயற்சித்தும் கதவுகள் திறக்கப்படாததால், வேறு வழியின்றி மீண்டும் பாஜக தலைமையிலான என்.டி.ஏ (NDA) கூட்டணிக்கே திரும்ப முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் கசிகின்றன.

### அதிமுக மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், வரும் மார்ச் 4 அன்று அதிமுக மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## மாசிமகம் தெப்பம் உத்ஸவம்



ஸ்ரீசார்ங்கபாணி ஸ்வாமி கும்பகோணம்... மாசிமகம் தெப்பம் உத்ஸவம் 02/03/26.

## தேசிய அறிவியல் தின விழா கொண்டாட்டம்




**திருவண்ணாமலை, மார்ச்03:**
ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி பள்ளியில் தேசிய அறிவியல் தின விழா கொண்டாடப்பட்டது.இவ் விழாவிற்கு திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் திரு.சீனிவாசன் ( ஓய்வு),அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்தார்.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் அறிவியல் சோதனைகள் செய்து காட்டினர்கள். பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி.சைலஜா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். திருமதி. வை.புனிதவதி அவர்கள் விழா அறிமுக உரையாற்றினார்.

திருமதி.தே.அஸ்வினி அவர்கள் நன்றி கூறினார். மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. தேசிய அறிவியல் தின விழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் அரசு பள்ளி மாணவர்களுக்கு அஞ்சாதே ஹெல்பிங் ஹேண்ட்ஸ் பவுண்டேஷன் சார்பில் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி



திருவண்ணாமலை மாவட்டம் மார்ச் 2 கீழ்பென்னாத்தூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் அஞ்சாதே ஹெல்பிங் ஹேண்ட்ஸ்பவுண்டேஷன் சார்பாககீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி சார்ந்த எழுது பொருட்கள் வழங்கப்பட்டது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் மு. பிரசன்னா அவர்களின் தலைமையில் 112 மாணவர்களுக்கு ஒவ்வொரு மாணவருக்கும் ரூபாய் 500 மதிப்புடைய கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது. அஞ்சாதே ஹெல்பிங் ஹேண்ட்ஸ் பவுண்டேஷன் சார்பாக மயில்வாணன் பன்னீர்செல்வம், பிரதீபா ஆரிப் இக்பால் ,ஜெய கிருஷ்ணா ரெட்டி ஆகியோர் கல்வி சார்ந்த உபகரணங்களை வழங்கினார்கள். அஞ்சாதே ஹெல்பிங் ஹேண்ட்ஸ் பவுண்டேஷன் சார்பாக பேசிய மயில்வானன், பன்னீர்செல்வம், மற்றும் பிரதீபா அரவிந்தன் ஆகியோர் கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துரைத்து, கடந்த 5 ஆண்டுகளாக பல அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கு தேவையான கல்வி சார்ந்த உதவிகளை தங்கள் பவுண்டேஷன் செய்து வருவதாகவும், மாணவர்களும் நன்கு படித்து இவ்வாறே மற்றவர்களுக்கு உதவிட வேண்டும் என்றும் பேசினர்கள்.இந்நிகழ்ச்சியில் தலைமை ஏற்று பேசிய பள்ளி தலைமை ஆசிரியர் முனைவர் மு. பிரசன்னா அவர்கள் பள்ளி மாணவர்களுக்கு கல்வி சார்ந்த உதவிகளை செய்திட பலரும் தயாராக இருப்பதாகவும் மாணவர்கள் நன்கு படித்தால் இந்த உலகமே அவர்களுக்கு உதவிட முன்வரும் என்றும் பேசினார். முன்னதாக பட்டதாரி ஆசிரியர் முத்துக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார். முதுகலை வணிகவியல் ஆசிரியர் ஜனார்த்தனன் அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் ராமமூர்த்தி, ஆர்த்தீஸ்வரி ஜெயகாந்த், சீனிவாசன், அச்சுதன் ஆகியோர் கலந்து கொண்டனர். பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு அஞ்சாதே ஹெல்பிங் ஹேண்ட்ஸ் பவுண்டேஷன் சார்பில் பொதுத் தேர்வு எழுதும் அனைத்து மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர்
செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர்
திருவண்ணாமலை**

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### "காரில் ஸ்டாலின் படத்தை வைத்ததில் எந்த தவறுமில்லை" - ஓபிஎஸ் கருத்து



திமுகவில் இணைந்ததால் மு.க.ஸ்டாலின் புகைப்படத்தை தனது காரில் வைத்ததில் எந்த தவறுமில்லை என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

மதுரையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "நான் எந்தவித மனப்போராட்டத்திலும் இல்லை. மகிழ்ச்சியோடுதான் திமுகவில் இணைந்துள்ளேன். கழக நிர்வாகிகள் என்னை சகோதரனை போல் அன்போடு வரவேற்றனர். அனைத்து தரப்பு மக்களையும் சமநோக்கோடு வழி நடத்தி வருகிறார் மு.க.ஸ்டாலின். திமுகவில் இணைந்துள்ளதால் மு.க.ஸ்டாலின் புகைப்படத்தை எனது காரில் வைத்ததில் எந்த தவறுமில்லை. அதிமுக இந்த தேர்தலில் படுதோல்வி அடையும். முதல்வர் நிற்க சொல்லும் தொகுதியில் போட்டியிடுவேன். நானும், எனது ஆதரவாளர்களும் மு.க.ஸ்டாலின் கட்டளைப்படி நடப்போம். மு.க.ஸ்டாலின் தலைமையின் கீழ் எனக்கு என்ன பொறுப்பு கொடுக்கப்படுகிறதோ அதன்படி செயல்படுவேன். தேசிய ஜனநாயக கூட்டணி எத்தனை கூட்டம் நடத்தினாலும், தோல்வியை தான் தழுவும். அடித்தட்டு மக்கள் சமமாக வாழ வேண்டும் என்பதற்காக தன்னையே தந்தவர் பெரியார். அவரது புகைப்படத்தை அகற்றியது கடும் கண்டனத்துக்குரியது" இவ்வாறு அவர் கூறினார்.

### ஒரு பெண்மணியை கொள்கை தலைவராக ஏற்றுக்கொண்டவர் விஜய் - நாஞ்சில் சம்பத்

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் தவெக நிகழ்ச்சியில் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டார் அப்போது அவர் பேசியதாவது:- திமுக என்பது இன்று நவீன ரக ஒட்டுண்ணிகளின் கொள்ளிடம் ஆக மாறிவருகிறது. கட்சிக்கு காலம் காலமாக உழைத்தவர்கள் எல்லாம் இன்று கசக்கி எறியப்படுகிறார்கள். எங்கிருந்தோ வந்தவர்களுக்கு எல்லாம் மகுடம் சூட்டப்படுகிறது. இத்தனை பேரை திமுகவில் சேர்த்துகொண்டால் நான் திமுக தோழர்களை பார்த்து கேட்கிறேன் இதற்கு பெயர்தான் திமுகவா? முதலில் திமுகவை அதிமுக-2 என்று போட்டுக் கொள்ளுங்கள். திமுக ஒரு அதிமுக வாக மாறிவிட்டது. சிவகங்கையில் ராணி வேலுநாச்சியார் சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி விட்டு மேடைக்கு சென்றேன். தமிழ்நாட்டில் அரசியல் வரலாற்றில் முதல்முறையாக கொள்கை தலைவராக ராணி வேலு நாச்சியாரை கொண்ட தலைவர் விஜய் தான். எங்கள் தலைவர் விஜய் வேலுநாச்சியாரை பற்றி பேசிய பின்பு தான் நாட்டில் உள்ள அனைவருக்கும் தெரிகிறது. முதல்வர் முக. ஸ்டாலின் கூட மதுரையில் ஒரு மேம்பாலத்திற்கு ராணி வேலு நாச்சியார் மேம்பாலம் என்று பெயரிட்டுள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

### திமுக உடன் பேரம் பேசும் கட்சி நாங்கள் இல்லை: திருமாவளவன்



திமுகவுடன் தொகுதிப்பங்கீடு பேச்சுவார்த்தைக்கு பின் அண்ணா அறிவாலயத்தில் விசிக தலைவர் திருமாவளவன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- திமுக உடன் பேரம் பேசும் கட்சியாக நாங்கள் இருக்கமாட்டோம். தொகுதிப் பங்கீடு எங்கள் வலிமைக்கு ஏற்ப அமைய வேண்டும் என தெரியப்படுத்தினோம். எங்கள் கருத்துகளை கேட்டுக்கொண்டார்கள்; பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்தது. புதுச்சேரியிலும் போட்டியிட வேண்டுமென கேட்டுள்ளோம். எந்தெந்த தொகுதிகள் என்பது குறித்து திமுகவிடம் பேசவில்லைல் எண்ணிக்கை முடிவான பிறகே தொகுதிகளின் நிலவரம் குறித்து முழுமையாக தெரியவரும்.

ஆட்சியில் பங்கு; அதிகாரத்தில் பங்கு என்ற முழக்கத்தை முதலில் வைத்தது விசிகதான். அந்த நிலைப்பாட்டில் இன்றும் உறுதியாக இருக்கிறோம். ஆனால் ஆட்சியில் பங்கு என்பதற்கான சூழல் தமிழ்நாட்டில் இன்னும் கனியவில்லை. ஆகவே நாங்கள் இந்த கோரிக்கையை இன்றைக்கு வைக்கவில்லை. காங்கிரசின் நிலைப்பாடு குறித்து நான் கருத்து சொல்வதற்கு எதுவும் இல்லை. நாங்கள் அனைவரும் ஒரே கூட்டணியில் இருந்தாலும், ஒவ்வொரு கட்சிகளும் தனித்தனியாக கோரிக்கைகள் வைத்துள்ளன. ஒவ்வொரு கட்சிக்கு தனித்துவமான வலிமை இருக்கிறது; பாரம்பரியம் இருக்கிறது. பேச்சுவார்த்தையில் இழுபறி இருந்தாலும் காங்கிரஸ் கட்சி திமுக கூட்டணியில்தான் இருக்கும். இந்த கூட்டணி கட்டுக்கோப்பாக தேர்தலை சந்திக்கும். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தமிழ்நாட்டிற்கு எத்தனை முறை வந்தாலும் பிரதமர் மோடியின் வித்தை எடுபடாது. தமிழ்நாடு வேறு இருந்தியாவில் இருக்கின்ற பிற மாநிலங்கள் வேறு; நடக்கவிருப்பது வழக்கமான, சராசரியான தேர்தல் அல்ல; வலதுசாரிகளை காலூன்ற விடக்கூடாது என்பதற்கான தேர்தலாக இது இருக்கும். அதற்காக அமைக்கப்பட்ட கூட்டணிதான் இது. 2026 தேர்தலில் பாஜகவுக்கு தமிழ்நாட்டு மக்கள் பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## "காங்கிரஸுக்கு 25 தொகுதிகள் ஏற்புடையதல்ல" - கிரிஷ் சோடங்கர்



"திமுக எங்களுக்கு 25 தொகுதிகளை ஒதுக்க முன்வந்துள்ளது. ஆனால், அது எங்களுக்கு ஏற்புடையதாக இல்லை. எங்களது தேவையை அவர்களிடம் தெளிவாகத் தெரிவித்துள்ளோம்" என்று தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டெல்லியில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தொகுதிப் பங்கீடு தொடர்பாக எங்களது குழுவினரும், திமுக குழுவினரும் சுமார் ஒரு மணி நேரம் விரிவாக ஆலோசனைகளை நடத்தினோம். நாங்கள் சமர்ப்பித்த விருப்பப் பட்டியலை திமுக ஏற்கும் என்று நம்புகிறோம். அவர்கள் எங்களுக்கு 25 தொகுதிகளை ஒதுக்க முன்வந்தார்கள், ஆனால் அது எங்களுக்கு ஏற்புடையதாக இல்லை. எங்களது தேவையை அவர்களிடம் தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

தவெக ஒரு புதிய கட்சி. அவர்களை நாம் குறைத்து மதிப்பிடமுடியாது. இளைஞர்களிடையே அவர்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. அதேபோல தமிழகத்தில் காங்கிரஸின் வலிமையையும், எங்கள் தலைவர் ராகுல் காந்தியின் செல்வாக்கையும் அவர்களும் அங்கீகரித்து வருகிறார்கள்.

தற்போதைய நிலையில் திமுக-வுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்தத்தேர்தலில் எங்களுக்கு என்னவேண்டும் என்பது குறித்த விருப்பப் பட்டியலை ஏற்கெனவே அவர்களிடம் சமர்ப்பித்துவிட்டோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஓபிஎஸ் வீட்டு கதவில் இருந்த இரட்டை இலைச் சின்னம் வெட்டி அகற்றம்



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்ததைத் தொடர்ந்து பெரியகுளத்தில் உள்ள அவரது வீட்டின் இரும்புக் கதவில் பொருத்தப்பட்டிருந்த ஜெயலலிதா உருவப் படம், இரட்டை இலை சின்னம் ஆகியவை இயந்திரம் மூலம் வெட்டி அகற்றப்பட்டன.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், கடந்த 27-ம் தேதி தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். பின்னர் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அவருடன் அவரது மகனும் முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத், உசிலம்பட்டி எம்எல்ஏ ஐயப்பன் உள்ளிட்ட ஆதரவாளர்களும் திமுகவில் இணைந்தனர்.

இதைத் தொடர்ந்து தேனி மாவட்டம் பெரியகுளத்தில் உள்ள அவரது வீட்டிலும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. முகப்பு இரும்புக் கதவில் பொருத்தப்பட்டு இருந்த ஜெயலலிதா படம், இரட்டை இலைச் சின்னம் உள்ளிட்டவை வெட்டி எடுக்கப்பட்டன.

வீட்டின் முகப்பில் கருப்பு, சிவப்பு, வெள்ளை வண்ணமும் மாற்றப்பட்டது. திமுகவில் இணைந்த பிறகு முதல்முறையாக நேற்று மாலை தனது சொந்த மாவட்டத்துக்கு ஓ.பன்னீர்செல்வம் வந்தார்.

அவருக்கு மாவட்ட எல்லையான ஆண்டிபட்டி கணவாய், ஆண்டிபட்டி, க.விலக்கு, தேனி, போடி உள்ளிட்ட பல பகுதிகளிலும் மேளதாளம் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

## திமுக - விடுதலைச் சிறுத்தைகள் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை



சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி திமுக - விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகள் இடையே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திங்கள்கிழமை நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் விசிக தலைவர் திருமாவளவன், பொதுச்செயலர் ரவிக்கோர் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். கடந்தமுறை 6 தொகுதிகளில் போட்டியிட்ட விசிக இம்முறை இரட்டை இலக்க தொகுதிகளை கேட்டுப் பெற உள்ளதாக கூறப்படுகிறது. மேலும் பேச்சுவார்த்தையின்போது கடந்த தேர்தலில் வெற்றி பெற்ற 4 தொகுதிகள் உள்பட 20 தொகுதிகளின் பட்டியலை விசிக வழங்கவுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ள நிலையில் கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதிப் பங்கீடு என கட்சிகளின் தேர்தல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஏற்கெனவே தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தையை தொடங்கிவிட்ட திமுக, கூட்டணியில் உள்ள இரண்டு கட்சிகளுக்கு தொகுதிகளையும் ஒதுக்கிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழக ரயில்வே திட்டங்களுக்கு நிதி 9 மடங்காக அதிகரிப்பு: மதுரையில் பிரதமர் மோடி தகவல்





தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் ரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு 9 மடங்கு அதிகரித்துள்ளது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் - புதுச்சேரி நான்கு வழிச்சாலை, பரமக்குடி - ராமநாதபுரம் நான்கு வழிச்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, பொம்மிடி, காரைக்குடி, மணப்பாறை, மொரப்பூர், பொள்ளாச்சி, சோழவந்தான், ஸ்ரீவில்லித்புத்தூர், திருவாரூரில் மறுசீரமைக்கப்பட்ட ரயில் நிலையங்கள் திறப்பு விழா, சென்னை கடற்கரை-எழும்பூர் 4-வது ரயில் வழித்திட்டத்தை நாட்டுக்கு அர்பணிக்கும் விழா ஆகியவை மதுரையில் நேற்று நடைபெற்றது.

இத்திட்டங்களைத் தொடங்கிவைத்து பிரதமர் பேசியதாவது: புனிதமான மதுரை மாநகருக்கு வருவதை பெரும் கவுரவமாக கருதுகிறேன். மதுரையை ஆட்சி செய்யும் மீனாட்சி அம்மனுக்கும், சுந்தரேசுவரருக்கும் தலை வணங்குகிறேன். இந்த விழா தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கியமானது. ரூ.4,500 கோடி மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன். கடந்த 12 ஆண்டுகளாக தமிழக நெடுஞ்சாலை வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கி வருகிறது. தமிழகத்தில் 2014-ம் ஆண்டிலிருந்து தற்போது வரை 4,000 கி.மீ. தூரத்துக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று 2 பெரிய தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மரக்காணம் - புதுச்சேரி நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.2,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் தமிழ்நாடு - புதுச்சேரி கடற்கரைப் பகுதியில் சுற்றுலா, வர்த்தகம், பொருளாதாரம் மேம்படும். பரமக்குடி - ராமநாதபுரம் நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.1,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையால் ராமேசுவரத்துக்கு புனிதப் பயணம் மேற்கொள்வோர், விவசாயிகள், கடல்சார் பொருட்களின் போக்குவரத்து மேம்படும். தமிழக ரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்த பின்பு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை நிதி ஒதுக்கீடு ரூ.880 கோடியாக இருந்தது.

2026- 2027-ம் நிதியாண்டில் ரூ.7,600 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் 1,300 கி.மீ. புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 97 சதவீத மின்மயமாக்கல் பணிகள் முடிவடைந்துள்ளன. கடந்த ஆண்டு பாம்பன் புதிய ரயில் பாலம் திறக்கப்பட்டது. தமிழகத்தில் தற்போது 9 வந்தே பாரத், 9 அம்ரித் பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களின் பெட்டிகள் சென்னையில் தயாரிக்கப்படுகின்றன. இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். அம்ரித் திட்டத்தில் 77 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப்படுகின்றன. கும்பகோணம், ஏற்காடு, வேலூர் ஆகாசவாணி புதிய பண்பலை நிலையங்கள் மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. தமிழக உள் கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு 3 மடங்கு அதிகரித்துள்ளது. 2026 மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்றார்.

## அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்: இபிஎஸ் நம்பிக்கை



தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிக தொகுதிகளில் வெற்றிபெற்று அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

மதுரையில் நேற்று நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசியதாவது: தமிழகத்தில் உள்ள மக்கள் விரோத ஆட்சியை அகற்றவே தேசிய ஜனநாயக கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

எங்கள் கூட்டணியில் மக்கள் செல்வாக்குப் பெற்ற கட்சிகள் இணைந்துள்ளன. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு தென் மாவட்ட மக்கள் பக்கபலமாக இருந்தனர். எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது திண்டுக்கல் மக்கள வைத் தேர்தலில் வெற்றியைக் கொடுத்து தென் மாவட்ட மக்கள் ஆதரித்தனர்.

அதுபோல், வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் அதிக தொகுதிகளில் வெற்றிபெறச் செய்து அதிமுக ஆட்சி அமைவதற்கு தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள். மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று முதல்வர் ஸ்டாலின் அடிக்கடி அவதூறுகளைப் பரப்புகிறார். இன்று கூட தமிழகத்துக்கு ரூ.4,500 கோடி வளர்ச்சித் திட்டங்களை மோடி தொடங்கி வைத்துள்ளார்.

குடும்ப நலன் மட்டுமே திமுக கட்சியின் நிலைப்பாடாக உள்ளது. 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் செய்தனர்.

சர்க்காரிய கமிஷன் அறிக்கையில் திமுக விஞ்ஞான முறையில் ஊழல் செய்ததாக குறிப்பிட்டுள்ளனர். கடந்த 5 ஆண்டு கால ஊழல் நிறைந்த திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும்.

தென் மாவட்டங்களுக்கு அதிமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டன. திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக் கல்லூரியைக்கூட பெற முடியவில்லை.

அதிமுக ஆட்சியில் இருந்த போதுதான் 'எய்ம்ஸ்' மருத்துவமனை திட்டம் மதுரைக்குக் கொண்டு வரப்பட்டது. தற்போது இந்த மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த மருத்துவமனையை வரவிடாமல் திமுக தடுக்க பார்த்தது. மதுரை விமான நிலைய விரிவாக்கத்துக்கு அதிமுக ஆட்சியில் 'அண்டர் பாஸ்' முறையில் முயற்சிகளைச் செய்தோம். தற்போது இந்த திட்டத்தையும் திமுக அரசு முடக்கி வைத்துள்ளது.

## கேட்டது.. 12, கொடுப்பது.. 4: திமுக கூட்டணியில் மதிமுக அதிருப்தி

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலிலும் திமுக கூட்டணியில் மதிமுக தொடரும் நிலையில், இந்த முறை 12 தொகுதிகள், ஒரு ராஜ்ய சபா சீட் வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. மேலும், பம்பரம் சின்னத்தில்தான் போட்டியிடுவோம் என்றும் கூறியது.

ஆனால், திமுக தலைமையோ, தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்கு வந்த மதிமுக நிர்வாகிகளிடம், ராஜ்ய சபா சீட் தரமுடியாது என்று மறுத்த அதே நேரத்தில், 12 தொகுதிகள் எல்லாம் கொடுக்க முடியாது, திமுகவின் சின்னமான உதயசூரியனில் போட்டியிட்டால் 4 தொகுதிகள், வேறு சின்னத்தில் போட்டியிட முடிவு செய்தால் 3 தொகுதிகள் கறாராக கூறிவிட்டது.

இதனால், அதிர்ச்சியடைந்த வைகோ, கடந்த சனிக்கிழமை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை சென்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து பேசி, தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

என்றாலும், திமுக தலைமை மதிமுகவின் கோரிக்கைக்கு அசைந்து கொடுக்கவில்லை. இதனால், திமுக கூட்டணியில் மதிமுக அதிருப்தியுடனேயே தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

## 38 அடி உயரம், 65 டன் எடையுடைய ஐம்பொன்னாலான அம்மன் சிலை - கும்பகோணத்தில் வடிவமைப்பு



**கும்பகோணம், மார்ச் 3:**

சேலம் பனைமரத்துப்பட்டியில் உள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்காக, கும்பகோணம் அருகேயுள்ள சத்திரம் கருப்பூரில் வடிவமைக்கப்பட்ட 38 அடி உயரம், 65 டன் எடையுடைய ஐம்பொன்னாலான ஆதி பராசக்தி அம்மன் சிலை நேற்று டாரஸ் லாரியில் அனுப்பிவைக்கப்பட்டது.

சேலம் மாவட்டம் பனைமரத் துப்பட்டியில் உள்ள பழமையான ஆதிபராசக்தி கோயில் முகப்பில் பிரதிஷ்டை செய்வதற்காக, 65 டன் எடை, 38 அடி உயரம் உடைய ஐம்பொன்னால் ஆன சிலை வடிவமைக்கும் பணி கும்பகோணம் வட்டம் சத்திரம் கருப்பூரில உள்ள தரணி மெட்டல்ஸ் அண்ட் ஆர்ட்ஸ் நிறுவனத்திடம் 2016-ம் ஆண்டு வழங்கப்பட்டது. இதையடுத்து, ஸ்தபதி கோபு தலைமையில் 30-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த 10 ஆண்டுகளாக சிலையை வடிவமைத்தனர். இப்பணி நிறைவடைந்ததையொட்டி, நேற்று காலை 3 ராட்சத கிரேன்கள் மூலம் டாரஸ் லாரியில் 38 அடி உயர சிலை ஏற்றப்பட்டு, சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, மேளதாளங்கள் முழங்க விமரிசையாக அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த சிலை நாளை (மார்ச் 1) அந்த கோயிலுக்கு சென்றடைகிறது. இதுதொடர்பாக சிலையை வடிவமைத்த ஸ்தபதி கோபு கூறியபோது, "ஐம்பொன்னால் வடிவமைக்கப்பட்ட 65 டன் எடையுடைய ஆதிபராசக்தி அம்மன் சிலையின் மதிப்பு ரூ.10 கோடி. பனைமரத்துப்பட்டி கோயிலில் 13 அடி கருங்கல் பீடம் கட்டப்பட்டு, அதன் மீது இந்த சிலை விரைவில் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது" என்றார்.

## பிரதமரை வரவேற்க வராத முதல்வர்: தமிழிசை கண்டனம்

**சென்னை, மார்ச் 3:**

பாஜக மூத்த தலைவர் தமிழிசை எக்ஸ் தள பதிவில் கூறியது: தமிழகத்தின் வளர்ச்சிக்கு வலுசேர்க்கும் வகையில், சுமார் ரூ.7 ஆயிரம் கோடி மதிப்பிலான மக்கள் நலத்திட்டங்களை அர்ப்பணிக்க வந்த பிரதமரை ஒட்டுமொத்த தமிழகமும் உற்சாகத்தோடு வரவேற்கிறது.

ஆனால், முதல்வர் பின்பற்றுவது எந்த வகையான கலாச்சாரம்? முதல்வர் நகருக்குள் இருந்தும் பிரதமரை வரவேற்கச் செல்லவில்லை. தமிழக வளர்ச்சித் திட்டங்களை வழங்க வந்த பிரதமரை, முதல்வர் வரவேற்காமல் இருப்பது கண்டிக்கத்தக்கது தமிழகத்துக்கு திட்டங்களை பிரதமர் நேரடியாகத் தொடங்கிவைக்கும்போது, அதற்கு என்னபதில் சொல்வது என்று தெரியாமல்தான் முதல்வர் இந்த விழாவைத் தவிர்க்கிறாரா? இவ்வாறு கூறியுள்ளார்.

# 2026 ஆண்டின் முதல் சந்திர கிரகணம்; இன்று திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 10 மணி நேரம் நடை அடைப்பு..!

**திருப்பதி, மார்ச் 3:**

*2026ஆம் ஆண்டின் முதல் சந்திர கிரகணம் (மார்ச் 03-ஆம் தேதி) நிகழவுள்ளது. அன்று பிற்பகல் 03.20 மணி முதல் மாலை 06.47 மணி வரை சுமார் மூன்றரை மணி நேரம் நீடிக்கும். இதன் காரணமாக திருப்பதி ஏழுமலையான் கோயிலில் அன்றைய தினம் 10 மணி நேரம் நடை அடைக்கப்படும் என்று தேவஸ்தானம் அறிவித்துள்ளது.*

*பொதுவாக திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 06 மணி நேரத்திற்கு முன் நடை அடைப்பது வழக்கம்.*



*அதன்படி, 03-ஆம் தேதி காலை 09 மணி முதல் இரவு 07.30 மணி வரை ஏழுமலையான் கோயில் நடை அடைக்கப்படவுள்ளது. பின்னர் இரவு 08.30 மணிக்கு பிறகு, கோயில் தூய்மை செய்யப்பட்டு பக்தர்கள் வழக்கம் போல் சுவாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன் காரணமாக, (03-ஆம் தேதிகளில்) சுவாமி தரிசனத்திற்காக திருப்பதியில் வழங்கப்படும் சர்வ தரிசனத்தில், நேர ஒதுக்கீடு செய்து வழங்கப்படும் டோக்கன்கள் வழங்கப்படாது என்று கூறப்பட்டுள்ளது.*

*பின்னர் வரும் 4-ஆம் தேதி சுவாமி தரிசனத்திற்கான சர்வ தரிசன டோக்கன்கள் 3-ஆம் தேதி முதல் வழக்கம்போல் வழங்கப்படும். அதேபோல், 3-ஆம் தேதி விஐபி தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று தேவஸ்தான செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# கும்பகோணம் வரதராஜ பெருமாள் கோயிலில் வரும் 10ம் தேதி வரை அத்திவரதரை தரிசனம் செய்யலாம்

**கும்பகோணம், மார்ச் 3:**

*தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வரதராஜ பெருமாள் கோயிலில் பாதாள அறையில் இருந்து 12 ஆண்டுகளுக்கு பிறகு வெளியே எடுக்கப்பட்ட ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதரை ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்தனர்.*

*கும்பகோணம் பிரம்மன் கோயில் தெருவில் உள்ள வரதராஜ பெருமாள் கோயிலில் மூலவர் சந்நிதிக்கு கிழக்கில் உள்ள பாதாள அறையில் அத்தி மரத்தாலான சுமார் ஒன்றரை அடி உயரம் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை வைக்கப்பட்டுள்ளது.*



*இந்தச் சிலையை 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியே எடுத்து பக்தர்களின் தரிசனத்துக்கு வைக்கப்படுவது வழக்கம். அதன்படி, 12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சிலை நேற்று முன் தினம் வெளியே எடுக்கப்பட்டு பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது.*

*இதற்காக நேற்று அதிகாலை 5 மணி முதல் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதரை தரிசனம் செய்தனர். இதில், தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, கேரளம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்களும் திரளாக வந்து தரிசனம் செய்தனர்.*

*வரும் 10-ம் தேதி வரை அத்திவரதரை தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த நாட்களில் தினமும் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் தைலக் காப்பு, புஷ்ப சேவை, ஊஞ்சல் சேவை நடைபெறும்.*


*கும்பகோணம் மேற்கு காவல் ஆய்வாளர் சிவக்குமார் தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீஸார் மற்றும் ஊர்க்காவல் படையினர் பாதுகாப்பு பணியிலும், மாநகராட்சி ஆணையர் காந்திராஜ் தலைமையில் 50-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் தூய்மை மற்றும் சுகாதார பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை சவுராஷ்டிரா தர்மபரிபாலன கமிட்டி நிர்வாகிகள் செய்துள்ளனர்.*

# மார்ச் 3-ல் சந்திரகிரகணம்: பழநி முருகன் கோயிலில் காலை 10.30 வரை மட்டுமே பக்தர்களுக்கு அனுமதி

**பழநி, மார்ச் 3:**

*மார்ச் 3-ம் தேதி சந்திரகிரகணத்தை முன்னிட்டு, பழநி முருகன் கோயிலில் காலை 10.30 மணி வரை மட்டுமே பக்தர்கள் அனுமதிக்கப்படுவர் என தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது.*

*வரும் மார்ச் 3-ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 3.30 மணி முதல் மாலை 6.47 மணி வரை சந்திரகிரகணம் நிகழ உள்ளது. எனவே, அன்றைய தினம் பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் பகல் 12 மணிக்கு உச்சிக்கால பூஜை நடைபெறும். பூஜை முடிந்ததும் மலைக்கோயிலில் அனைத்து சந்நிதிகளும் நடை சாத்தப்படும். அதனால், படிப்பாதை, யானைப்பாதை, வின்ச் ரயில் மற்றும் ரோப்காரில் வரும் பக்தர்கள் அன்றைய தினம் மலைக்கோயிலுக்கு காலை 10.30 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படுவர். சந்திரகிரகணம் முடிந்ததும் இரவு 7 மணிக்கு ஸம்ப்ரோச்சனை பூஜையை தொடர்ந்து, சாயரட்சை பூஜை நடைபெறும்.*



*பின்னர், தங்கரத புறப்பாடு மற்றும் அர்த்தஜாம பூஜை உடன் சந்நிதி அடைக்கப்படும்.*

*மார்ச். 4-ம் தேதி புதன்கிழமை விஸ்வரூப தரிசனம் உட்பட அனைத்து பூஜைகளும் நடைபெறும். வழக்கம் போல் பக்தர்களும் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவர் என தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது.*




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா நிறைவு

**ராமநாதபுரம், மார்ச் 3:**

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா நேற்று நிறைவடைந்தது. இங்கு நேற்று முன்தினம் மாலை கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. நெடுந்தீவு பங்குத் தந்தை பத்திநாதன்கொடியேற்றி வைத்தார். தொடர்ந்து, சிலுவைப் பாதை, திருப்பலி, தேர் பவனி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முக்கிய நிகழ்வாக நேற்று காலை கூட்டு திருப்பலி நடைபெற்றது. யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் ஜோசப் தாஸ் ஜெபரத்தினம், நெடுந்தீவு பங்குத்தந்தை பத்திநாதன், ராமேசுவரம் வேர்கோடு பங்குத் தந்தை தாமஸ் பரிபாலன் ஆகியோர் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் திருப்பலி நடத்தினர்.

இதில், இலங்கை கடற்படையின் வைஸ் அட்மிரல் மனகோடா,வடக்கு கட்டளை தளபதி கேப்டன் லியங்கமேகி, இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரி சாய் முரளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்தியாவிலிருந்து சென்ற 3,741 பேர், இலங்கையிலிருந்து சென்ற 9 ஆயிரம் பேர் என 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நேற்று காலை பக்தர்களுக்கு இலங்கை கடற்படை சார்பில் உணவு வழங்கப்பட்டது. பின்னர், இந்தியாவிலிருந்து சென்ற பக்தர்கள் நேற்று மாலை ராமேசுவரம் திரும்பினர்.

## 'கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதை அனுமதிக்க முடியாது'

**ராமநாதபுரம், மார்ச் 3:**

இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் செய்தியாளர்களிடம் கூறும்போது,

"கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது. இந்தியஇழுவைப்படகு மீனவர்கள் சிலர் சட்டவிரோதமாக செயல்படுவதால் கடல் வளம் அழிகிறது.

இதனால், இந்தியா மற்றும் இலங்கை நாட்டுப்படகு மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்திய இழுவைப் படகு உரிமையாளர்கள் தயவு செய்து கடல் வளத்தை அழிக்கும் வேலையை செய்ய வேண்டாம்.

கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதை அனுமதிக்க முடியாது. தமிழக அரசியல்வாதிகள் தேர்தல் நேரங்களில் கச்சத்தீவை அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றனர். இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா இந்தியா வந்திருந்தபோது, இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடியிடம் பேசியுள்ளார். மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்" என்றார்.

# இந்தியர்களின் உணவில் மாறுதலை செய்திருக்கும் புரதம்! நல்லதா? கெட்டதா?

கடந்த பத்தாண்டுகளில், இந்தியர்களின் உணவில் புரதம் என்பது மிகப்பெரிய மாறுதலை சந்தித்து வருகிறது. ஒருபக்கம் உடல் வலிமை,தசை வளர்ச்சிக்கும் என விளம்பரப்படுத்தப்பட்டாலும் மறுபக்கம் உடலுக்குத் தேவையான சத்தாகவும் புரதத்தின் மீது கவனம் குவிந்துள்ளது.

ஒரு சராசரி இந்தியர்களின் உணவில் பெரும்பாலும் புரதம் என்பதன் பங்கு இன்னமும் விவாதத்துக்குரியதாகவே உள்ளது. ஆனால் தற்போது அதிகரித்து வரும் விழிப்புணர்வு காரணமாக மக்கள் தங்களது உடல்நலனில் அக்கறை செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். அதில் புரதத்தின் பங்கும் அதிகரித்துள்ளது.

இந்தியர்களில் பெரும்பாலானோரின் உணவில் சரிவிகித புரதம் இன்னமும் குறைவாகவே இருக்கிறது என்றாலும், இது அதிகரிக்கும் என்ற நம்பிக்கையும் எழுகிறது.

அதாவது, இந்தியர்களின் உணவில் தானியங்கள் வழியாக அதாவது கோதுமை, அரிசி போன்றவற்றின் மூலம் மிகக் குறைந்த புரதமே சேர்கிறது.

இவை பருப்புகள், பால் பொருள்கள், கொட்டை வகைகள், முட்டைகள், விதைகளில் அதிகம் கிடைத்தாலும், அதனை இந்தியர்கள் எடுத்துக் கொள்வதும், நாள்தோறும் எடுத்துக் கொள்ளும் உணவில் இதன் பங்கும் கேள்விக்குறியாகவே உள்ளது.




இதுபற்றி மருத்துவர்கள் கூறுவது என்னவென்றால், அதிக வேலை நேரம், சத்தான உணவின்மை,மன அழுத்தம், உடல் சார்ந்த வேலைகள் இல்லாமல் இருப்பது போன்றவை இளம் தலைமுறையிடையே தலைசுற்றல், தசை வலுவிழத்தல், குணமடைதலில் தாமதம் போன்றவை ஏற்படுகின்றன. எனவே, உடல் வலிமை, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க, ஹார்மோன் சீராக செயல்பட புரதம் அவசியம்.

இதுவரை, பெரும்பாலான மக்கள் புரதத்தின் அளவில் கவனம் செலுத்தி வந்தனர், அதேவேளையில் புரதத்தின் தரம் உண்மையில் மிகவும் முக்கியம் என்கிறார்கள் மருத்துவர்கள்

எந்த அளவுக்கு புரதம் சாப்பிடுகிறோம் என்ற விழிப்புணர்வையும் தாண்டி, நுகர்வோர் எந்த வகையான' புரதத்தை உட்கொள்கிறார்கள் என்பது குறித்தும் அதிக கவனம் செலுத்தத் தொடங்க வேண்டும் என்கிறார்கள்.

அதாவது புரதம் என்பது இனி ஒரு இணை உணவு அல்லது உடற்பயிற்சிக்குப் பிந்தைய பானங்களுக்கானது என்று மட்டும் கட்டுப்படுத்தக்கூடாது.

இது காலை உணவு, மதிய உணவு, இடைவேளை சிற்றுண்டி மற்றும் வீட்டில் சமைக்கும் முக்கிய உணவுகளில் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டிய உணவாகும்.

பலரும் புரதம் என்பதை தனியாக ஏதோ ஒரு வகையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலிருந்து மாற வேண்டும்.

இது இந்தியர்களின் உணவு கலாசாரத்தில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தி அன்றாட உணவில் கட்டாயம் இடம்பெற வேண்டியது இயல்பானதாக மாற்றம் கொண்டு வர வேண்டும்.

எனவே, கடைகளில் புரதம் என்ற பெயரில் விளம்பரப்படுத்தப்படும் உணவுகளை மட்டும் வாங்கி சாப்பிடாமல், அன்றாட உணவில் சமைக்கும்போது புரதத்தை எவ்வாறு இயல்பாக சேர்த்துக்கொள்வது என்பதைத்தான் சிந்திக்க வேண்டும்.

மீண்டும் மீண்டும் விளம்பரங்களுக்கு விட்டில் பூச்சியாகக் கூடாது. புரதம் என்பது உணவு மூலமாக இயற்கையான வழியில் சேர்க்கப்பட்டு அது உடலுக்கு நலத்தை பயப்பது மட்டுமே இலக்காக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

# நகையோ நகை !

" ஏன்னா ! ஒரு வருஷமாவது நீங்க அட்சயத் திருதியை அன்னிக்கு பொட்டுத் தங்கம் வாங்கிக் கொடுத்திருக்கேளா ?" மூக்குறிஞ் சினாள் பத்மாசனி.

" அடி அசடே ! நான் என்னென்னிக்கு நகை வாங்கித் தந்திருக்கேனோ அன்னிக்கெல்லாம் அட்சயத் திருதி யைன்னுநெனைச்சிக்கோ !" என்று சமாதானம் செய்தான் மனைவியை சுந்தரம்.

" ஆமாம். பொல்லாத நகை வாங்கிக் கொடுத்துட்டேள். நானா சீட்டுல சேர் ந்து மாசா மாசம் பணம் கட்டி குருவி போல சேர்த்து தம்மாத்துண்டு மோதி ரம் வாங்கினேன்."

" ஏன்..நான் வாங்கித் தரல்லியா? போன வருஷம் நம் வெட்டிங் டேக்கு புதுசா ஒரு செட் வளையல் வாங்கிக் கொடுத்தேனே அத மறந்துட்டியா ? அதுக்கப்புறம் உன் பிறந்த நாளன் னிக்கு பிரேஸ்லேட் கேட்டேஅதுவும் வாங்கிக் கொடுத்தேன்.நான் எதுவும் வாங்கிக் கொடுக்காத மாதிரி பேசறே ?"

" இருங்க..வெட்டிங் டே வளையல் எப்படி வாங்கினது... உங்க மனசாட் சியக் கேட்டுப் பாருங்க. என்னோட உடைஞ்சு போன பழைய காசிகா மணி செயினைப் போட்டு வாங்கி னது. அதேமாதிரி பிரேஸ்லேட்டும் பழச போட்டு வாங்கினது. நீங்க ஒத்த ரூபா செலவு பண்ணல. என்னம்மோ நீங்க உங்கக் கைக்காச செலவு பண்ணி வாங்கிக் கொடுத்தாமாதிரி பீத்திக்கிறேள் ?"

" அடியே....எப்படி வாங்கினாலென்ன ? பொருள் உனக்குத் தானே !" அசடு வழிந்தான் சுந்தரம்.

" அதுக்குத்தான் இந்த வருஷம் அட்ஷயத்திருதியை அன்னிக்கு உங்கப் பணத்தில ஏதாவது நகை வாங்கிக் கொடுங்கன்னு கேட்கு றேன்.."

தலை கவிழ்ந்தவாறு சில




வினாடிகள் யோசித்தவன், " எந்த நகையா இருந்தாலும் பரவாயில்லயா ?" என அவளை குறு குறுவென்று பார்த்தபடி கேட்டான் சுந்தரம்.

பத்மாசனி முகத்தில் சந்தோஷம் பொங்கி வழிந்தது. பரவாயில்லை கணவன் இசைந்துவிட்டான். கணி சமான தொகையில் நல்ல காத்திர மான நகை வாங்கிவிட வேண்டியது தான் என ஆசை கொண்டாள்.

" ஏங்க ! ஜி.ஆர்.டி.க்கு புறப்படலாமா ?"

ஆவல் பொங்கக் கேட்டவளைக் இமைக்காமல் பார்த்த சுந்தரம், " டியர் ! பணம் கொஞ்சம் குறையறது. அவ்வளவு தூரம் போகணுமான்னு யோசிக்கிறேன் !"தன் தலையைச் சொரிந்தான்.

" சரி. நம்ம நகர்லயே சரவணா ஸ்டோர்ஸ் புதுசா ஒரு பிரான்ச் ஆரம்பிச்சிருக்காங்க அங்க போக லாமா ?" ஆர்வம் குன்றாமல் கேட் டாள் பத்மா.

" வேண்டாம். அபுபேக்கர் கடைக்குப் போவோம். அங்கப் போய் உனக்குத் தேவையானதை வாங்கிக்கலாம்."

" அபுபேக்கர் கடையா... அங்க நான் எதிர்பார்க்குற நகைங்க கிடைக் குமா ?"

"ம்..நிறைய வரைட்டிகள்.. பார்க்க பார்க்க பிரமாதமா இருக்கும் . அப் படியே அள்ளிக்கலாம். "

" நீங்க சொல்றது...." சந்தேகத்தில் இழுத்தாள் பத்மாசனி.

" யெஸ் டியர் ! பார்க்க ஒரிஜினல் கோல்டு நகைங்க போலவே இருக் கும். நீயே பார்த்துட்டு ஆச்சரியப்ப டுவே !"

" ஒரிஜினல் கோல்டு போலவே இருக்குமா? அப்படின்னா....." பத்மா சனி முகம் கோபத்தில் சிவந்தது.

" யெஸ் டியர் ! கோல்டு கவரிங் கடை. கூட்டமும் அவ்வளவா இருக்காது. உனக்கு ஆசையானத அள்ளிக் க....லா.....ம்...." அதற்குமேல் அங்கிரு க்காமல் நொடியில் காணாமல் போனான் சுந்தரம்.



**- வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# அம்மா.....



பேருந்து நிற்கவும் இறங்கிய செவ்வந்தி பிரதான சாலையில் வந்து கொண்டே அம்மா.. எப்படி இருக்காங்கன்னு தெரியல,போனதும் மறு வண்டி ஏறி வந்திடலாம் என எண்ணி மகன் வீட்டிற்கு வந்தாள் கோயிலுக்கு போகனும் அழைச்சுட்டு போய் வரவும் இரண்டு "நாளாக அம்மா என்ன பண்ணுதோ சாப்பாடு யாரும் கொடுத்தார்களா... தெரியலையே "என புலம்பிக் கொண்டே சந்தில் நுழைந்தால் வொவ்.....லொல்... என குறைத்துக் கொண்டே செவ்வந்தியை நோக்கி வந்தது "வாடா...பைரவா..... அம்மா எப்படி இருக்காங்க பாத்தியாடா.."எனக் கேட்டுக் கொண்டே இருளில் மெதுவா சென்றாள் குரலைக் கேட்டதும் பைரவன் வாலை ஆட்டிக் கொண்டே செவ்வந்தி பின்னால் சென்றது இருட்டினுள் மெதுவா சென்று வீட்டைப் பார்த்து கதவை தட்டினால் கதவு திறந்திருந்தது அக்கம் பக்கத்தினர் யாரும் இல்லை இரவு நேரம் பனிக்காலம் வேறு கதவை பூட்டி உள்ளே இருந்த தால் கூப்பிட்டாலும் யாரும் வருவதாக இல்லை மெதுவா வீட்டினுள் நுழைந்தவள் மூத்திர வாடையோடு ஏதோ கவுச்சியும் சேர்ந்து இவளுக்கு குமட்டல் வருவது போல் இருக்க, அடுப்படியில் தீப்பெட்டியை தேடி எடுத்து தீ குச்சியை பொருதினாள் இருளை விரட்டிய தீக்குச்சியின் தீச்சுடர் சுற்றும் வெளிச்சம் பரவியது அந்த வெளிச்சத்திலேயே சிமிழி விளக்கைத் தேடிய போது தீக்குச்சியில் இருந்த தீச் சுடர் அணைந்து போனது மறுபடியும் தீக்குச்சியை எடுத்து பொருதினாள் அந்த தீச்சுடரிலேயே சுவரோமாய் இருந்த விளக்கை எடுத்து கண்ணாடி குடுவையை கழட்டி குச்சியில் இருந்த தீயை திரியில் வைத்தாள் செவ்வந்தி .

அந்த சிறிய அறையில் பளீரென வெளிச்சம் பரவிட அங்கும் இங்குமாக எலிகள் ஓடிக் கொண்டன அப்போது தான் கீழே பார்த்தாள் அதிர்ச்சியானாள் மண்டையில் அடிபட்டு இரத்தம் கசிந்திருந்த நிலையில் அம்மா அலங்கோலமாய் கிடந்தாள். அம்...மா... என கதறினாள் செவ்வந்தி அம்மா இருந்த இடத்தைச் சுற்றி எறும்புகள் பல்லி கசிந்திருந்த இரத்தத்திலும், உடலிலும் ஊர்ந்து கொண்டிருந்தன அம்மா..இருந்த நிலையைப் பார்த்ததும் அழுகை பீரிட்டு வர "அம்மா..எட்டுப் பிள்ளை பெத்து எட்டுத் திக்கும் அனுப்பி வச்சியே அம்மா... யாருமில்லாத அனாதை மாதிரி கிடக்கியே.... அம்மா...ன்னு ஆசை ஆசையாய் பிள்ளைகளைப் பெத்து வளர்த்து அதிகாரம் பண்ணாம அவங்க அவங்க நல்லா இருக்கனும்னு தன்னந்தனியா எறும்புகள் கூட்டத்திலும் எலி,பல்லி களிடத்திலும் சித்திரவதைகள் பட்டு இருக்கியே.. அம்மா..."

அழுதுகொண்டே அம்மாவை தூக்கினாள் மெதுவா துடித்துக் கொண்டு இருந்த ஆன்மாவும் வெளியேறி அறையில் குழுமி இருந்த வெளிச்சத்துடன் கலந்தது.

**நல.ஞானபண்டிதன்**

# அகத்தியனின் பயணம் 12



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

## பதிலென்னச் சொன்னாலும் பரவாயில்லை.

அகத்தியன் உட்கார்ந்தவுடன் "வாங்க சார்" என்று எழுந்தாள்.

"உட்காரும்மா." அகத்தியன் தன்னடக்கத்தோடு பதில் சொன்னான்.

எழிலழகிதான் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்தவள். "உங்களுக்கு என்ன வேணுமோ அத சொல்லுங்க சார்" என்றாள் எழிலழகி.

"உங்களுக்குப் பிடிச்சது சொல்லுங்க சார்" என்று மீண்டும் உரிமையோடு சொன்னாள்.

"நீங்க என்ன சாப்பிடுறீங்களோ அதையே சொல்லுமா" என்றான் அகத்தியன்.

உடனே அந்த அறையைக் கவனிக்க கூடியவர் உள்ளே நுழைந்து "என்ன சார் வேண்டும்" என்று அகத்தியனை கேட்டார்.

எழிலழகி இடையில் தலையிட்டு "மூணு காபி" என்றாள்.

வந்தவன் அறையைத் தாழட்டுவிட்டு வெளியே சென்றான். அறைமுழுவதும் அமைதி நிலவியது. இசையழகி அகத்தியன் முகத்தைப் பார்க்காமல் எழிலழகியின் முகத்தை உற்றுப்பார்த்தாள்.

எழிலழகி இசையழகியின் முகத்தைப் பார்த்து "பயப்படாதே. நான் சொல்கிறேன்னு"ன்னு சிரித்து பேச்சை ஆரம்பித்தாள்.

மெல்ல இசையழகியின் முகம் இருக்கமானது. எழிலழகி மேசையின் மீது இருந்த தேநீரைக் கையில் எடுத்துச் ஒரு உறிஞ்சு உறிஞ்சிவிட்டு "சார் நான் உன்கிட்ட தனியா பேசணும்னு சொன்னேன் இல்லையா, இப்ப பேசட்டுமா" என்று உரிமையோடு அகத்தியனை கேட்டாள்.

"ஆனா ஒரு கண்டிஷன் சார். நான் எதைச் சொன்னாலும் தப்பா எடுத்துக்க கூடாது. அது சரியா, தப்பான்னு உங்க முடிவ சொல்லிட்டா, அந்த முடிவை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆனா பெரிசு படுத்தவேண்டாம்" என்று சொல்ல,

ஏதோ ஒன்றைச் சொல்லப்போகிறார்கள் என்ற மன நிலையில் இசையழகியின் முகம்பார்த்துப், எழிலழகியிடம் "சொல்லுங்க" என்று சொன்னான் அகத்தியன்.

எப்படி சொல்வது என்று எழிலழகி தவித்துக்கொண்டிருந்தாள். சொல்லியே ஆக வேண்டும் என்ற முடிவில்,

எழிலழகி பேச ஆரம்பித்ததும், இசையழகியின் முகத்தில் வேர்வைத் துளிகள் கொட்ட ஆரம்பித்தது. இசையழகியின் மனது படபட என அடிக்கத் தொடங்கியது. இசையழகி மெல்லக் கண்களை மூடினாள். தேநீர் சூடாக இருந்தது. அவள் முகத்தில் வியர்வை துளிகள் முத்துக்களைப் போல வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. அவர்கள் உட்கார்ந்திருந்த அறையில் குளிர்சாதனப்பெட்டியில் குளிர் அதிகமாகவே இருந்தது.

"நீங்க எப்படி எடுத்துட்டாலும் பரவால்ல சார். ஆனா நான் முடிவு பண்ணிட்டேன் சார்" என்றாள் எழிலழகி.



"சார் இன்னிக்கு ஏன் தேர்ந்தெடுத்தன் தெரியுமா.? இன்னைக்கு இசையழகியோட பிறந்தநாள். இசையழகிக்கு அம்மா இல்ல சார். அவங்க சித்தியோட ஆதரவில்தான் வாழறா. அவளோட அப்பக் குடிகாரர். ஆனா இசையழகி நல்லா படிச்சிருக்கா. அவ அழகானவளும் கூட. நீங்க இங்க வந்து வேலைக்குச் சேர்ந்த அன்னைக்குதான் அவளும் வேலைக்குச் சேர்ந்தா. உங்களப் பார்த்து முதல் பார்வையிலேயே அவளுக்கு உங்களைப் பிடிச்சு போச்சு." அமைதியானாள்

"அவளோட தோழியிங்குறதுனால என்கிட்ட அந்த ஆசையை வெளிப்படையா சொல்லிட்டா. அத எப்படி உங்ககிட்ட சொல்றதுன்னு யோசிச்சிட்டு இருந்தா. அவளுடைய பிறந்தநாள் எனக்கு நல்லா தெரியும். அவளுடைய பிறந்தநாளில், அவளுடைய காதல, சொல்லி இருக்கேன்." என நிதானமாகப் பேசினாள் எழிலழகி.

"அவ சொல்ல வேணாமுன்னு என்கிட்ட கேட்டுகிட்டா. ஆனா நான்தான் இந்த நாள தேர்ந்தெடுத்தன். இப்பதான் ஒரு வாரம் ஆகுது கம்பெனி திறந்து. அதுக்குள்ளே இது மாதிரி இருந்தா கஷ்டமா இருக்கும். இரண்டு பேருக்கும் கஷ்டமா இருக்கும் என என்கிட்ட வற்புறுத்திக் கேட்டுகிட்டா. நான் எடுத்த முடிவுதான்.

உங்கள முதல் நாள் பார்ததிலிருந்து ஒவ்வொரு நாளும் உங்களைப் பற்றிப் பேசிகிட்டேயிருப்பா. உங்கள் நினைவாகவே வாழ்ந்துகிட்டேயிருக்கா. உங்களையே அவள் நினைத்து நினைத்து காலம் கடத்துரா. மனசுக்குள்ள பூட்டி வச்சுக்கிட்டு எவ்வளவு காலம் இருக்க முடியும். அதனால்தான் சார், அவ உங்களைக் காதலிக்கிறா'ங்கிறத உங்க காதுல நான் போட்டு, வெட்ட வெளிச்சமா உங்களிடம் சொல்லிட்டேன். நீங்கதான் முடிவு எடுக்கணும் சார்." எழிலழகி படபட என பேசி முடித்தாள்.

எழிலழகியின் பேச்சை அகத்தியன் கேட்டுக்கொண்டே தேநீரைக் குடித்தான்.

கையில் இருந்த தேநீரை உறிஞ்சிக்கொண்டே எழிலழகியை உற்றுப் பார்த்தான். அகத்தியன் பார்வை எழிலழகிக்கு புரியவில்லை.

இந்த உரையாடல் நடந்து கொண்டிருக்கும் பொழுதே இசையழகி மெல்ல தெளிவடைகிறாள். பதட்டம் குறைகிறது. முகத்தில் உள்ள வியர்வைத் துளிகளைத் தனதுகைக்குட்டையாள் துடைத்துக்கொள்கிறாள்.

தனக்கு எதிரில் இருந்த குவளையில் உள்ள தேனீரை கையில் எடுக்கிறாள். சரியாக உட்கார்ந்துகொண்டு ஒரு உறிஞ்சு உறிஞ்சுகிறாள்.

(தொடரும்)

# மாசி மகம் சிறப்பு

மாசிமகம் தினத்தில் நிகழ்வுற்றதாக புராணங்கள் கூறும் சில சம்பவங்கள் !



மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திருக்குறுக்கை வீரட்டானேஸ்வரத்தில் மாசி மகத்தன்று காம தகனவிழா நடைபெறும். சிவபெருமான் ஆழ்ந்த தியானத் திலிருக் கும்போது தேவர்களின் வேண்டுகோளின் படி சிவபெருமான் மீது மலரம்பு எய்தான் மன்மதன். கோபம் கொண்ட அவரின் நெற்றிக் கண்ணிலிருந்து புறப்பட்ட தீப்பொறிகள் மன்மதனை எரித்து சாம்பலாக்கியது. பிறகு அவன் மனைவி ரதிதேவியின் வேண்டுதலால், மீண்டும் மன்மதன் அவள் கண்களுக்கு மட்டும் தெரியும் படி சிவபெருமான் அருளினார். இந்த நிகழ்வை நினைவுபடுத்தும் விழாவாக காம தகனவிழா மாசிமகத்தன்று நடைபெறும். இரண்யன் என்ற அசுரன் பூமாதேவியைக் கடத்திச் சென்று பாதாள லோகத்தில் ஒளித்து வைத்தான்.

இதனை அறிந்த மகாவிஷ்ணு, வராக அவதாரம் எடுத்து பாதாள லோகம் சென்று அந்த அசுரனை வதம் செய்து, பூமாதேவியை வெளிக்கொணர்ந்தது மாசி மக நட்சத்திரத் திருநாளில்தான் என்று விஷ்ணு புராணம் கூறும். கன்னிப் பெண்ணான குந்திதேவி, சூரிய பகவானை நேரில் வரவழைக்கும் மந்திரத்தை உச்சரித்ததால், சூரிய பகவான் அவள்முன் தோன்றினார். அதன் விளைவால் குந்திதேவி குழந்தை பெற்றாள்.

பழிச்சொல்லுக்கு அஞ்சி அந்தக் குழந்தையை (கர்ணன்) ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டாள். அந்தப் பாவம் அவளை வாட்டியது. அதற்குப் பிராயச்சித் தம் செய்ய வேண்டி, உரோமச முனிவரை ச் சந்தித்தாள். அவர், "மாசி மக நட்சத்திரத்தன்று ஏழு கடல்களில் ஒரே சமயத்தில் நீராடினால் உன் பாவம் நீங்கும்' என்று சொன்னார். "அது எப்படி ஒரே நாளில் ஏழு கடல்களில் நீராட முடியும்?' என்று பலத்த யோசனை யில் ஆழ்ந்த குந்திதேவி, வழி காட்டியருளுமாறு இறைவனை இறைஞ்சினாள்.

அப்போது, "திருநல்லூர் கோவிலுக்குப் பின்புறம் ஒரு தீர்த்தம் உள்ளது. அதை ஏழு கடலாக நினைத்து மாசி மகத்தன்று நீராடு வாயாக' என்று அசரீரி ஒலித்தது.

குந்திதேவியும் அப்படியே செய்து தன் பாவத்திலிருந்து விடு பட்டாள். அவள் நீராடிய தீர்த்தம்- சப்த சாகர தீர்த்தம் என்று அழைக்கப் படுகிறது.

தட்சன், சிவபெருமானை நோக்கி பல வருடங்கள் கடுமையாக தவம் மேற்கொண்டான். அதன் பலனால் சிவபெருமான் அவன்முன் தோன்றி, "வேண்டும் வரம் என்ன?' என்று கேட்க, "உமையவள் எனக்கு மகளாகக் கிடைக்க வேண்டும். நான் உமையவளை வளர்க்க வேண்டும். அதன்பின் தக்க பருவத்தில் தாங்கள் மணம்புரிய வேண்டும்' என்று வரம் கேட்டான். இறைவனும் அவன் கேட்டபடி அருளினார். அந்த வரத்தின் படி உமையவள் காளிந்தி நதியில் ஒரு தாமரைப் பூவில் வலம்புரிச்சங்கு வடிவாய் மாசி மக நட்சத்திரத்தன்று தோன்றினாள். அன்றைய தினம் தட்சன் தன் மனைவியுடன் அந்த நதியில் நீராட வந்தபோது, தாமரை மலரில் தோன்றிய வலம்புரிச்சங்கு குழந்தையாக மாறியது. அந்தப் பெண் குழந்தையைக் கண்டெடுத்து வளர்த் தான் தட்சன்.

மாசி மகத்தன்றுதான் சுவாமிமலை திருத் தலத்தில், தன் மகன் முருகனிடம் சிவபெருமான் உபதேசம் பெற்றார் என்று சிவபுராணம் கூறுகிறது. அதனால் புதிதாகக் கல்வி கற்பவர்கள்- எந்தக் கல்வியாக இருந்தாலும்- அன்று தகுந்த ஆசிரியரிடம் கற்றால் சிறந்து விளங்கலாம் என்பர். வல்லாள மகாராஜனுக்கு இறைவனே மகனாக எழுந்தருளினார் என்பதால், ஒவ்வொரு வருடமும் திருவண்ணாமலையார் மாசி மகம் நட்சத்திரத்தில் பள்ளிகொண்டாப் பட்டு என்னும் ஊருக்கு எழுந்தருளி, அந்த மன்னனுக்காக நீத்தார் கடனுக்குரிய வழிபாட்டினை நடத்திவரும் விழா திருவண்ணாமலையில் நடைபெறுகிறது. பல பெருமைகளைக் கொண்ட மாசி மக நட்சத்திரத்தன்று புனித நீர்நிலையில் நீராடி, விரதம் மேற்கொண்டு இறைவனை வழிபடுவோருக்கு புனிதம் கிட்டுவதுடன், பல பேறுகளும் பெற்று வளமுடனும் நலமுடனும் வாழ்வர்.

**-முனைவர் பாலசந்தர்**
**மண்ணச்சநல்லூர்**

தினம் ஒரு தலைவர்கள்

# உதம்சிங் வரலாறு

உதம்சிங் 26 டிசம்பர் 1899 31 ஜூலை 1940) ஒரு இந்திய புரட்சியாளர். ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்த்திய மைக்கல் ஓ'ட்வையரை 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுட்டுக் கொன்றவர்.

இளமைக்காலம்

ஜலியான்வாலாபாக் படுகொலைக்குக் காரணமான துணை ஆளுநர் மைக்கல் ஓ'ட்வையர் என்பவரை நிகழ்ச்சி நடந்து 21 ஆண்டுகளுக்குப் பின்னர் சுட்டுக்கொன்றவர் உதம் சிங் ஆவார். இவர் 1899- ஆம் ஆண்டு டிசம்பர் 26- ஆம் நாள் பஞ்சாப் மாநிலத்தில் சங்ரூர் மாவட்டத்தில் சுனாம் கிராமத்தில் பிறந்தவர். பெற்றோர் இவரின் இளம் வயதிலேயே இறந்துவிட்டனர். பின்னர் ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். அதுவரை அவரது பெயர் ஷேர்சிங். அங்குதான் உதம் சிங் என்று பெயர் மாற்றப்பட்டது. 1918 இல் மெற்றிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

ஜலியான்வாலாபாக் படுகொலையும் உதம் சிங்கின் சபதமும்

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13- ஆம் நாள் ஜலியான்வாலா பாக் படுகொலை நடந்த அன்று உதம் சிங்கும் அவரது ஆசிரம நண்பர்களும் கூட்டத்திற்கு தண்ணீர் வழங்கும் பணியைச் செய்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கலைந்து செல்லவும் வழியில்லாமல் நடத்தப்பட்ட படுகொலை அவரைக் கடுமையாகப் பாதித்துவிட்டது. அவர் இச்சம்பவத்திற்குப் பழிவாங்க பொற்கோவிலில் சபதம் பூண்டார்.

அவர் பல்வேறு பெயர்களுடன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்தார். 1920 இல் ஆப்பிரிக்காவிற்கும் 1921 இல் நைரோபிக்கும் சென்றுவிட்டு 1924 இல் இந்தியா திரும்பினார். ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்றார். சோஹனசிங் வாக்னா, கர்த்தார்சிங் சாரபா, லாலா ஹர்தயாள், ராஷ்பிஹாரி போஷ் போன்றோரால் உருவாக்கப்பட்ட கதர் கட்சியில் இணைந்தார். கதர் கட்சி வெளிநாடுவாழ் இந்தியர்களால் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டது. அமெரிக்காவில் மூன்றாண்டுகள் தங்கி இந்திய விடுதலைப் போராட்டத்திற்குப் பாடுபட்டார். 1927 இல் பகத் சிங் அழைத்ததால் இந்தியா திரும்பினார். 1927 இலேயே அனுமதியின்றி ஆயுதங்களை வைத்திருந்ததற்காகவும் கதர் கட்சி பிரசுரங்கள் வைத்திருந்ததற்காகவும் கைது செய்யப்பட்டு கடுங்காவல் தண்டனை பெற்றார். 1931 இல் விடுதலை ஆனார்.

சபதம் நிறைவேற்றுதல்

மூன்றாண்டுகள் மைக்கல் ஓ'ட்வையரை கொலை செய்யும் திட்டத்துடன் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1933- ல் காஷ்மீர் சென்று ஜெர்மனிக்குத் தப்பிவிட்டார். அவர் இத்தாலி, பிரன்ஸ், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா வழியாக 1934- ல் லண்டனை அடைந்தார். மைக்கல் ஓ'ட்வையரை கொல்ல சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருந்தார். 1940- ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்து 21 ஆண்டுகள் கழித்து அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. கேக்ஸ்டன் ஹால் என்ற இடத்தில் கிழக்கிந்திய சங்கம், மத்திய ஆசிய சங்கம் இவற்றின் கூட்டம் நடந்தது. [6] மைக்கேல் ஓ டையர் ஒரு பேச்சாளர். சிங் ஒரு புத்தகத்தில் ரிவால்வர் மாதிரியே வெட்டி அதனுள் ரிவால்வரை வைத்து எடுத்துச் சென்றார். சுவரின் அருகில் நின்றார். கூட்ட முடிவில் டையர் மேடையை நோக்கிச் செல்லும் போது இருமுறை சுட்டார். டையர் உடனே இறந்துவிட்டார். மீண்டும் சுட்டதில் ஜெட்லாந்து, லூயிஸ்டேன், லார்டு லாமிங்க்டன் ஆகியோர் காயமுற்றனர் . சிங் தப்பிக்க முயற்சி செய்யவில்லை. மைக்கேல் ஓ டையர் படுகொலை குறித்த கருத்துக்கள் ஸ்காட்லாந்துயார்டு அருங்காட்சியகத்தில் அவரது கத்தி, ஆயுதம், டைரி, துப்பாக்கிக்குண்டுகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. ஆளுநர்



டையரின் கொலை இந்தியாவில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. மக்கள் மைக்கேல் ஓ டையரின் கொடும் செயலை மறக்கவில்லை . வழக்கம் போல் காந்திஜி அவரது செயலைக் கண்டித்தார் . ஆனால் வரலாற்று ஆய்வாளர்கள் 1942- ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு போராட்டத்திற்கு உத்தம் சிங்கால் ஏற்பட்ட உணர்ச்சி மிகவும் உதவியது என்று கூறுகின்றனர்.

நேதாஜி சிங்கின் செயலை வரவேற்றார். R.C. ஜாகர்வாரா தனது "CONSTITUTIONAL HISTORY OF INDIA AND NATIONAL MOVEMENT" என்ற நூலில் சிங்கின் தீரச்செயல் இந்திய சுதந்திரத்திற்குப் புத்துணர்வு ஊட்டியது என்று எழுதியுள்ளார். இந்திய அரசாங்கத்தின் இரகசிய குறிப்பு ஆளுநர் டையரின் கொலை மக்களுக்கு மிகுந்த திருப்தியை அளித்தது என்று கூறுகிறது[10]. உலகம் முழுவதும் செய்தித்தாள்கள் ஜாலியன் வாலாபாக் படுகொலையை நினைவுகூர்ந்து மைக்கேல் ஓ டையர்தான் இதற்குப் பொறுப்பாளி என்று எழுதின. டைம்ஸ் ஆஃப் லண்டன் என்ற பத்திரிக்கை உத்தம்சிங் சுதந்திரப் போராட்ட வீரர் என்றும் அவரது செயல் ஒடுக்கப்பட்ட இந்தியரின் உணர்ச்சி வெளிப்பாடு என்றும் எழுதியது.

1940- ஆம் ஆண்டு ஜாலியன் வாலாபாக் படுகொலை 21- ஆவது நினைவு காங்கிரஸ் கூட்டத்தில் உத்தம் சிங் மிகவும் போற்றப்பட்டார். பஞ்சாப் காங்கிரஸ் டையருக்கு அஞ்சலி செலுத்தவும் உத்தம் சிங் செயலைக் கண்டிக்கவும் மறுத்துவிட்டது. அக்காலத்தில் ரோம் நகரில் அதிகம் வெளியான பெர்கெரெட் (BERGERET) என்ற பத்திரிக்கை சிங்கின் செயலை தீரச்செயல் என்று பாராட்டியது. ஜெர்மனி வானொலி ஒடுக்கப்பட்ட மக்கள் குண்டுகளால் பேசிவிட்டனர் என்றும் இந்தியர்கள் யானையைப்போல எதிரிகளை மன்னிக்கவே மாட்டார்கள் என்றும் 20 ஆண்டுகள் கழித்தும் அவர்கள் பழிதீர்த்துவிட்டார்கள் என்றும் கூறியது. பெர்லின் பத்திரிக்கை உத்தம் சிங் இந்திய சுதந்திரத்தின் வழிகாட்டி என்று கூறியது. இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு அமைப்பு பகத் சிங் மற்றும் உத்தம் சிங்கின் செயல் குறித்த காந்திஜியின் விமர்சனத்தைக் கண்டித்தது.


தூக்குத் தண்டனை

உத்தம் சிங் சிறையில் 42 நாள் உண்ணாவிரதம் இருந்தார். அவர் கட்டாயப்படுத்தி உணவு உண்ண வைக்கப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் "நான் அவரைப் பழிவாங்க எண்ணியிருந்தேன். அவர் அதற்குப் பொருத்தமானவர்தான்" என்று கூறினார் . 1940- ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று அவர் பென்டோன்வில் சிறைச்சாலையில் அவர் தூக்கிலிடப் பட்டார். அன்று மதியமே அவரது உடல் சிறைச்சாலை வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இந்திய அரசின் அஞ்சலி

நேருஜி 1962-ல் சிங்கின் செயலைப் பாராட்டி அவர் போன்றவர்களால்தான் இந்தியா சுதந்திரம் அடைந்தது என்று கூறினார். 1974- ல் சாதுசிங் திண்ட் என்ற சுல்தான்பூர் லோதி வேண்டுகோளுக்கிணங்கி இந்திய அரசு கேட்டுக்கொண்டதால் பிரித்தானிய அரசு உத்தம் சிங்கின் சவப்பெட்டியை அனுப்ப சம்மதித்தது. சாதுசிங் திண்ட் சென்று உத்தம் சிங்கின் சவப்பெட்டியை வாங்கிவந்தார். அதனை காங்கிரஸ் தலைவர் சங்கர் தயாள் சர்மா, பஞ்சாப் முதல்வர் ஜெயில் சிங் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பிரதமர் இந்திரா காந்தி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அவரது சொந்த கிராமமான சுனாம் கிராமத்தில் அவரது உடல் எரியூட்டப்பெற்று சட்லஜ் நதியில் அஸ்தி கரைக்கப்பட்டது.

# தந்தையானார் நடிகர் ஹரிஷ்



தமிழ் திரையுலகில் வளர்ந்து வரும் நட்சத்திரங்களில் ஒருவர் நடிகர் ஹரிஷ் கல்யாண். ஆரம்பத்தில் இவர் நடிப்பில் வெளியான படங்கள் பெரும் வரவேற்பை பெறவில்லை என்றாலும் , பார்க்கிங், லப்பர் பந்து போன்ற படங்கள் மிகப்பெரிய வெற்றியையும், பாராட்டுகளையும் பெற்றுத்தந்தது.

அதன்பின் கடந்தாண்டு வெளிவந்த டீசல் திரைப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது. தொடர்ந்து தாஷமக்கான் போன்ற படங்களில் பணியாற்றி வருகிறார். இந்நிலையில் அவருக்கு பெண் குழந்தைப் பிறந்துள்ளதாக ஹரிஷ் கல்யாண் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவரது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளப் பதிவில்,

"எனது மனைவி நர்மதாவிற்கும் எனக்கும் இன்று (02.03.2026) பெண் குழந்தை பிறந்துள்ளதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தாயும் சேயும் நலமாக உள்ளனர். எங்களது வாழ்வின் இந்த அழகான புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் இவ்வேளையில், எங்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் காட்டிய அன்பு மற்றும் ஆசிகளுக்கு நாங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்

உங்களது தொடர்ச்சியான ஆதரவிற்கும், கனிவிற்கும் பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினருக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஓம் நமசிவாய" எனக் குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் ஹரிஷ் கல்யாணுக்கும், நர்மதா உதயகுமார் என்பவருக்கும் கடந்த 2022ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.



உலகளவில் புகழ்பெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்று சூப்பர் சிங்கர். இதுவரை 11 சீசன்களை கடந்துவிட்டன. சமீபத்தில் 11வது சீசன் பைனல் நடைபெற்றது. இதில் நிகில் வெற்றிபெற்றார்.

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமானவர்கள் பலர் உள்ளனர். அதில் ஒருவர்தான் பிரகதி. இவர் சூப்பர் சிங்கர் ஜூனியர் சீசனில் பங்கேற்றுள்ளார். வெள்ளித்திரைக்கு சென்ற இவர், வணக்கம் சென்னை, பரதேசி, ரம், ராட்சசன் போன்ற பல படங்களில் பாடல்கள் பாடியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கை சென்றுள்ள பிரகதி அங்கிருந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவுசெய்துள்ளார்.

# ஒரே நேரத்தில் இரு படங்களை தொடங்கி வைத்த இயக்குநர் வெங்கட் பிரபு!




அணுசக்தி போட்டி காரணமாக ஈரான் மீது இஸ்ரேல்–அமெரிக்கா ஏவுகணைகள் மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் டெஹ்ரான் மற்றும் பிற பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

தெஹ்ரானில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா காமேனி கொல்லப்பட்டார். இதற்கு பதிலடியாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கிடையே, ஈரான் மீதான தாக்குதல்களுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. லெபனான் தலைநகர் பெய்ரூட் உட்பட அந்நாடு முழுவதும் இஸ்ரேல் தாக்குதல்களை தொடுத்தது. இந்த தாக்குதல்களில் 31 பேர் உயிரிழந்ததாகவும் 149 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக லெபனான் அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் தொடர்ந்து லெபனானில் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால, லெபனானில் உள்ள அமெரிக்க குடிமக்கள் உடனடியாக வெளியேற அமெரிக்கா அறிவுறுத்தி உள்ளது.

# கோலாகலமாக தொடங்கிய 'மாஸ்டர் பிளான்'

ஒரு பவுலர் பலத்துடன் இந்தியா விளையாடிக் கொண்டிருக்கிறது.

டி20 உலகக் கோப்பையில் போட்டியை நடத்தும் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. இந்தியா இங்கிலாந்தை அரையிறுதியில் எதிர்கொள்கிறது. இந்த போட்டி 5-ந்தேதி மும்பை வான்கடே மைதானத்தில் நடக்கிறது.

இந்த நிலையில் இந்தியா ஒட்டுமொத்தமாக நல்ல கிரிக்கெட்டை விளையாடவில்லை. உலகக் கோப்பையை வெல்லாது என பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது ஆமிர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முகமது ஆமிர் கூறியதாவது:-

முற்றிலும் கிரிக்கெட் பார்வையில் இருந்து நான் ஆராய்ந்ததில், ஒட்டுமொத்தமாக இந்தியா சிறந்த கிரிக்கெட்டை விளையாடவில்லை. நான் இன்னும் உங்களுக்கு சொல்கிறேன். ஜஸ்ட் அவர்களுடைய பீல்டிங்கை பாருங்கள். மூன்று முதல் நான்கு கேட்ச்கள் மிஸ் செய்கிறார்கள். பீல்டிங்கில் திணறுகிறார்கள். பும்ராவை தவிர மற்ற பந்து வீச்சாளர்களின் பந்து அடி விழுகிறது. ஒரு பவுலர் பலத்துடன் இந்தியா விளையாடிக் கொண்டிருக்கிறது.

இந்தியா உலகக் கோப்பையை வெல்லும் அணிகளில் ஒன்று அல்ல. அவர்கள் இந்த டி20 உலகக் கோப்பையை வெல்லவும் மாட்டார்கள்.

இவ்வாறு முகமது ஆமிர் தெரிவித்தார்.



சன் டிவியின் டாப் சீரியல்களில் ஒன்றாக தற்போது இருந்து வருகிறது 'எதிர்நீச்சல் தொடர்கிறது'. அதில் ஹீரோயினாக நடித்து வருபவர் பார்வதி. அவருக்கு அதிக அளவில் சின்னத்திரையில் ரசிகர்களும் இருக்கிறார்கள். ஆணாதிக்கத்தை எதிர்த்து தொடர்ந்து போராடும் பெண்ணாக சிறப்பாக நடித்து வருகிறார் அவர். தற்போது பார்வதி கிளாமர் உடையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்கள் ரசிகர்கள் மத்தியில் வைரல் ஆகி இருக்கிறது.



# தாய் கிழவி படத்திற்கு சீமான் கொடுத்த ரிவ்யூ



நடிகர் சிவகார்த்திகேயன் தயாரிப்பில் ராதிகா நடித்துள்ள புதிய படம் 'தாய் கிழவி'. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியுள்ளார். நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்துள்ள இப்படத்தில் சிங்கம் புலி, அருள்தாஸ், பாலசரவணன், முனிஷ்காந்த், இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான நிலையில், தாய் கிழவி படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. இந்தப் படம் வெளியான முதல் நாளில் மட்டும் ரூ. 2.5 கோடி வசூலித்துள்ளது. மேலும், இந்தப் படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், தாய் கிழவி படத்தை பார்த்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நடிகர், தயாரிப்பாளர் சிவகார்த்திகேயன், இயக்குநர் சிவகுமார் முருகேசன், ராதிகா மற்றும் படக்குழுவினருக்கு பாராட்டு தெரிவித்துள்ளார். இந்தப் படத்தை கண்டுகளித்த நிலையில் திரைப்படம் குறித்து சீமான் விமர்சன அளவில் வெகுவாக பாராட்டித்தள்ளினார்.

இதுகுறித்த வீடியோவை சிவகார்த்திகேயன் ப்ரொடக்ஷன்ஸ் X தளத்தில் வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.







## WANTED

Needed female staff
to look after
children, patients.

Contact

9150989424

## WANTED

Retd, VRS, Home Makers,
NRIs, Business Person

Contact

8248951872










## WANTED

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling
Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling
Metal Roofing for
PEB Building in Tamil Nadu

**ALP AEROFLEX INDIA PVT. LTD.**

Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com







தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE




**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971








## அம்மா

கண்ணீர் நிறைந்த
கண்களை கண்டு கடவுள்
கவலையுற்றான்
உனக்கு என்ன
வேண்டுமென்றான் ?
அவள் இருந்த வரை
புன்னகையை தவிர
எதையுமே அறிந்ததில்லை
தலைவலி வந்தால் கூட
அவள் மடி மருந்தாகும்
என்னிலிருந்து எடுத்த
அவளை திரும்ப எனக்கே
மகளாய் கொடுத்து விடு
என்றேன்!

தூயோள் தூயோளே
விட்டு சென்ற பின்பும்
கெட்டு போகாமல் இருக்கிறது
உன் நினைவுகள். துடிக்கும்
இதயம் கூட –உன்
துதி பாடுவதை ஒரு போதும்
நிறுத்தவில்லை கல் மனம்
படைத்த அந்த கடவுளிடம்
நான் கையேந்துவது
உன் காதலுக்காக மட்டும்
தான் ஆசை துன்பத்திற்கு
காரணம் என அறிந்தும்
பேராசை கொள்கிறேன்
உன் மீது மட்டும் .
உன் மேல் பொழியும்
மழைத்துளியிடம் கேட்டுப்பார்
என் தூய காதலை கொஞ்சம்
ஈரத்துடனே சொல்லும் . யார்
மீது சரி ,யார் மீது தவறு என
வாதிட விரும்பவில்லை
நம்மிருவருக்கிடையே ஊடல்
இருந்தாலும் அது காதலோடு
மட்டுமே இருக்கட்டும்.
மண்டியிடுவது சுய
மரியாதைக்கு இழுக்கென
தெரிந்தும் காதலில்
வெட்கம் விட்டு மன்னிப்பு
கேட்பதெல்லாம் மாண்பென
வருங்கால வரலாறு
சொல்லட்டும் உனக்கு
இனிவரும் காலங்களிலும்

இதுபோல் அன்புத்தொல்லை
கொடுக்க எனை
மன்னிப்பாயா –என்
அருமை காதலியே !

### 1. எங்கே எழுத ?

வறுமை கோட்டினை பற்றி
விரிவாக கட்டுரை
எழுதி வரச்சொன்னார்
ஆசிரியர் . எங்களுக்காக
அரைவயிறு சாப்பிடும்
அப்பாவின் வெடித்த
பாதச்சுவடுகளில் எங்கே
அந்த வறுமைக்கோட்டினை
தேடுவேன்?

### 2. வாழ்க்கை

கெட்ட பிறகே
விதைத்ததெல்லாம்
பாவமென வாழ்க்கை
புரியவைக்கும்

### 3. நிஜம்

உள்ளத்தை கெடுப்பதும்
கற்பழிப்பென
2K காதலர்களுக்கு
கடைசி வரை புரிவதே
இல்லை



1. தன்னுடைய தவறுகளில்
இருந்து பாடம் கற்றுக்
கொள்பவன் புத்திசாலி
அடுத்தவர் தவறுகளில்
இருந்து பாடம் கற்றுக்
கொள்பவன் அதி புத்திசாலி

2. உங்களை பிசியாக
வைத்துக் கொள்ளுங்கள்
அவை உங்களை
கவலைகளில் இருந்து
விடுபட வைக்கும்

3. அறிவாளிகள் கூட்டத்தில்
முட்டாளாகவும்
முட்டாள்கள் கூட்டத்தில்
அறிவாளியாகவும் இருந்தால்
நாம் தனியாக தெரிவோம்

4. பணக்காரர்களுக்கு
நேரம் குறைவு ஏழைகளுக்கு
நண்பர்கள் குறைவு
இருப்பவனுக்கு பொறுப்புகள்
குறைவு இல்லாதவனுக்கு
கனவுகள் கூட குறைவு

5. சாப்பிடுகிற
காய்கறிகளை தெருவில்
போட்டு
நிற்கிறார்கள்
தெருவில்
போட்டு
நடக்கும்
செருப்பை ஏசி
ரூமில் போட்டு
விற்கிறார்கள்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

### 4. 5G

பல ஜீவராசிகளை
அழித்து விட்டு காட்டும்
நவீனங்களின்
கோட்டைகளில்
என்ன அழகு
இருக்கப்போகிறது?

### 5. சொந்தம்

வாழவும் மாட்டார்கள்
வாழவும் விட மாட்டார்கள்
அது குற்றம் இது குற்றமென
கடைசி வரை குறைமட்டுமே
சொல்லி கொண்டிருப்பார்கள்

**லி .நௌஷாத் கான்**

## மறியல்

தோல்வியினை
வெற்றியெனக்கருதி
வெறிகொண்டு ஆடும்
விபரீத விளையாட்டு!

கத்தியின்றி ரத்தமின்றி பெற்ற
விடுதலையைக்கற்களை
வீசியும் கண்ணாடிகளை
நொறுக்கியும்
அனுபவிக்கிறோம்!

தோழர்களே!
படையெடுப்பு நடத்தி
கடைகளைப்பூட்டி
விட்டால் பிரச்சனைகளின்
திறவுகோல்
கிடைத்துவிடுமோ?

தராசுகளின்
எடைக்கற்களுக்கு
கட்டாய ஓய்வு
கொடுத்துவிட்டால்
நிறுக்கப்படாமல்
இருக்கும் நியாயங்கள்
நிமிர்ந்து விடுமா?

மறியல் என்ற பெயரில்
போக்குவரத்தை
முடக்கிவிட்டால் விலைவாசி
விண்ணைத்தொடாதா?
இங்கே நஷ்டங்களையே
விரும்பி ஏற்கும்
சகிப்புத்தன்மையை
எப்படி வளர்த்துக்
கொண்டீர்கள்!

அசுரர்களின்
முப்புரங்களை
எரித்தார் ஈசன் சில நீசர்களோ
பேருந்தை எரிக்கிறார்கள்!

தீயில்கருகிய பேருந்துகள்
கனவில் வந்து கனிவாய்ச
சொல்லின ஆயுத பூஜையன்று
எங்களுக்குச்
சந்தனகுங்குமமிட்டு
வாழைமரங்கள் கட்டி
பூமாலைச்சூட்டி
கௌரவிக்கும் கரங்கள்
கொள்ளி வைத்து ரசிப்பது
ஏனென்று?

இன்னும் சொல்லின
பேருந்துகள் மும்மூர்த்திகள்
எங்களுக்கு மனிதர்களே!

உல்லாசப்பயணத்திற்காக
பிரம்மனாகிப்படைத்தார்கள்
பழுதுபடாமல் விஷ்ணுவாகிக்
காக்கிறார்கள்!
நெற்றிக்கண்
இல்லையாயினும்
கலவரம் நிகழும்
போதெல்லாம் சிவனாகி
எரிக்கிறார்கள்!

இங்கே அகிம்சை
அகலிகை போல்
சபிக்கப்பட்டுக் கல்லாய்க்
கிடக்கிறது மீண்டும் ஒரு
மகாத்மாவின் கால்கள்
பட்டு விமோசனம்
பெறுவது எப்போது?




**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

1. பணம் செல்போன் விலை
உயர்ந்த நகைகள் இவற்றில்
தீட்டு படுவது இல்லை

2. வாழ்க்கையில் நிம்மதி
வேண்டும் என்றால்
இரண்டு பேரைகண்டுக்க
கூடாது நமக்குபிடிக்காதவங்க
நம்மளை பிடிக்காதவங்க

3. கோபுர தரிசனத்தால்
கிடைக்கும் புண்ணியம் ஏன்
கோபுரத்தின் நிலையில்
பிச்சை எடுப்பவர்களுக்கு
கிடைக்கவில்லை

4. கடிகாரத்திற்கு நேரத்தை
காட்ட மட்டுமே தெரியும்
அவை நல்ல நேரமாகவும்
கெட்ட நேரமாகவும் மாற்ற



நம்மால் மட்டுமே முடியும்

5.மனிதனுக்கு பிரச்சனையே
வயிறுதான் பாதிபேர் குறைக்க
ஓடிக்கொண்டிருக்கிறார்கள்
பாதி பேர் நிறைக்க
ஓடிக்கொண்டுஇருக்கிறார்கள்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## சொற்களின் அலமாரி

சுவரோரம் அமைதியாக
மரத்தாலானது அல்ல,
மனத்தாலான...ஒரு அலமாரி.

அதில் ...

அன்பென்னும் அழகிய
சட்டை,அழுகை என்னும்
போர்வை,ஆசை என்ற
புடவையை...வார்த்தைகளால்
அடுக்கினேன்.

அதில் சில ...

மடித்து போடப்பட்டவை,
சுருக்கம் விடாதவை,
இன்னும் தைக்கப்படாமல்
கிழிந்த நினைவுகளாகச் சில...

கோபமென்னும் கரும்பட்டு
புடவை கதவைத் தட்டி
நிற்க...

மன்னிப்பு என்ற வெள்ளைத்
துண்டு தயக்கத்தோடு
கீழ்தட்டில் அமைதியாகத்
தூங்க...

சிரிப்பென்னும் சிவப்பு சட்டை
எப்போதாவது முன்
வரிசையில்...

துக்கமென்னும் கருநிற
மேலங்கி எப்போதும் முன்
வரிசையில்....

தினமும்... தேவைக்கேற்ற
சொற்களைத் தேர்ந்தெடுத்து
உடுத்தி செல்கிறேன்

உலகம் என்னைக் காண்பது
அலமாரியில் இருந்து எடுத்த
அந்த நாளின் சொற்களாலே...
ஆனால், அடித்தட்டில் பூட்டிய
ரகசிய பெட்டி உண்டு...

அதில் திறக்கப்படாத
உண்மைகள் என்னோடு
காற்றில் கலந்து
விட்டால்...
என் உண்மையான
மனதை உலகம்
அறிந்திடுமோ?

## அழகு

கரை தொடும் அலையழகு
கறைபடா கைகளழகு

முகில் மறைக்கும் நிலவழகு
முகம் நிறைந்த(புன்)நகையழகு



மழையில் ஆடும் மயிலழகு
கானம் பாடும் குயிலழகு

மலர்களின் வண்ணம் அழகு
மரங்களடர்ந்த வனம் அழகு

இயற்கை எழில் கொஞ்சும்
இனியவளின் அழகே அழகு


மானிடர்க்கு அன்பு அழகு
மாதர்க்கு பண்பு அழகு

காதலுக்கு எது அழகு?

காதல் நினைவில் ......
காணும் காவியங்களில்
தீட்டிய ஓவியத்தைத்
தொடரும் நிழலாக .......
தொடரும் கனவில்........
காத்திருக்கும் காதலே
காலமுள்ளவரை அழகு



**நா.பத்மாவதி**
கொரட்டூர்



# புத்தக விமர்சனம்

நூலின் பெயர் :
"ஒருபாதி கனவு நீயடா"
எழுதியவர் : தி. வள்ளி
பதிப்பகம் : புஸ்தகா
பதிப்பித்த ஆண்டு : 2024
விலை : ₹ 140/
பக்கங்கள் : 127




தற்செயலாகத்தான் இந்தப் புத்தகம் எனக்கு வாசிக்கக் கிடைத்தது.

ஒரு சிறுகதைப்போட்டியில் வென்றமைக்கு சிறப்புப்பரிசாக இந்நூலாசிரியரின் மூன்று புத்தகங்கள் என்னையடைந்தன

இந்தத் தலைப்பு என்னை ஈர்த்தது.

ஒரு இனிமையான நெடுஞ் சாலைப் பயணத்தின் போதோ.. காற்று தலைதுவட்டிப் போகும் ரயில் பயணத்தின்போதோ தனிமைக்குத் துணையாக இந்தப் புத்தகத்தை படித்து முடித்து விடலாம்.

அனாவஸ்யஇடைச்செருகலோ தேவையற்ற வருணனைகளோ வேண்டுமென்றே திணிக்கப்பட்ட திடீர்த் திருப்பங்களோ ... எதுவுமற்று எளிமையான சாலையோரப்பூக்களின் தலையாட்டலில் தனியழகொன்று மிளிருமே அது போலத்தான் இந்த "ஒரு பாதிக்கனவு நீயடா! " நாவலும் ஈர்க்கிறது..

மாமன்மகள் அத்தைமகன் என்ற ரீதியில் திருமணம். மாமன் மகள் மகாலஷ்மி மீதான ஈர்ப்பைவிட அவள் மீதான சொத்துமதிப்பில் ஈர்ப்பு அதிகம் ராம்குமாருக்கு. மகா மார்பிள்ஸ் எம்டியாக இருந்தவரை வாழ்வில் பிரச்னையில்லை. வாழ்க்கை சிறுநதியின் நீரோட்டமாய் நளினமாய் நகர்கிறது.

நடிகை வந்தனா என்று அவன் மனதில் அடியெடுத்து வைத்தாளோ அன்றே மகாலஷ்மியின் வாழ்க்கை திரிலோக சொர்க்கமாகிவிடுகிறது. நான்கு வருடம் கழித்துக் கிடைத்த குழந்தைப்பேற்றைக்கூட ராமினால் ரசிக்கமுடியவில்லை!வரவேற்க முடியவில்லை !காரணம் வந்தனா.

வந்தனாவின் வனப்பும் அதை வெளிப்படுத்தும் வித்தையும் பெண்மைக்கே உரித்தான சாகசங்களும் அவனை உன்மத்தம் பிடிக்கவைக்க மகாவை விலக்கிவைக்க விரும்புகிறான்.

காட்டாறாய் தன்னைச் சூழ்ந்து சுழற்றியடிக்கும் வந்தனாவின் துள்ளும் இளமை அவனுக்கு புதிது. குத்துவிளக்கின் சுடரொளியைவிட சாண்டலியரின் பகட்டான வெளிச்சத்துக்கு கவர்ச்சி அதிகம் அல்லவா?

ராமின் மனது தடுமாறு கிறது. ஆனால் மாமா எழுதிவைத்திருக்கும் உயிலோ வேகத்தடை போடுகிறது. மகா இறந்து விட்டால் மொத்த ஆஸ்தியும் ட்ரட்ஸ்டுக்கு போய்விடும். உயிரோடு மகா இருக்கவும் வேண்டும் இவனுடைய ஆசைக்கு அணைபோடாது இருக்கவும் வேண்டும். வந்தனாவின் தாய் வக்கிரத்தின் உச்சக்கட்டம் எனில் டிரைவர்களான முருகனும் சுந்தரமும் மனித நேயத்துக்கு இலக்கணம் வாசிப்பவர்கள்.

தாயும் மகளும் ராமுடன் இணைந்து நிகழ்த்தப் போகும் கொடுமையில் மகாவின் நிலைமை என்னாகும்? சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொள்வாளா? ஒழுக்கமீறலான வாழ்வை ராம் வந்தனாவுடன் வாழத்தான் போகிறானா? ராமுடன் ராமை மட்டுமின்றி மகா மார்பிள்ஸ்ஸையே சொந்தமாக்கிக் கொள்ள விரும்பும் வந்தனாவின் பேராசை என்னாகும்?

23ம் அத்தியாயக் கடைசிபத்தியில் வாசகனை கதிகலங்க வைத்து அடுத்த இரு அத்தியாயத்தில் தெளிய விடுகையில் நாவலாசிரியையின் அனாயாசமாய் கையாளும் எழுத்தாளுமை புலப்படுகிறது. பேராசையே அழிவின் ஆரம்பம் என்ற உண்மையை சொல்கிறது இந்த நாவல். மகாவின் சாதுரியமும் ராம்குமாரின் முடிவும் இயல்பாகவே அமைவதில் திருப்தியாயிருக்கிறது. ஒரு சாதாரண குடும்பத்தலைவியை அசாதாரணமானப் பெண்ணாய் மாற்றி நேர்மறை முடிவைத் தந்தமைக்கு பாராட்டுகள்.

தலைப்பே அழகான கவிதை! நல்லதொரு குடும்பக்கதை! எளிய கிராமியமணமும் ருசியுமான தலைவாழையிலை விருந்து சாப்பிட்ட உணர்வு.நூலின் ஆசிரியருக்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும்!



**வாசித்ததை ரசித்து**
**பகிர்ந்தது**
**உங்கள் தோழமை**
**ஜே. செல்லம் ஜெரினா**

வயதானால் கிடைக்கும்
அனுபவச் சான்று புகழஞ்சலி

எதுவுமே கஷ்டப்பட்டால்
தான் கிடைக்கும் அது தான்
ருசிக்கும்

### ஞானக் கூக்கூ...

உழைப்பின் குருதி
ஆடையில் அடையாளமாய்
அழுக்கின் கறைகள்!

வயதானால் கிடைக்கும்
அனுபவச் சான்று
புகழஞ்சலி...!



கஷ்டங்களால்
எதிர்
கொள்ளும்
திறனின்
பலன்
இனிமையான
வாழ்க்கை!

**நல.ஞானபண்டிதன்**

## மனிதநேயம்!

(அறுசீர் மண்டிலம்)
அன்பும் கருணையும்
அமைந்திருந்தால்
யாரும் வாழ்த்திட
வருவாரே! பண்பும் பாசமும்
உடனிருந்தால் பார்க்கும்
யாவரும் வாழ்த்துவரே!
அன்பின் வழியது
உயர்நிலையே அஃதே
என்புதோல் உடம்பாகும்!
வன்மம் நடக்கையில்
ஓடிப்போய் வண்மை
செய்வது
மனிதநேயம்!

வாடும் பயிரினைக்
காண்கையிலே வள்ளல்
பெருமகன் வாடினாரே!
தேடிப் பசியினை ஆற்றிடவே
தேர்ந்த அடுப்பினைக்
கண்டாரே!.
பாடித் திருவருள்
பெற்றேதான் பாங்காய்ச்
சமரசம் கண்டாரே!
கூடும் மாந்தரில் கூர்மையாக
கூட வேண்டுமே
மனிதநேயம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## தற்பெருமை தீங்குகள்

மற்றவர்களைத் தாழ்வாகக்
கருதுவதால் நண்பர்கள்
உறவினர்களிடையே வெறுப்பு
ஏற்படும் !

எல்லாம் எனக்குத் தெரியும்
என்ற எண்ணம் புதிய
விஷயங்களைக் தடுக்கும்!

தற்பெருமை உங்கள்
குறைகளை மறைத்து
உங்களைப் பற்றிய ஒரு
தவறான பிம்பத்தை
உண்டாக்கும் !

தற்பெருமை இறைவனது
அன்பையும் அருளையும்
தடுக்கும்!

தற்பெருமையை விடுத்து
அடக்கத்தை கையாள்வது
வாழ்வை மேம்படுத்தும்!

உங்கள் சாதனைகளை
மட்டும் பேசாமல் பிறர்
கருத்துகளுக்கு மதிப்பு
கொடுங்கள் !

நான் என்பதற்கு பதில்
நாம் என்ற சொல்லைப்
பயன்படுத்துங்கள் !

பிரதிபலன் பாராமல்
மற்றவர்களுக்கு உதவுங்கள்!

பிழை செய்தால் அதை
மறைக்காமல் நேர்மையாக
ஒத்துக் கொள்ளுங்கள்!

உயரம் என்பது ஏணியில்
அல்ல உள்ளம் கொள்ளும்
பணிவில் உள்ளது!

நான் என்று அகந்தை
ஓங்குமிடத்தில் நற்பண்புகள்
எல்லாம் தேய்ந்து போகும் !

நிழல் பெரிதான மரம்
தற்பெருமை கொண்டாள்
நிஜமான கனி
அங்கே கசந்து போகும்!

நிறைகுடம் ததும்பாது
அமைதி காக்கும்!

குறைகுடம் கூச்சலிட்டு
வீழ்ந்து போகும்
அடக்கமே உன்னை
சிகரத்தில் வைக்கும் !

அகந்தையே உன்னை
மண்ணில் சாய்க்கும் !
கந்தை வீடு துடைக்க
பயன்படும் அகந்தை எதற்கும்
பயன்படாது !

சிறகு முளைத்ததும் பறவை
வானைத் தன் வசமென்று
எண்ணினால் எட்டாத
உயரத்தில் காற்று அதன்
கர்வத்தை உடைக்கும்!

கடல் அலைகளுக்குத்
தெரியாது கரையை முட்டும்
வேகம்!

தன் அழிவுக்கான ஆரம்பம்
என்று ஆழமறிந்த முத்து
அமைதியாய் மடியில்
கிடக்கும்!

ஆணவம் எனும் ஆடை
கலைந்தால் அன்பு எனும்
பேரொளி வீசும் !

தற்பெருமை தணிந்த
இடத்தில் தெய்வம்
குடிகொள்ளும் !


கடலில் பிறந்த சங்கொன்று
கடலையே அடக்கப்
பார்த்ததாம் !


தன் சத்தம் பெரியதெனத்
தற்பெருமை பேசி கரை
ஒதுங்கி மௌனமானதாம்!

ஆழம் உள்ள நீர்
அலறுவதில்லை!

தமிழ்நாடு இ-பேப்பர்.காம்









## எளிமை கண்டு இகழேல்.!

பணக்கார வீட்டுப் பிள்ளை..
மோகனதாஸ் கரம்சந்த்
காந்தி.. பக்கிரியாய்
அரையாடை அணிகயிலே..
இவனைப் பார் என்று உலகம்
சிரித்தது! எளிமையிலே
இதயம் வென்ற பின்னே
மகாத்மா என்றுதானேப்
போற்றியது.!

ஏழைப் பங்காளன்..
கர்ம வீரரை.. எளிய
மாமனிதர் கக்கனை..
நாளைக்கென சேர்க்காத..
ஜீவாவை.. நல்லகண்ணுவை..
வாழிய என்றே உலகம்
வாழ்த்துகின்றது.!

முழுக்கால் சட்டையும்
பளப்பலப்பாய் நகையும்..
காரிலே ஏறிவந்தால்
மதிக்கின்ற உலகம்..

அழுக்கான உடையிலே..
இயந்திரம் முன் நிற்பவனை..
கழனியிலே காலூன்றி
நடப்பவனை எளிமை கண்டு
ஏற இறங்கப் பார்க்கிறதே.!

இருப்பவன் சேர்க்கட்டும்..
இல்லாதவன் ஏங்கட்டும்
அழைப்பு வரும் நாள்வரை
ஆட்டட்டும்.. ஓட்டட்டும்..
ஆனாலும் எளிமை குணம்
வையகத்தை ஆளட்டுமே.!

தாத்தனவன் வைத்தது
குடுமி.. அப்பனவன்
கட்டியது துண்டு.. இன்று
நாலு காசுவந்த பின்னாலே
நீ ஆடும் ஆட்டங்களைக்
கண்டு.. துடிக்கின்ற
மனிதர்களும் உண்டு.!
யாவர்க்கும்
எளிமையே ஏற்றம்தரும்
என்றுப் பாடுகின்றோம்
இன்று.!



**வே.கல்யாண்குமார்.**

---



## தேர்வைக் கொண்டாடு..!

பதட்டம் இல்லாமல்
தேர்வறைக்குள் செல்..!

ஒரு முறைக்கு இருமுறை
கேள்வித்தாளைப் படி...!

நன்றாக பதில் தெரிந்த
கேள்வி எண்ணில்
சிறு புள்ளி
வைத்துக்கொள்...!

முடிந்தவரை தெளிவாய்,
அழகாய்,பொறுமையாய்,
தெரிந்ததை முதலில்
எழுது...!

அடுத்து,
தெரியாதவற்றிக்கும்
தெரிந்ததுபோல பதில்
எழுது...!

எதையும் விட்டுவிடாதே..!
வாழ்த்துக்கள்.!

இந்த உலகில் வெற்றி
பெற்றவர்கள் எல்லோரும்
அறிவை ஜீவிகள் அல்ல..!

முயற்சி எடுத்தவர்கள்..!
நீ முயற்சி எடு..!

தேர்வு என்ற
திருவிழாவில்
பங்கெடுத்துக்கொள்...!

வெற்றி பெறுவாய்..!
வாழ்த்துக்கள்..!



**இரா.இரமேஷ்**
கயப்பாக்கம்

---




1. சந்தோசம் கொசுவத்தி
மாதிரி பொசுக்குன்னு
முடிந்துவிடும் கஷ்டம்
கொசுவர்த்தி சுருள் மாதிரி
தொடர்ந்து கொண்டே
இருக்கும்

2.கனி இல்லா மரத்தை விட்டு
பறந்து போகிறது பறவைகள்
பணம் இல்லை
மனிதர்களை விட்டு
விலகிப் போகிறது
உறவுகள்

3. மூளை எதிர்காலத்தை
நினைத்து சாகடிக்கும்
இதயம் கடந்த காலத்தை
நினைத்து நோகடிக்கும்

4. எவ்வளவு வெள்ளையாக
இருந்தாலும் நிழலில்
உங்கள் நிறம் கருப்புதான்

5.டீன் ஏஜ் தாண்டும் போதும்
டிரைனேஜ் தாண்டும்
போதும்கவனமாக
இருக்க வேண்டும்
இல்லையென்றால்
வாழ்க்கை நாறிவிடும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---



## மாடன் கலாச்சாரம்

மாடன் துணியிலும்
கொலுசு அணிந்திருக்கிறாள்.
இன்னும் கொஞ்சம்
தொக்கிக் கொண்டுதான்
இருக்கிறது அவளுக்கே
தெரியாமல்
அவள் காலில்
இந்தக்
கலாச்சாரம்.



**துங்கன்**
கோயம்புத்தூர்

---



## மாட்சிமை

வாழ்க்கையில் வெற்றி பெற
அனைவரிடமும்
அன்பாயிருப்பீர் முன்னோக்கி
நடக்க முயல்வீர் புன்னகை
முகத்தில் தவழட்டும்
வஞ்சம் துரோகம் கூடாது
முடிந்த வழிகளில் உதவுவீர்
சிக்கலில் மாட்ட வேண்டாம்
பொறாமை
சிறிதும்
வேண்டாம்
ஒழுக்கமே
உயர்வென்று
உணர்



**பி. பழனி,**
சென்னை.

---

## நிம்மதி !

வீடு, வாசல் நிலபுலன்கள்,
இரண்டு சக்கரம், நான்கு
சக்கர வாகனங்கள்...
பணம் காசு ஆபரணங்கள்....
எல்லாம் இருந்தும்
நிம்மதியற்ற வாழ்வுடன்
பலர்....இது எதுவும்
இல்லாதவன் தெருவினில்
நிம்மதியாய் ஆடிப்பாடி
நடக்கின்றான்....
போதையில்
சிலர்...
மனபேதையில்
சிலர் !



**எம்.பி.தினேஷ்**
கோவை

---



1.விளக்கிற்கு வெளிச்சம் தர
மட்டும்தான் தெரியும்
எங்கு தேவை என்பதை நாம்
தான் தீர்மானிக்க வேண்டும்

2. ஒரு கிளை உடைந்தாலும்
மறு கிளை உடனே
முளைக்கும் மரங்கள்
ஒருபோதும் முயற்சியை
கைவிடுவது இல்லை

3. துன்பத்தின் பூட்டும்
இன்பத்தின் சாவியும்
இறைவனிடத்தில் உள்ளது

4.அறுந்தது மின்சார கம்பி
அழுதது மெழுகுவர்த்தி
வெட்டப்பட்டது வெங்காயம்
கண்ணீர் வடித்தது கண்கள்
தொலைந்து போனது சாவி
அடிபட்டது பூட்டு சிலரின்
நிலைமையும் இது
போலத்தான்

5.காலங்களும்
காலண்டர்களும் மட்டுமே
மாறுகிறது ஆணி மாறுவது
இல்லை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---




## அன்னைமொழி மறவாதே!

எந்தமொழி பயின்றாலும்
சொந்தமொழி
மறவாதே..தோழா
சொந்தமொழி மறவாதே!
தாய்மொழிதான்
எப்போதும் தாய்ப்பாலைப்
போன்றது..தோழா
தாய்ப்பாலைப்போன்றது!

வந்தமொழியைப்
பயின்றிட்டால் சொந்தமொழி
படிப்பதெப்போ..தோழா
சொந்தமொழி படிப்பதெப்போ!
நாலுமொழி தெரிந்து
கொண்டால் நல்லதென்றே
சொல்லிடுவேன்..தோழா
நல்லதென்றே
சொல்லிடுவேன்!

கோலமொழி
நம்மொழியைக்
கொஞ்சமும்
நீ மறவாதே..
தோழா
கொஞ்சமும் நீ மறவாதே!



**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---

## என் தெரு

தெருவில் இறங்கி நடக்கும்போதே வாளித் தண்ணிய மேலே ஊத்திருமோன்னு ஒரு நடுக்கம்.. சளப் சளப்புனு கை அளையுது.. எதிர் வூட்டுல கோலம் போட்டாச்சு. நம்ம வூடு வாச தெளிக்காம கிடக்கேன்னு உண்ர ஒரு குத்தல் போல. நவுந்து போகற என்னைப் பார்த்து நமுட்டு சிரிப்பு சிரிக்கற அவ நைட்டிய உசத்தி முழங்கால் வரை மடிச்சிருக்கா.. எட்டு வயசா.. இல்ல.. ஒரு குடும்பத்தை நிர்வாகம் பண்ணுற சாமர்த்தியக்காரியா.. கண்ணு பூ மாதிரி சிரிக்குது..

மாரி கைலியும் பனியனுமா ஆறு அடிக்கு நிக்கிறான் (ர்).. என்னை விட வயசானவன்.. ஆனா என்ன.. நாம் சொல்லிக்கிற 'புத்தி' இல்ல.. இந்த புத்திக்கா இத்தனை பாடுபட்டோம்னு தோணுது நாட்டு நடப்பைப் பார்த்தா.. அவனைப் போல அடுத்தவங்க மனசு நோகாம இருக்கத் தெரியலியே..

தள்ளுவண்டில குப்பைய தள்ளிகிட்டு போற அம்மணி.. சைக்கிள்ல சர்வ அலட்சியமா வீட்டு வேலைக்குப் போற 'பாப்பா'.. ரெண்டு கண்ணும் பிறவியிலயே ரெண்டு பக்கம் பார்க்கிற குட்டிப் பொண்ணு.. யாரும் இடிச்சுட்டு போயிடப் போறாங்கன்னு தெருவோரமா நடக்கிற சாமித்தாத்தா..

தெனமும் மனுஷங்க கண்ணுல படறப்பல்லாம் மனசு பூக்குது.. ஒவ்வொருத்தரும் என்ன மாதிரி அழகு.. ஒவ்வொருத்தர்க்குள்ளியும் ஒரு வாழ்க்கை.. அவங்க உடம்பு அமைப்பு.. பார்வை.. பேச்சு..

எல்லார்ட்டியும் நிக்க.. ஒரு வார்த்தை பேச.. கைய புடிச்சு பார்க்க.. கன்னம் வருட.. நேசிப்பை சொல்ல.. ப்ரியத்தை பகிர..



எதுக்கும் நேரம் இல்லாம பரபரன்னு இப்படி அலையறேனேன்னு தோணுது..

கால்ல சக்கரம் கட்டி பொறந்த வாழ்க்கை.. எதையுமே அனுபவிக்காம காலண்டர் கிழிச்சுகிட்டு..

**ரிஷபன்**

---



## ஹைக்கூ!

வீசியது யாரோ ?
வைரங்களை வானில்
நட்சத்திரங்கள் !

காட்சிப்பிழை வளரவுமில்லை
தேயவுமில்லை நிலவு !

வாழ்நாளில்
வாழ்ந்த நாள் எவ்வளவு ?

மீனவர்களின் கண்ணீரால்
உப்பானதோ ? கடல் நீர் !

காத்திருந்தான் வலை
விரித்து வரவில்லை மீன்கள்
வந்தான் சிங்களன் !

அரசுகளைப் போலவே
மக்களிடம் நிதிநிலை
பற்றாக்குறை !

திருடியது யாரோ ?
நிலவை அமாவாசை !

இடிந்து விழுந்தது வீடு
மணல் கொள்ளையன்
தலையில் !

பலநாளில் கட்டியது
சிலநிமிடங்களில் அழித்தான்
தேன் கூடு !

பயன்படாது சோற்றுக்கு
எரிமலை கக்கும் குழம்பு !

பயன்படுத்துவதில்லை
சிறகிருந்தும் மட வாத்து !

ஒற்றைக்கால் தவம்
வரமாக மீன் கொக்கு !

பட்டுப் பூச்சிகளின்
சோகம் சொல்லியது
பட்டுச்சேலை !

புழுவின் மீதான ஆசை
போனது உயிர் மீனுக்கு !

உணவில் நவீனம்
கேடு தரும்
உடல் நலத்திற்கு !

அறம் என்றால்
என்ன ? என்றார்
அரசியல்வாதி !

**கவிஞர் இரா .இரவி !**

---

வெவ்வேறு கிளைகளை
உருவாக்கிக் கொண்டே
இருக்கும் என்றைக்குமாய்ப்
பழுதடையா
உயிர்ப்புடன்
விழிகளறியா
ஆணிவேர்.



**கீதா**
**கண்ணன்**
ஸ்ரீரங்கம்

---

நம் இருவருக்கும்
பழக்கமான ஒருவரின்
அலைபேசியில்... கேட்கும்...
உன் குரல்...

ஆளரவமற்ற
ஆழ்கிணற்றில்
தவிப்பவனுக்கு...
தொலை
தூரத்தில்
கேட்கும்
மனிதக் குரல்
போலிருக்கிறது... எனக்கு...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---

வயல் வரப்பில்
நின்றுகொண்டு
ஏன் இப்படி உழுது
கொண்டிருக்கிறாய்
என் வயதை?!

**சு. அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்



நான் என்ன ஆசைப்பட்டா
எழுதிக் கொண்டிருக்கிறேன்
கவிதை... உன் அழகு
ஆணையிட்டதால்
எழுதிக் கொண்டிருக்கிறேன்!

**சு அருண் பிரகாஷ்**

---




## பெண் கல்வி !

பெண் கல்வி கட்டாயம் வேண்டுமென்று அன்றே
பெரியார் அனைவரிடமும் வலியுறுத்தினார் நன்றே !

பெண்கள் மாநாட்டில் அதனால்தான் அவர்கள்
பெரியார் என்ற பட்டத்தை வழங்கி மகிழ்ந்தனர் !

ஆண் படித்தால் அவனுக்கு மட்டுமே நன்மை
பெண் படித்தால் இரு குடும்பத்திற்கு நன்மை !

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்ற
அறிவிலிகள் கூற்று மதிப்பற்றுப் போனது !

தீவிரவாதிகள் மிரட்டியபோதும் அஞ்சாமல்
தன்னம்பிக்கையோடு பயின்றாள் மலாலா !

ஏவுகணை ஏவிடும் அறிவியல் கூடத்தில்
ஏற்றமிகு பெண்கள் பங்களிப்பு உள்ளன !

உலகின் தலைசிறந்த நிறுவனங்களின்
உயர்ந்த பொறுப்பில் பெண்கள் உள்ளனர் !



இந்திய ஆட்சிப் பணியிலும் பெண்கள்
இனிய முத்திரைப் பதித்து வருகின்றனர் !

இந்திய காவல்துறைப் பணியிலும் பெண்கள்
இனிய முத்திரைப் பதித்து வருகின்றனர் !

நீதித்துறையிலும் நங்கையர் பலர்
நல்ல பல தீர்ப்புகள் வழங்கி வருகின்றனர் !

மருத்துவத் துறையிலும் மங்கையர் பலர்
மகத்தான சாதனைகள் புரிந்து வருகின்றனர் !

விளையாட்டுத் துறையிலும் வஞ்சியர் பலர்
வானளாவிய சாதனைகள் நிகழ்த்தி வருகின்றனர் !

ஆணை விட பெண் அறிவாற்றல் மிக்கவள்
அனைத்துத் துறையிலும் மெய்ப்பித்து வருபவள் !

பெண் படித்தால் வீட்டிற்கு மட்டுமல்ல
பிறந்த நாட்டிற்கும் பெருமைகள் சேரும் !

பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம்
பார் போற்றும் புகழைப் பெற வைப்போம் !

**கவிஞர் இரா .இரவி !**

---



## பிரார்த்தனை

எண்ணத்தின் செயல் வடிவை
எதிர்பார்த்த காத்திருப்பு

வாகனப் பயணத்தில்
வழித் தடை நிறுத்தத்தில்
வயிற்றில் சுமந்த கரு
தோளில் சுமையாக
அரைசாண் வயிற்றுக்கு
உணவு கேட்கும் பெண்மை

அருள் வேண்டி நிற்கும்
ஆலயத்தில் அன்றாட
உணவுக்கு அல்லலுறும் ஒரு
கூட்டம்

தேவையென பல இருக்க
தேடுதலே சுகமாகி
தொலைவான ஒரு பயணம்

முயலாமல் இருந்துவிட்டு
வாழ்க்கையின்
வெற்றிப் பயணத்திற்குப்
பிரார்த்தனை

ஆலய நுழைவில்
ஆண்டவன் சந்நிதியில்
விழி மூடி மனமுருக
வேண்டச் செய்யும்

இடையூறும் தடைகளும்
இடையறாது நீங்க
நித்தம் ஒரு பிரார்த்தனை

கேட்கப்படும் பிரார்த்தனைகள்
ஏராளம் இங்கு உண்டு
தன்னலம் மிகுந்த
பிரார்த்தனையே
தரணியில் உண்டு

கொடுக்கும் மனம்
கேட்பதில்ல
வேண்டுவன மட்டுமே
பிரார்த்தனையா?



கொடுக்கவும்
பிரார்த்தனை
வைப்போம்
உதவும் மனம்
கேட்டு நிற்போம்.

**தமிழ்நிலா**

---



## பாவையர் மலர்

ஒவ்வொரு பாவையரும்
ஒவ்வோர் அழகு மலர்!
நீயோ அழகு தேவதைகளே
ரசிக்கும் பாவையர் மலர்!
உத்தம புத்திரனாக
இருந்த என்னை
உன்னை மட்டுமே
சுற்ற வைத்து உத்தம
வில்லனாக்கியவள் நீ!

காதலித்துப் பார்
கவிதை எழுத வரும்
என்று சொன்னார்கள்!
எனக்கோ கவிதையைக்
காதலிக்கும் அதிர்ஷ்டம்
வந்துஎன் இல்லத்து அழைப்பு
மணியை அடித்தது!
இப்பொழுதெல்லாம் நான்
வாசிப்பதும்
உன்னைத்தான், சுவாசிப்பதும்
உனக்காகத்தான்!
நான் வசந்த மாளிகை
ஆனந்த் இல்லை!
நீ வந்தால் மட்டும்
ஆனந்தத்தில் குளிக்கும்
உன் ஆசை நாயகன்!
உன்னைப் பார்த்தாலே
பரவசம்!
நீ வந்தாலே வசந்தம்!
நாம் இணைந்தாலோ
காதலே நம் மீது
காதலாகி விடும்!



**முத்து ஆனந்த்**
வேலூர்


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756




**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்ப்ர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

**7540003588**

























**ST COURIER**

The People's Choice

ISO 9001:2008 Certifed

**DOMESTIC- INTERNATIONAL**

Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.

**Cell: 9176130601**

**Get Free Jobs Alert on Your WhatsApp**


Register Yourself on our

**8122664699**

WhatsApp Your Name, Age & Address on Above Number

Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs














முனீஸ்வர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998



# பல்சுவை களஞ்சியம்



## கடவுள் நம்பிக்கை

கடவுள் நம்பிக்கை எப்படி இருக்கவேண்டும் தெரியுமா?

ஒரு குருவும் சீடனும் அடர்ந்த காட்டின் வழியே நடந்து வந்து கொண்டிருந்தனர்.
இரவு நெருங்கவே ஒரு மரத்தின் அடியில் உறங்கி காலை நடை பயணத்தை தொடரலாம் என்று முடிவு செய்து ஒரு மரத்தை தேர்ந்தெடுத்து அதனடியில் உறங்கினர்.
மறுநாள் பொழுது விடிந்தது குருவும் சீடனும் ஆற்றில் நீராடினர் இருவரும் சூரியனை வணங்கினார்கள்
அப்பொழுது சூரிய பகவான் அசிரியாக தோன்றி
"வேத குருவே! உமக்கு வணக்கம் உங்கள் வணக்கத்தை நான் ஏற்றுக்கொண்டேன்
இன்று சூரியனான நான் மறைவதற்குள் உங்கள் சீடனின் உயிர் ஒரு ராஜநாகத்தால் தீண்ட பட்டு இறக்க நேரிடும். முடிந்தால் உங்கள் குரு வலிமையால் அவனை காப்பாற்றுங்கள் எ கூறி மறைந்தான்
குருவும் சூரியனை வாங்கிவிட்டு சீடனை கவலையோடு பார்த்தார்
இருவரும் சிறிது பழங்களை பறித்து பசியாறிய பின் அருகே உள்ள கோவிலின் இறைவனை வணங்கினர்
பின் ஊரை தாண்டி காடு வழியே நடந்து சென்றனர்.
சற்று களைப்பு ஏற்படவே இருவரும் ஒரு மரத்தடியில் அமர்ந்து கண் அயர சீடன் தூங்கினானே தவிர குரு தூங்கவில்லை.
சீடனின் உயிரை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று நினைத்து விழித்து இருந்தார்.
அப்பொழுது ஒரு ராஜநாகம் படம் எடுத்த படி சீடனின் அருகே அவனை கொல்ல வந்தது.
இதை பார்த்து பதை பதைத்த குரு ராஜநாகமே நில் என்று ஆணையிட்டார். ராஜநாகமும் குருவின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு நின்றது.
குரு ராஜநாகத்தைப் பார்த்து, "நீ என் சீடனின் உயிரை எடுக்கவே வந்துள்ளதை நான் அறிவேன். குரு பக்தி மிகுந்த சீடனை காப்பாற்றுவது ஒரு குருவின் கடமை. அதனால் என் சீடனின் உயிரை எடுக்க நான் அனுமதிக்கமாட்டேன்", என்று தடுத்தார்.
இப்பொழுது ராஜநாகம் பேசியது. "வேத குருவே உங்கள் சீடனின் கழுத்தில் என் நாவை வைத்து ரத்தத்தை உறிஞ்சு எடுக்க வேண்டும் என்பது எனக்கு காலன் இட்ட கட்டளை. அனைத்தும் உணர்ந்த தாங்களே என் கடமையை செய்ய விடாமல் இப்படி தடுத்து என்னை நிறுத்தலாமா?" என்று முறை இட்டது.
உடனே குரு "அப்படி என்றால் என் சீடனின் ரத்தத்தை உறிஞ்ச வேண்டும் என்பது தானே உனக்கு காலன் இட்ட கட்டளை
சரி, சற்று பொறு! நானே அவனது ரத்தத்தை உனக்கு ஊட்டுகிறேன். அதை உறிஞ்சியதும் நீ உன் கடமையை செய்து விட்ட பலனை பெறுவாய்." என்று கூறி
ஒரு சிறு கத்தியை எடுத்த குரு அதை சீடனின் கழுத்தில் வைத்து ரத்தம் வரும் அளவு ஆழம் வைத்து கத்தியை கீறினர்.
தன் கழுத்தில் கூர்மையாய் எதோ கீறுவதை உணர்ந்த சீடன் கண் விழித்து பார்த்தான். குரு தன் கழுத்தில் கத்தியை வைத்து கீறுவதை உணர்ந்து பின் கண்மூடி சிறிதும் அசையாமல் படுத்த படியே



இருந்தான்
சீடனின் பல துளி ரத்தத்தை எடுத்த குரு அதை ராஜநாகத்துக்கு ஊட்டிவிட்டார்
ராஜநாகமும் குருவின் சாபத்துக்கு நாம் ஆளாகாமல் நம் கடமை நிறைவேறியதே என்ற மகிழ்வோடு ரத்தத்தை உறிஞ்சி விட்டு வந்த வழியே சென்றது
குருவும் சீடனின் உயிரை காப்பாற்றிய நிம்மதியோடு அவனது கழுத்தில் முன்னமே தான் எடுத்து வைத்திருந்த பச்சிலை சாற்றை பிழிந்து சீடனின் கழுத்து பகுதியில் பற்று போட்டு விட்டு நிம்மதியோடு உறங்க சென்றார
சிறிது நேரம் இருவரும் நன்றாக களைப்பு தீர உறங்கிய பின் எழுந்து அமர்ந்தனர்.
அப்பொழுது சீடன் தன் கழுத்தில் பற்று இருப்பதை தொட்டு பார்த்து விட்டு எதுவும் குருவிடம் கேட்காமல்
"குருவே நாம் நடை பயணத்தை தொடரலாமா?" என்று கேட்டான்
குரு புன்னகையுடன், "சீடனே! நீ சற்று முன் உறங்கும்போது நான் உன் கழுத்தில் கத்தி வைத்த போது நீ என்ன நினைத்தாய்? உனக்கு பயம் எதுவும் உண்டாகவில்லையா?" என்று புன்னகையுடன் கேட்டார்
சீடன், "குருவே என் கழுத்தில் எதோ ஊறுவதை உணர்ந்தேன். விழித்தும் பார்த்தேன். கையில் கத்தியுடன் நீங்கள் என் கழுத்தை அறுப்பதை உணர்ந்தேன்.
ஆனால் என் குருநாதராகிய தாங்கள் எனக்கு எந்த கெடுதலும் செய்ய மாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். அதனால் நான் நிம்மதியாக உறங்கினேன்
இப்பொழுது எழுந்ததும் என் கழுத்தில் உள்ள மூலிகை பற்றை பார்த்தேன் என் குருநாதராகிய உங்களுக்கு என் ஊன், உயிர், உள்ளம் அனைத்தும் அர்ப்பணம். அதனால், எனக்கு அதிலும் எந்த வித கவலையும் இல்லை." என்று கூறி பணிந்து நின்றான்.
குருவும் சீடனை ஆற தழுவி எழுந்து அவனோடு நடக்கலானார்.
நண்பர்களே! நமக்கு விதித்த படி நடக்கும் நல்லது, கெட்டது எல்லாவற்றுக்கும் இறைவனே பொறுப்பு என்று அவனை சரணடைந்து விட்டால், நமக்கு நடக்க இருக்கும் தீமையும் இறைவன் அருளால் நன்மையாக நடக்கும். இதில் சீடன் தான் நாம் குரு தான் நம் கடவுள் ராஜநாகம் தான் நம் விதி

# மீம்ஸ்







## #காயிகறிகள்:–

1) என்றும் 16 வயது வாழ ஓர் ""நெல்லிக்கனி.""
2) இதயத்தை வலுப்படுத்தி ""செம்பருத்திப் பூ"".
3) மூட்டு வலியை போக்கும் ""முடக்கத்தான் கீரை.""
4) இருமல், மூக்கடைப்பு குணமாக்கும் ""கற்பூரவல்லி"" (ஓமவல்லி).
5) நீரழிவு நோய் குணமாக்கும் ""அரைக்கீரை.""
6) வாய்ப்புண், குடல்புண்களை குணமாக்கும் ""மணத்தக்காளிகீரை"".
7) உடலை பொன்னிறமாக மாற்றும்""பொன்னாங்கண்ணி கீரை"".
□ மாரடைப்பு நீங்கும் ""மாதுளம் பழம்.""
9) ரத்தத்தை சுத்தமாகும் ""அருகம்புல்.""
10) கான்சர் நோயை குணமாக்கும் "" சீதா பழம்.""
11) மூளை வலிமைக்கு ஓர் ""பப்பாளி பழம்.""
12) நீரிழிவு நோயை குணமாக்கும் "" முள்ளங்கி.""
13) வாயு தொல்லையிலிருந்து விடுபட ""வெந்தயக் கீரை.""
14) நீரிழிவு நோயை குணமாக்க "" வில்வம்.""
15) ரத்த அழுத்தத்தை குணமாக்கும் ""துளசி.""
16) மார்பு சளி நீங்கும் ""சுண்டைக்காய்.""



17) சளி, ஆஸ்துமாவுக்கு ""ஆடாதொடை.""
18) ஞாபகசக்தியை கொடுக்கும் ""வல்லாரை கீரை.""
19) ரத்த அழுத்தத்தை குணமாக்கும் ""பசலைக்கீரை.""
20) ரத்த சோகையை நீக்கும் "" பீட்ரூட்.""
21) ஜீரண சக்தியை அதிகப்படுத்தும் "" அன்னாசி பழம்.""
22) முடி நரைக்காமல் இருக்க கல்யாண முருங்கை ((முள் முருங்கை)
23) கண் பார்வைக்கு ""கேரட் + மல்லிகீரை + தேங்காய் ஜூஸ்""
24) மார்புசளி, இருமலை குணமாக்கும் ""தூதுவளை""
25) முகம் அழகுபெற ""திராட்சை பழம்.""
26) அஜீரணத்தை போக்கும் "" புதினா.""
27) மஞ்சள் காமாலை விரட்டும் “கீழாநெல்லி”
28) சிறுநீரக கற்களை தூள்தூளாக ஆக்கும் ""வாழைத்தன்டு"".



## விடுகதை



| | |
|---|---|
| பொட்டுப்போல் இலை இருக்கும், பொரிபோல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன? | முருங்கைமரம் |
| என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்? | துவாரம் |
| தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன? | தொட்டா சுருங்கிச் செடி |
| அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன? | நிலா |
| பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன? | பெட்ரோல் |

## ஜோக்ஸ்

அந்த எழுத்தாளர் மாவு மில்லில் வேலை பார்க்கிறாராம்.
அதான் அரைத்த மாவையே அரைக்கிறாரா

----------------

தானத்தில் சிறந்தவர் நமது மன்னர் என்று எப்படிப் பெயர் எடுத்தார்?
போர்க்களத்தில் கூட எதிரி நாட்டு மன்னரிடம் சமா”தானம்” பேசி சமாளித்து விடுவார்.

----------------

எங்கே ஈ காட்டு பாக்கலாம்?
நீங்க ‘ஈ” பார்த்ததில்லையா டாக்டர்!

----------------

2 ல 5 போகலைன்னா பக்கத்துல கடன் வாங்கணும்.
பக்கத்துல சரவணன் கிட்ட கேட்டேன் தர மாட்டேங்குறான், சார்!

----------------

பார்த்து அறிவது பலன் தருமா? பார்த்து தெரிவது பலன் தருமா? இல்லை பார்த்து புரிவது தான் பலன் தருமா?
பார்த்து எழுதுவதே பலன்தரும், சார்.



----------------

மன்னருக்கு கிரிக்கெட் பைத்தியம் முத்தி போச்சு.
எப்படி சொல்றீங்க?
எதிரி மன்னரிடம் போரை “பகல் இரவு” போராக வைத்துக்கொள்ளலாமா என்று கேட்டு ஓலை அனுப்பி இருக்கிறார்.

----------------

முதுகில் பல்லி விழுந்தால் காலண்டரில் குழப்பம் னு போட்டிருக்கே!
நம்ம முதுகில் பல்லி விழுந்தால் காலண்டர்ல ஏன்டா குழப்பம் வரணும்.

----------------

நல்லா படிச்சு பரீட்சை எழுதியும் இப்படி ஃபெயில் ஆயிட்டோமேன்னு கொஞ்சம் கூட கவலை இல்லாம நிக்கிற?
நீங்கதானப்பா சொன்னிங்க “கடமையை செய் பலனை எதிர்பார்க்காதேனு”



# சமையல் அறை ஸ்பெஷல்



# வல்லாரை கீரை சமைப்பது எப்படி..?

வல்லாரை கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, வைட்டமின் ஏ, வைட்டமின் சி மற்றும் தாது உப்பு அதிகமாக நிறைந்துள்ளது. காலையில் எழுந்தவுடன் தினமும் வல்லாரை கீரையினை பச்சையாக மென்று சாப்பிட்டுவர மூளை பகுதியில் இருக்கும் நரம்புகள் பலம் பெரும், அதுமட்டுமல்லாமல் ஞாபக சக்தியும் அதிகரிக்க செய்யும். சரி இப்போது வல்லாரை கீரை வைத்து என்னென்ன ரெசிப்பீஸ் (vallarai keerai reci-pe) செய்யலாம் என்பதை தெரிந்துக்கொள்ளுவோம்..!



தேவையான பொருள்: சின்ன வெங்காயம் (10), பூண்டு (6 பல்), வல்லாரை கீரை நறுக்கியது (3 கப்), தண்ணீர் தேவையான அளவு, புளிச்சாறு 3 டேபிள் ஸ்பூன், மல்லித்தூள் 2 டேபிள் ஸ்பூன், மிளகாய் தூள் 2 டீஸ்பூன், உப்பு தேவையான அளவு, சர்க்கரை 1 டீஸ்பூன். வேக வைக்க: துவரம் பருப்பு 1/2 கப், மஞ்சள் தூள் 1 டீஸ்பூன், சீரகம் 1 டீஸ்பூன். தாளிக்க: எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன், கடுகு மற்றும் சீரகம் 1 டீஸ்பூன், உளுத்தம் பருப்பு 1 டீஸ்பூன், பெருங்காயத்தூள் 1/4 டீஸ்பூன், வரமிளகாய் 1.

செய்முறை:
வல்லாரை கீரை சாம்பார் செய்வதற்கு முதலில் குக்கரில் துவரம் பருப்பை போட்டு, அதனுடன் மஞ்சள் தூள் மற்றும் சீரகம் சேர்த்து தண்ணீர் ஊற்றி அடுப்பில் 2-3 விசில் விட்டு அதன்பிறகு அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும்.
இப்போது அடுப்பில் ஒரு கடாயை வைத்து சிறிதளவு எண்ணெய் ஊற்றி தாளிக்க கொடுத்துள்ளதை சேர்த்து தாளித்துக்கொள்ளவும்.
கடாயில் சின்ன வெங்காயம், பூண்டு சேர்த்து 1 நிமிடம் வரை நன்கு வதக்கி கொள்ளவும்.
அடுத்து அதனுடன் நறுக்கி வைத்துள்ள வல்லாரை கீரையினை சேர்த்து வதக்கிய பிறகு தேவையான அளவிற்கு தண்ணீர் சேர்த்து கொதிக்கவைக்க வேண்டும்.
அடுத்ததாக அவற்றில் மல்லித்தூள், மிளகாய்த்தூள், கரைத்து வைத்துள்ள புளி சாறினை சேர்த்து நன்கு கொதிக்கவைத்து, அதன் பிறகு குக்கரில் உள்ள பருப்பினை நன்றாக மசித்து சேர்த்து தேவையான அளவிற்கு உப்பு மற்றும் சர்க்கரை சேர்த்து நன்றாக கிளறி, 5-8 நிமிடம் வரை கொதிக்க விட்டு இறக்கினால் டேஸ்டான வல்லாரை கீரை சாம்பார் தயார்.

தேவையான பொருள்: பொடியாக நறுக்கிய வல்லாரை கீரை 1 கப், பச்சைமிளகாய் 1, தோசை மாவு 1 கப், சீரகம் 1 டீஸ்பூன், உப்பு, எண்ணெய் தேவையான அளவு.

## தேங்காய், தக்காளி சேர்க்காத மதுரை நீர் சட்னி செஞ்சி பாருங்க..!

நீர் சட்னி செய்ய தேவையான பொருட்கள்:
பச்சை மிளகாய் 6
பெரிய வெங்காயம் 3
பொட்டுக்கடலை 1/4 கப்
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு





கடாயை அடுப்பில் வைக்கவும்:

கடாயை அடுப்பில் வைக்கவும் பின் அதில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி கொள்ள வேண்டும்.
பின் அதில் பச்சை மிளகாய் 6 அல்லது உங்களுக்கு தேவையான அளவு சேர்த்து நன்றாக வதக்க வேண்டும். பின் அதில் வெங்காயத்தை பொடிப்பொடியாக நறுக்கி அதில் சேர்த்து வதக்க வேண்டும்.

வெங்காயம் பொன்னிறமாக வதங்கியதும் அதை அடுப்பில் இருந்து இறக்கி ஆறவிட வேண்டும்.
இனிமேல் ஆரஞ்சு பழத்தோலை தூக்கியெறியாமல் இந்த ரெசிபியை ஒருமுறை செய்து சுவைத்து பாருங்கள்
மிக்சி ஜாரை எடுத்து கொள்ளவும்:
மிக்சி ஜாரை எடுத்து கொள்ளவும்

அடுத்து ஒரு மிக்சி ஜார் எடுத்து கொள்ள வேண்டும். பின் அதில் நாம் வதக்கிய பொருட்களை சேர்த்து கொள்ள வேண்டும்.

பின் அதனுடன் 1/4 கப் அளவிற்கு பொட்டுக்கடலை மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாக அரைத்து கொள்ள வேண்டும். ரொம்ப நைசாக அரைக்க வேண்டாம். பின் அதில் போதுமான அளவு அதாவது 2 டம்ளர் தண்ணீர் சேர்த்து கொள்ள வேண்டும்.

பின் கடாயை அடுப்பில் வைத்து அதில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி, பின் அதில் கடுகு, கருவேப்பிலை மற்றும் காய்ந்த மிளகாய் சேர்த்து வதக்க வேண்டும்.
அடுத்து சிறிதளவு வெங்காயத்தை சேர்த்து நன்றாக வதக்கிய பின் நாம் அரைத்து வைத்துள்ள சட்னியை இதில் சேர்த்து கொள்ள வேண்டும்.
அவ்வளவு தான் சட்னி ரெடி..! இந்த சட்னியை நீங்களும் உங்கள் வீட்டில் செய்து பாருங்கள்..! இன்னும் 2 இட்லி வேண்டும் என்று கேட்டு வாங்கி சாப்பிடுவார்கள்.

# ஐயர் வீட்டு உளுந்தோரை சாதம்..!





உளுந்தோரை சாதம் செய்முறை
என்னதான் வித்தியசமான சமையல் செய்து சாப்பிட்டாலும் கோவில் சாப்பாடுக்கு தனி ருசிதான். அதுவும் பெருமாள் கோவிலில் கொடுக்கும் சாதத்திற்கு என்றும் தனி பெரும் ருசி உள்ளது. பெரும்பாலும் அவர்கள் என்ன சேர்த்து சாதம் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அந்த ரகசியத்தை இப்போது உங்களுக்கு சொல்லிக்கொடுக்க போகிறேன்.

இன்று நாம் ஐயர் வீட்டில் செய்யும் அருமையான உணவை எப்படி செய்கிறது என்பதை தெரிந்துகொள்ள போகிறோம். அதேபோல் கோவிலில் வித்தியாசமான நிறத்தில் அதாவது காபி தூள் நிறத்தில் இருக்கும். அது என்ன சாதம் அந்த சாதத்தின் செய்முறையை பற்றி பார்ப்போம்..!

உளுந்தோரை சாதம் செய்முறை:
உளுத்தம் பருப்பு 3 டீஸ்பூன்
சிவப்பு மிளகாய் 5 மிளகாய்
மிளகு 1/4 டீஸ்பூன்
சீரகம் 1/4 டீஸ்பூன்
உப்பு தேவையான அளவு
வேர்க்கடலை கொஞ்சம்

குறிப்பு:
1 இதில் நெய், முந்திரி சேர்த்துக்கொள்ளலாம்.

இதையும் தெரிந்துகொள்ளுங்கள்
ஐயர் வீட்டு முருங்கைக்காய் குழம்பு..! வீட்டு வாசல் வரை மணக்கும்..!

செய்முறை: 1
உளுந்தோரை சாதம் செய்முறை

அடுப்பை பற்றவைத்து கடாயில் 1 ஸ்பூன் எண்ணெய் விட்டு 3 ஸ்பூன் உளுத்தம்பருப்பு சேர்த்து வறுத்து கொள்ளவும்.

அடுத்து அதனுடன் மிளகாய், 1 கொத்து கருவேப்பிலை, 1/4 ஸ்பூன் மிளகு, 1/4 ஸ்பூன் சீரகம் சேர்த்து நன்கு வறுத்துக் கொள்ளவும். கருக விடாமல் சிவந்த பின்பு அடுப்பை விட்டு இறக்கி தனியாக எடுத்துக் கொள்ளவும். அதன்பின் அதனை ஒரு மிக்சி ஜாரில் போட்டு அரைத்து பொடி செய்து கொள்ளலாம்.

அடுத்து அதே கடாயில் 1 ஸ்பூன் எண்ணெய் விட்டு, 1/4 ஸ்பூன் கடுகு, 1/4 ஸ்பூன் உளுந்து சேர்த்து, கடுகு பொரிந்த உடன் அதில் 1 டேபிள் ஸ்பூன் கடலைப்பருப்பு சேர்த்து சிறிது நேரம் அப்படியே வறுத்துக்கொள்ளவும்.

அடுத்து அதில் 1 கொத்து கருவேப்பிலை சேர்த்துக் கொள்ளவும். அதன் பின் அதனுடன் 1/4 ஸ்பூன் பெருங்காயத்தூள் சேர்த்து கலந்து விடவும்.

பின்பு அதில் வடித்து வைத்துள்ள சாதத்தை சேர்த்து அரைத்து வைத்துள்ள பொடியை அதில் சேர்க்கவும். இப்போது இது அனைத்தும் சேர்த்து மீடியம் பிலேமில் வைத்து கலந்துவிடவும்.

கடைசியாக உப்பு சேர்த்து கலந்துவிடவும். இந்த உளுந்தோரை ராகு பகவானுக்கு மிகவும் விசேஷம். ஆகவே இதனை கோவிலில் கொடுப்பார்கள். இதனை வீட்டில் மதிய உணவுக்கு குழந்தைகளுக்கு செய்து கொடுக்கலாம்.

# கிராமத்து அகத்திப்பூ பொரியல்

அகத்திப்பூ வெள்ளை மற்றும் சிகப்பு வண்ணங்களில் கிடைக்கும். வெள்ளையாக உள்ள பூவை விட சிகப்பு பூ அதிக சுவை மிகுந்தது.கிராமங்களில் பண்டை காலம் முதல் அதிகமாக உபயோகிக்கும் ஒன்று இந்த சிகப்பு அகத்திப்பூ.

தேவையான பொருட்கள்
250கிராம் சிகப்பு அகத்திப்பூக்கள்
1/2 கப் சாம்பார் வெங்காயம்
1 டீஸ்பூன் மிளகாய் தூள்
1/4 டீஸ்பூன் மஞ்சள் தூள்
1/4 கப் தேங்காய் துருவல்
தேவையான அளவுஉப்பு



தாளிக்க:
1டேபிள் ஸ்பூன் எண்ணெய்
1/4டீஸ்பூன் கடுகு
1 டீஸ்பூன் உளுந்து பருப்பு
1டீஸ்பூன் கடலை பருப்பு
கறிவேப்பிலை

சமையல் குறிப்புகள்


சிகப்பு அகத்தி பூக்களை எடுத்து சுத்தம் செய்து, தண்ணீரில் கழுவி தயாராக வைக்கவும்.

பின்னர் பூக்களை பொடியாக நறுக்கவும். அத்துடன் சம்பார் வெங்காயத்தை தோல் நீக்கி பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.
வாணலியை ஸ்டவ்வில் வைத்து சூடானதும் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, உளுந்து பருப்பு, கடலை பருப்பு, கறிவேப்பிலை சேர்த்து நன்கு வதக்கவும்.
பின்னர் நறுக்கி வைத்துள்ள வெங்காயம் சேர்த்து வதக்கவும்.
அத்துடன் நறுக்கி வைத்துள்ள அகத்திப்பூவை சேர்த்து வதக்கவும்.
அத்துடன் மஞ்சள் தூள்,மிளகாய் தூள் சேர்த்து கலந்து விடவும்.
அத்துடன் உப்பு கலந்து கொஞ்சமாக தண்ணீர் தெளித்து, மூடி வைத்து ஐந்து நிமிடங்கள் மிதமான சூட்டில் வைத்து வேக வைக்கவும்.
பின்னர் திறந்து தேங்காய் துருவல் சேர்த்து நன்கு கலந்து விட்டு இறக்கினால் சுவையான அகத்தி பூக்களை கொண்டு செய்த பொரியல் தயார்.
தயாரான பொறியலை எடுத்து ஒரு பௌலில் சேர்க்கவும்.
இப்போது மிக மிக சுவையான, சத்தான கிராமத்து ஸ்டைல் அகத்தி பூ பொரியல் சுவைக்கத்தயார்.

## உங்கள் வீட்டு சமையல் அறையில் இதை மட்டும் செய்யுங்கள்..

# உணவுப்பஞ்சம் வராது

நாம் உண்ணும் உணவு ருசியோடு இருப்பதோடு ஆரோக்கியத்தை தருவதாகவும் இருக்க வேண்டும். எத்தனையோ நாடுகளில் ஒருவேளை உணவு கூட கிடைக்காமல் வறுமையில் வாடுகிறார்கள். இந்தியாவில் இலவச அரிசி, கோதுமை உள்ளிட்ட பல திட்டங்களாலும் பள்ளிகளில் வழங்கப்படும் இலவச உணவுகளாலும் பலரும் பசியாறுகின்றனர். நம்முடைய வீட்டில் உணவு பஞ்சம் வராமல் இருக்க குறைவில்லாமல் பொருட்கள் இருக்க என்ன செய்ய வேண்டும் எனறு பார்க்கலாம்.



சமையல் அறை வாஸ்து: நம்முடைய வீட்டில் எத்தனையோ அறைகள் இருந்தாலும் சமையல் அறை முக்கியமானது. அங்குதான் நம்முடைய எல்லோருடைய ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுகிறது. அம்மாவின் கை பக்குவ ருசியை மட்டும் கொடுப்பதில்லை நம்முடைய ஆரோக்கியத்தையும் நிர்ணயம் செய்கிறது. பொதுவாக வீடுகளில் வாஸ்து படி சமையல் அறை அக்னி மூலை எனப்படும் தென்கிழக்கு மூலையில்தான் இருக்க வேண்டும் அதுதான் சிறப்பானது.

கிச்சன் மேடை: கேஸ் ஸ்டவ் அல்லது அடுப்பு வைக்கும் மேடை தென்கிழக்கு மூலையில் தெற்கு கிழக்கு சுவரை ஒட்டி அமைக்க வேண்டும். சூரிய ஒளிக்கதிர்கள் சமையல் அறைக்குள் வரும் வகையில் ஜன்னல் அமைப்பது சிறப்பானது. சமைப்பவர் கிழக்கு நோக்கியே சமைக்க வேண்டும். சமையலறையில் பாத்திரம் கழுவும் குழாய் வடகிழக்கில் அமைப்பது நல்லது. வடகிழக்கு மூலை மட்டுமே தண்ணீர் குழாய் அமைக்க நல்ல இடம் இல்லாவிட்டால் பெண்களுக்கு ஆரோக்கிய குறைபாடு ஏற்படும்.

சரியான திசை: எந்த திசையில் சமையல் அறை வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது போல எந்த திசையில் சமையல் அறை கண்டிப்பாக இருக்கக்கூடாது என்றும் வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. வடகிழக்கில் சமையலறை வைத்தால் குடும்பத்தின் பொருளாதார நிலை பாதிக்கும். வடகிழக்கு எனப்படும் ஈசான்ய மூலையில் சமையல் அறை வரவே கூடாது. இது தண்ணீருக்கு மட்டும் ஏற்ற இடம். இங்கே அக்னி வைக்க கூடாது. சமையலறை இருப்பது தோஷத்தை கொடுக்கும். குடும்பத்தலைவியின் உடல் நலம் பாதிக்கப்படும். அக்னியில் தண்ணீர் எப்படி கொதிக்குமோ அதுபோல இங்கே சமையலறை அமைத்துவிட்டால் அந்த குடும்பத்தின் பொருளாதார நிலையில் பாதிப்பு ஏற்படும்.

உடல் நல பாதிப்பு: தென்மேற்கு எனப்படும் கன்னி மூலையில் சமையலறை வைக்கவே கூடாது. உடல் நல பாதிப்பு வரும். துஷ்ட சக்திகளால் பாதிப்பு வரும் கடன் பிரச்சினை திருமண தடை, திருமண வாழ்க்கையில் பிரச்சினை ஏற்படும். அதே போல மேற்கு சமையலறையும் வரவு செலவு சரியாக போகும். நண்பர்கள் கூட விரோதிகளாவார்கள். நல்ல வாய்ப்புகள் கூட தட்டிப்போகும். தென்கிழக்கு பகுதிக்கு எதிர் மூலையான வடமேற்கு வாயுமூலலை பகுதியில் சமையல் அறை வைக்கலாம் ஆனால் அவ்வப்போது லேசாக உடல் நல பாதிப்பு ஏற்படும். தொழில் முன்னேற்றம் வரும் வாஸ்துபடி கட்டிடம் அமைந்தால் தோஷம் வர வாய்ப்பு இல்லை.

சமையலறையில் இதை மட்டும் வைக்காதீங்க..கிச்சனில் இந்த பொருள் இருந்தாலே வீட்டில் பணக்கஷ்டம் வந்துருமாம்

வாஸ்து தோஷம் நீங்க: வீட்டுக்குள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு பகுதிக்கு சமையலறையை மாற்ற இயலாத பட்சத்தில், இருக்கிற சமையலறைக்குள் சின்ன சின்ன மாற்றங்களை செய்யலாம். குறிப்பாக அடுப்பு மேடை கிழக்கு நோக்கி தென்கிழக்கு மூலையில் இருக்க வேண்டும். தவறான சமையல் அறை அமைப்பில் குடியிருப்பவர்கள் ஏழைகளுக்கு அன்னதானம் கொடுக்கலாம். குடும்பத்தில் வறுமை ஏற்படாது. இரவு நேரத்தில் உணவு கொஞ்சமாவது வைக்க வேண்டும்.

உப்பு பாத்திரம்: நம்முடைய உணவில் அதிகம் பயன்படுத்தப்படும் உப்பு மகாலட்சுமியின் அம்சம் நிறைந்தது. அந்த உப்பினை நாம் தினமும் கைகளால் எடுத்துதான் வணங்கி விட்டு சமையலுக்கு போட வேண்டும். அந்த உப்பினை நாம் சரியான இடத்தில் வைக்க வேண்டும். அப்போதுதான் உணவுப்பொருட்கள் நம்முடைய வீட்டில் குறைவில்லாமல் இருக்கும். பொதுவாக சமையல் அறையில் உப்பு போட்டு வைக்கும் பாத்திரத்தை மேலே செல்பில் வைக்கவே கூடாது. சமையல் செய்யும் மேடைக்கு கீழே குனிந்து எடுக்கும் வகையிலோ, கைக்கு எட்டும் இடத்திலோதான் வலது கை பக்கத்தில்தான் உப்பு வைக்க வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் கல் உப்பு வாங்கி கொட்டி வைப்பது செல்வ வளத்தை அதிகரிக்கும்.

அன்னபூரணி: நம்முடைய உணவில் ருசி கூடவும் ஆரோக்கியம் அதிகரிக்கவும் நாம் அன்னபூரணி தாயாரின் படத்தை சமையல் அறையில் மாட்டி வைப்பது சிறப்பானது. இதன் மூலம் வாஸ்து தோஷங்கள் இருந்தாலும் நீங்கும். காசி அன்னபூரணி உலகிற்கே உணவு கொடுப்பவள் எனவே நாம் அன்னபூரணியின் படத்தினை மாட்டி வைப்பதன் மூலம் உணவு தோஷங்கள் இருந்தாலும் நீங்கும். செல்வ செழிப்பு அதிகரிக்கும். எதையும் நம்பிக்கையோடு செய்தால் நல்லவை தேடி வரும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## ஸ்ரீ லட்சுமி ஹயக்கிரீவர் பூஜை





**பொள்ளாச்சி மார்ச் 03:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் குழந்தைகள் பொதுத் தேர்வில் வெற்றி பெற ஸ்ரீலட்சுமி ஹயக்கீரிவருக்கு பூஜை ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவருக்கு வண்ண பூக்களால் அலங்கரித்து, ஹோமங்கள் வளர்த்து, வேத மந்திரங்கள் ஒலிக்க பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாரதனையும் நடைபெற்றது. குழந்தைகள் அனைவரும் பொது தேர்வில் வெற்றி பெற நோட்டு, புத்தகம், எழுதுகோல் ஆகியவற்றை பூஜைகள் வைத்து ஸ்ரீ லட்சுமி ஹயக்கிரீவர் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திருதேர் உத்ஸவம்




ஸ்ரீசக்கரபாணி ஸ்வாமி கோவில் கும்பகோணம் மாசிமக உத்சவம் 9ம் திருநாள் காலை திருதேர் உத்ஸவம் 02/03/26....

## ரோட்டரி சங்கத்தின் தன்னலமற்ற சேவை விருது பெற்ற ஜே. கே. என். பழனிக்கு புதிய நீதிக் கட்சி சார்பில் வாழ்த்து!




**வேலூர், மார்ச் 03:** ரோட்டரிஇண்டர்நேஷனல் உயரிய விருதான தன்னலமற்ற சேவை விருதை பெற்றார் குடியாத்தம் நகர தேசிய ஜனநாயக கூட்டணியின் கதாநாயகன் ஜே.கே .என். பழனி. அவருக்கு புதிய நீதி கட்சியின் குடியாத்தம் நகரச் செயலாளர் கைத்தறி காவலன் எஸ். ரமேஷ் கைத்தறி ஆடை அணிவித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தார் .

இந்தநிகழ்வின்போதுஏபிஎஸ் பேரவை நகரச் செயலாளர் ம. சசிகுமார், நகர மகளிர் அணி செயலாளர் உமா மகேஸ்வரி ஆகியோர் உடன் இருந்தனர் . புதிய நீதி கட்சியின் குடியாத்தம் நகர செயலாளருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தார் ஜே. கே. என் . பழனி.

## திருவண்ணாமலை மாவட்டம்
# தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்




**திருவண்ணாமலை, மார்ச் 03:** தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் 02.03.2026 அன்று காலை 11 மணி அளவில் திருவண்ணாமலை கிராம நிருவாக அலுவலர் சங்க கட்டிடத்தில் மாவட்ட தலைவர் ப கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட துணை தலைவர் அ. ரகுபதி வரவேற்புரையாற்றனார். மாவட்ட துணை தலைவர் ஜி. சோனாசலம், முன்னிலை வகித்தார். மாவட்ட இணை செயலாளர் எம். மாணிக்கம், அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.

முன்னாள் மாநில செயலாளர் சி. சுப்பிரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்.

மாவட்ட செயலாளர் எஸ் பச்சையப்பன் கடந்தகால நடவடிக்கைகள் குறித்து பேசினார். மாவட்ட பொருளாளர் அ. ஆனந்தன் நிதிநிலை அறிக்கை வாசித்தார்.

*முன்னாள் மாவட்ட இணை செயலாளர் தோழர் மல்லிகா, இந்திய கம்யூனிஸ் கட்சியின் தலைவர் சுதந்திரபோராட்ட தியாகி,தகைசால் தமிழர் தோழர் ஆர் நல்லகண்ணு மற்றும் மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது

*மகளிர் தின கருத்தரங்கு துணைகுழுவை அமைத்த பின்பு தேர்தலுக்கு பிறகு மே மாதத்தில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது


*புதிய உறுப்பினர் ஓய்வூதியர் மாத இதழ் சேர்த்தல் மற்றும் இதழ் முடிவடைந்த உறுப்பினர்களிடத்தில் விடுபடாமல் புதுப்பிக்க வட்டகிளை நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுகொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

திருவண்ணாமலை வட்டகிளை தலைவர் ஆர். கண்ணன், செயலாளர் மா. மணி ஆகியோர் உடன் இருந்தனர்.

இறுதியாக மாவட்ட துணை தலைவர் எல். திருவேங்கடம் நன்றி கூறினார்.

தோழமையுடன் எஸ். பச்சையப்பன் மாவட்ட செயலாளர்.

# தேசிய அறிவியல் தினம்


**சென்னை, மார்ச் 03:** தாம்பரத்தை அடுத்த இராஜகீழ்ப்பாக்கத்தில் இயங்கிவரும் ட்ரைலீவ்ஸ் பள்ளிக்குழுமத்தின் பிரம்மாண்ட ரோபோடிக்ஸ் ஹாக்கத்தான்! தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு, ட்ரைலீவ்ஸ் பள்ளிக்குழுமம் (Trileaves Group of Schools) நடத்திய ரோபோடிக்ஸ் ஹாக்கத்தான் (Robotics Hackathon) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியைப் பள்ளியின் தாளாளர் உயர்திரு. சரவணன் அவர்களும், திருமதி. பரமேஸ்வரி பெரியநாயகி அவர்களும் ரிப்பன் வெட்டித் தொடங்கி வைத்தனர். இப்பள்ளிக்குழுமம் பாடப்புத்தகக் கல்வியோடு மட்டுமல்லாமல், மாணவர்களின் உடற்திறனை மேம்படுத்தும் யோகா மற்றும் கராத்தே வகுப்புகளுக்கும், மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் ஓவியம், நடனம் மற்றும் ரோபோடிக்ஸ் போன்ற திறன் மேம்பாட்டு வகுப்புகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**மாணவர்களின் சாதனை:**

ரோபோடிக்ஸ் பயிலும் மாணவர்கள், தாங்கள் உருவாக்கிய புதிய படைப்புகளைக் காட்சிப்படுத்தி, அவற்றின் செயல்பாடுகளைச் செயல்முறை விளக்கத்துடன் ஆர்வமுடன் விவரித்தனர். கடந்த ஓராண்டில் தாங்கள் கற்ற நுட்பங்களைத் திறம்படச் செயல்படுத்திய மாணவர்களின் திறமையைக் கண்டு, பெற்றோர்கள் வியப்பிலும் நெகிழ்ச்சியிலும் ஆழ்ந்தனர்.

தொழில்நுட்ப ரீதியாக மாணவர்கள் அளித்த விளக்கங்கள் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தன. உலகையே தன்வசப்படுத்தி வரும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொழில்நுட்பத்திற்கு வலுசேர்க்கும் வகையில், இதுபோன்ற நவீன ரோபோடிக்ஸ் வகுப்புகளை முன்னெடுத்து வரும் பள்ளி நிர்வாகத்திற்குப் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.இப்பள்ளிக்குழுமம், எதிர்காலத்தில் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துகள்!

## ரோஜா முத்தையா நூலகம் களம் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்திய " தமிழ் அறிவு வளாகம் வரலாற்றில் ஒரு சதுர அடி- திருச்சிராப்பள்ளி சந்திப்பு"



**திருச்சி, மார்ச் 03:** ரோஜா முத்தையா நூலகம் களம் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்திய " தமிழ் அறிவு வளாகம் வரலாற்றில் ஒரு சதுர அடி- திருச்சிராப்பள்ளி சந்திப்பு" மத்திய பேருந்து நிலையம் அருகில் கலையரங்கம் திருமண மண்டபத்தில் 28.02.2026 அன்று நடைபெற்றது.

திரு. ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப(ப.நி) தனது நோக்கவுரையில் , தமிழ் அறிவு வளாகம் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற 3 புள்ளிகளின் இணைப்பாகச் செயல்படும் என்றார்.

முன்னதாக திரு. சுந்தர் கணேசன் தனது நோக்கவுரையில் ரோஜாமுத்தையாநூலகப்பயணம் ஒரு லட்சம் ஆவணங்களுடன் தொடங்கி ஐந்தரை லட்சமாகப் பெருகியுள்ளது பற்றியும் நூல்கள் சேகரம் மற்றும் இதரப் பணிகள் குறித்தும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவு வளாகம் அமைய ₹120 கோடி ரூபாய் மதிப்பிலான இடம் அளித்ததையும் காணொலி படங்களுடன் எடுத்துரைத்தார் .

சதுர அடிக்கு ₹5000 என தமிழ் மக்கள் பங்களிப்போடு இக்கட்டடம் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமையவுள்ளதாகக் கூறினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. வே.சரவணன் இ.ஆ.ப பங்கேற்றார்.

களம் அமைப்பின் திரு. அமர்நாத் நன்றி கூற நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## 2026 –ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு துண்டு பிரசுரங்களை வழங்கும் நிகழ்ச்சி




திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அனந்தபுரம் ஊராட்சியில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி.எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கான முதல் வாக்குறுதி அடங்கிய துண்டு பிரசுரங்களை வீடு வீடாக நேரில் சென்று வழங்கினார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத் தேர்தலுக்கான விருப்ப மனு




பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை மாண்புமிகு எ. வ. வேலு அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான உயர்திரு. பெ.சு. தி. சரவணன் அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கான விருப்ப மனு அளித்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய குழு தலைவர், துணைத் தலைவர்,பேரூராட்சி தலைவர்,பணி குழு ஒழுங்கிணைப்பாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு பங்கேற்றார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சீரடியில் நடந்த தேசிய அளவிலான ஸ்கேட்டிங் போட்டியில் காஞ்சிபுரம் ஸ்ரீலட்சுமி குளோபல் பள்ளி மாணவன் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று அசத்தல்!





**வேலூர், மார்ச் 03:** புட்டபர்த்தி சீரடியில் தேசிய அளவில் ஐந்து வயதுக்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கான ஸ்கேட்டிங் போட்டி நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் ஸ்ரீ லட்சுமி குளோபல் பள்ளியைச் சேர்ந்த ஐந்து வயது மாணவன் ஸ்ரீகுருதேவ் கலந்துகொண்டு மூன்று தங்கப் பதக்கங்களை வென்று தமிழகத்திற்கு குறிப்பாக காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். மூன்று தங்கப் பதக்கங்களை வென்று காஞ்சிபுரத்துக்கு திரும்பிய ஸ்ரீ குருதேவுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் சார்பில் வானவேடிக்கை வெடித்து மேளதாளங்கள் முழுங்க உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது . நிகழ்ச்சி ஏற்பாட்டாளருக்கு பெற்றோர்கள் சதீஷ் –சுஜாதா தம்பதியினர் மனமார்ந்த நன்றியை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## சீர்காழியில் ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவம் விழாவில் நாட்டியாஞ்சலி



**சீர்காழி , மார்ச் , 03 :** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் ஸ்ரீராதா கல்யாண மஹோத்ஸவ சபா அறக்கட்டளை சார்பில் 11-ம் ஆண்டு ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவம் கைவிளாஞ்சேரி தென்பாதி ஸ்ரீகோதண்டராமர் கோவிலில் ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னதியில் ஸ்ரீ பகவத் க்ருபையால் மயிலாடுதுறை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பாகவதர் குமாரர் பிரம்மஸ்ரீஞானகுரு பாகவதர் குழுவினரால் நடைப்பெற்றது. மாலை 6.00 மணிக்குமேல் 9.30 மணி வரை நாட்டியாஞ்சலி நடைப்பெற்றது. நிகழ்ச்சியில் ஜி ஆர் எம் சக்தி டான்ஸ் அகாடமி குரு : நட்டுவாங்க கலைமணி ஜி.மதுமிதா பாக்கியராஜ் மற்றும் சீர்காழி சிவசக்தி நடனப்பள்ளி மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம் குரு : நடனமாமணி கவிதா விஜயகுமார் ஆகிய நடனப்பள்ளி மாணவிகளின் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இரவில் அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஈரோட்டில் தேசிய அறிவியல் தினம்




**ஈரோடு, மார்ச் 03:** 28.02.2026 சனிக்கிழமை காலை 10:30 மணி முதல் 1.00 மணி வரை ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி வளாகம் கஸ்தூர்பா அரங்கத்தில் மக்கள் சிந்தனை பேரவையின் சார்பில் தேசிய அறிவியல் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இறை வணக்கத்துடன் தொடங்கப்பட்ட விழாவிற்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் திரு ச.கந்தசாமி IAS., அவர்கள் தலைமை தாங்கினார். ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி அவர்கள், வேளாளர் கல்லூரி நிர்வாகிகள் திரு ச.பாலசுப்பிரமணியம், திரு எம்.யுவராஜா, திரு சி.நல்லசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மக்கள் சிந்தனைப் பேரவை பணிக்குழு உறுப்பினர் திரு க. வெற்றிவேல் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் திரு த.ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் நீண்ட தெளிவான அறிமுக உரை ஆற்றினார்.

## தீ மற்றும் மீட்பு வினாடி வினா



பென்னாகரம் ஒன்றியம், சின்னப் பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் பென்னாகரம் நிலையத்தின் சார்பாக தீ மற்றும் மீட்பு வினாடி வினா போட்டி நடைபெற்றது. தலைமையாசிரியர் மா. பழனி தலைமையில் வினாடி வினா போட்டி தீயணைப்பு நிலைய அலுவலர் (பொறுப்பு) சந்தோசம் அவர்கள் மாணவர்களுக்கு தீ தடுப்பு நடவடிக்கைகள் சார்பாக பல்வேறு கருத்துக்களை வழங்கினார்.

## ரவுசு மணி

கனவுகளை
நிஜமாக
எண்ணி
மகிழ்வதும்
நிஜங்களை
கனவாக
எண்ணி
மறப்பதும்
தான்
வாழ்க்கை



**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## ராமநாதபுரம் பெருவாயல் ராணபலி முருகன் ரதோற்சவம்



ராமநாதபுரம் பெருவாயல் ராணபலி முருகன் ரதோற்சவம்

# சுற்றுலா: கடற்கரை, அரண்மனை, நீர்வீழ்ச்சி: கொச்சியின் சுற்றுலா இடங்கள்!

இயற்கை சூழல் நிறைந்த கட்டிடங்கள், டெய்லி தோட்டங்கள், கடற்கரைகள் இவற்றைப் பார்க்கவேண்டுமா? இதற்கு சரியான சுற்றுலா செல்ல வேண்டிய இந்த இடங்களை தேர்ந்தெடுத்து பார்க்கலாம். அதில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்கள்.

1. செராய் கடற்கரை - கொச்சி

இந்தியாவில் கேரளாவின் சிறந்த கடற்கரையில் ஒன்றாக செராய் கடற்கரை விளங்குகிறது. எர்ணாகுளத்தில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் கிராம சூழலில் அமைந்துள்ள இந்த கடற்கரை மணல் பரப்பு நீச்சல் மற்றும் நீர் நடவடிக்கைகளுக்கும் சிறந்தது. இங்கு டால்பின் மீன்களை எளிதாக காணலாம். புகைப்படக் கலைஞர்கள் தங்களுக்கு பிடித்த விருப்பமான புகைப்படங்களை எடுக்கலாம். பசுமையான நெல் வயல்கள் மற்றும் தென்னந்தோப்புகள் உண்டு.

இங்கு சூரியன் உதிப்பதையும் மறைவதையும் பார்த்து உட்கார்ந்து ஓய்வெடுக்க இது ஒரு சிறந்த இடம் கேரளாவில் மிகவும் காதல் நிறைந்த கடற்கரையில் இதுவும் ஒன்று. இங்கு கடல் காற்று மட்டுமல்ல அமைதியான காதல் நிறைந்த இடமாகவும் விளங்குகிறது தேன் நிலவு கொண்டாடும் புது மணத் தம்பதியருக்கு ஏற்ற இடமாகும்.



2. கேரளா வரலாற்று அருங்காட்சி யகம்: கேரளாவின் பழமையான கலை மற்றும் வரலாற்று அருங்காட்சியங்களில் இது ஒன்றாக கருதப்படுகிறது. கொச்சியின் பயணத்தில் முதலில் பார்க்க வேண்டிய இடங்களில் இதுவும் ஒன்றாகும். கேரளாவின் கொச்சின் வளமான வரலாற்று மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை காட்டும் கண்காட்சிகளில் அழகான கலப்பைப்புகளை இங்கு காணலாம். திங்கள் தவிர ஒவ்வொரு நாளும் காலை 10 மணிக்கு திறந்து மாலை 5 மணிக்கு மூடப்படுகிறது.

3. ஃபோர்ட் கொச்சி: ஃபோர்ட் கொச்சியில் ஒரு அற்புதமான சூரிய அஸ்தமனத்தைக் கண்டு மகிழலாம். சூரிய அஸ்தமனத்தில் ஒரு சரியான நடைபயணமும் செய்யலாம். கடற்கரையில் குளித்தல் நீச்சல் நடவடிக்கைகள் இங்கு செய்ய அனுமதிக்கப் படுவதில்லை. சுவையான கடல் உணவுகள் ஷாப்பிங் கேரளாவின் பாரம்பரிய மற்றும் நடன வடிவமான கதகளி நிகழ்ச்சிகளை புத்தாண்டு தினத்தன்று கண்டுகளிக்கலாம்.



4. டச்சு அரண்மனை: போர்த்துக் கீசியர்களால் கட்டப்பட்டு 1555 ஆம் ஆண்டு கொச்சின் முன்னாள் மன்னர் வீர கேரள வர்மாவுக்கு வழங்கப்பட்ட இந்த அரண்மனை 1633 ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் கடுமையாக வேலை செய்து கட்டிடத்தை புதுப்பித்ததால் இதுபுகழ்பெற்றது. கொச்சி மன்னர்கள் இந்த இரட்டை மாடி கட்டமைப்பின் மைய மண்டபத்தில்தான் தங்கள் முடி சூட்டு விழா சடங்குகளை செய்தனர்.

இங்குள்ள அறைகளில் பிற சிறந்த இந்திய இதிகாசங்களான ராமாயணம் மற்றும் மகாபாரதர் காட்சிகளை சித்தரிக்கும் ஓவியங்கள் உள்ளன. இந்த டச்சு அரண்மனை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். வெள்ளிக்கிழமைகளில் கிடையாது.

5. லோஃபர்ஸ் கார்னர் பிரின்சஸ் தெரு: ஃபோர்ட் கொச்சியில் கட்டப்பட்ட ஆரம்பகால தெருக்களில் ஒன்றாக ஐரோப்பிய நேர்த்தியுடன் கூடிய பிரின்சஸ் தெரு, பழைய கலாச்சார உலக அழகை வெளிப்படுத்துகிறது. இந்த அழகிய தெருவின் சிறந்த காட்சியை கார்னரிலிருந்து காணலாம். இது சிறிய கூட்டங்களை ஏற்பாடு செய்வதிலும், வேடிக்கை பார்ப்பதிலும் அதிக ஆர்வம் உள்ள இப்பகுதியில் உள்ள அந்த மக்களின் வழக்கமான ஒன்று கூடும் இடமாகவும் ஓய்வெடுக்கும் இடமாகவும் இது அமைந்துள்ளது.

6. மங்கள வனம் பறவைகள் சரணாலயம்: மங்கள வனம் பறவைகள் சரணாலயம் ஒரு உணர்வு திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் இடமாகும் .இங்கு அலைகள் நிறைந்த ஏரி புலம்பெயர்ந்த பறவைகள் மற்றும் சதுப்பு நில காடுகள் உள்ளன. மேலும் உலகம் முழுவதுமிலிருந்து பறவைகள் இங்கு இடம் பெயர்ந்து வந்து தங்கும் இங்கு வருவதற்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகும். ஏனெனில் மரங்கள் பசுமையாக பூத்து குலுங்குகின்றன உலகம் முழுவதிலிருந்து பறவைகள் வந்து தங்குகின்றன. இந்த சரணாலயத்தின் செழுமை நமக்கு பார்ப்பதற்கு மிகவும் ரம்யமாக இருக்கும்.

7. அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி: இந்த நீர்வீழ்ச்சி 80 மீட்டர் உயரத்திலிருந்து விழும் அதிசயம் பார்க்க ரம்மியமாக இருக்கும். இந்தியாவில் நயாகரா நீர்வீழ்ச்சி என்று அழைக்கப்படுகிறது. இந்த அருவிபால் வெள்ளை நிறத்தில் அடிவாரத்தில் நுரையுடன் கூடியதாக காட்சியளிக்கிறது. இது பார்வையாளர்களை மிகவும் வசீகரிக்கும். இது ஆனை முடி மலைகளில் இருந்து வெளிப்பட்டு காடு முழுவதும் பாய்கிறது. இங்கு படு சவாரி செய்யலாம். ஒருநாள் கழிக்க நல்ல ரிசார்ட்சும் உண்டு.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ரிசர்வ் வங்கியில் 650 உதவியாளர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு!

வங்கிகளின் மத்திய வங்கியான இந்திய ரிசர்வ் வங்கியில் (ஆர்பிஐ) காலியாக உள்ள 650 உதவியாளர் பதவிகளுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நாடு தழுவிய இரண்டு கட்ட போட்டித் தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ள இந்த பணியிடங்களுக்கு தகுதியும் ஆர்வமும் உள்ள பட்டதாரி இளைஞர்களிடம் இருந்து வரும் மார்ச் 8 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி மற்றும் இதர விவரங்கள் குறித்து பார்ப்போம்...

தகுதி: 1.2.2026 தேதியின்படி ஏதாவதொரு துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 1.2.2026 தேதியின்படி 20 முதல் 28 வயதுக்குள் இருக்க வேண்டும். அதாவது 2.2.1998-க்கு முன்போ, 1.2.2006-க்கு பின்போ பிறந்தவர்களாக இருக்க கூடாது. அரசு விதிமுறைகளின்படி 3 முதல் 5 ஆண்டுகள் வயது தளர்வு வழங்கப்படும். மாற்றுத்திறன் பிரிவினர்களுக்கு 10 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை தளர்வு வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, அதைத் தொடர்ந்து மொழித் திறன் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். வினாத்தாள் ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தமிழில் அமைந்திருக்கும். தமிழ்நாட்டில் தேர்வு நடைபெறும் இடம்: முதல்நிலைத் தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, நாமக்கல், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், ஈரோடு, விருதுநகர், நாகர்கோவில், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, திருப்பூர், தஞ்சாவூர், தர்மபுரி மற்றும் புதுச்சேரி

முதன்மைத் தேர்வு மையம்: சென்னை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர், மதுரை, சேலம் மற்றும் புதுச்சேரி. தேர்வு நடைபெறும் நாள்: தோராயமாக முதல்நிலைத் தேர்வு ஏப்ரல் 11, முதன்மைத் தேர்வு ஜூன் 7 ஆம் தேதி நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறன் பிரிவினருக்கு ரூ.50, இதர அனைத்து பிரிவினருக்கு ரூ.450. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை: www.rbi.org.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 8.3.2026

## அடையாறு பகுதியில் 2 மின் திருட்டுகள் கண்டுபிடிப்பு: இழப்பீட்டுத் தொகை ரூ.12.40 லட்சம் வசூல்




**சென்னை, மார்ச் 3:**

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் வெளியிட்ட செய்தி அறிக்கையில்,

18.02.2026 அன்று தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சென்னை அமலாக்க கோட்டத்திற்குட்பட்ட சென்னை/வடக்கு, மற்றும் சென்னை/மையம் அதிகாரிகள் அடையார் கோட்டம் அடையாறு மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட பகுதியில் கூட்டு ஆய்வு மேற்கொண்டபோது 2 உயர் மதிப்புள்ள மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் வாயிலாக ரூ. 12,39,426 /- 2 மின் இணைப்புக்கு இழப்பீட்டு தொகையாக மின்நுகர்வோருக்கு விதிக்கப்பட்டது. மேலும், சம்பந்தப்பட்ட மின்நுகர்வோர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றவியல் நடவடிக்கையை தவிர்க்க முன் வந்து அதற்குரிய சமரசத் தொகையாக ரூ.62,000/- செலுத்தியதால், அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

மின் திருட்டு சம்பந்தமான தகவல்களை செயற்பொறியாளர்/அமலாக்கம்/சென்னை கைபேசி 9445857591 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிப்ரவரி மாதத்தில் மட்டும் மெட்ரோ ரெயில்களில் ஏராளமானோர் பயணம் செய்துள்ளனர்!

**சென்னை, மார்ச் 3:**

மெட்ரோ ரெயில் நிறுவனம் கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும் எத்தனை பேர் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்துள்ளனர் என்ற தகவலை வெளியிட்டுள்ளது. மேலும் இந்த மாதத்தில் தான் புறநகர் ரெயில்களின் சேவையும் பராமரிப்பு பணிகள் காரணமாக குறைக்கப்பட்டது. இதனால் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்யும் நபர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

இது குறித்து, மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ ரெயில் பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது. அந்த வகையில் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 96,40,993 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணித்துள்ளதாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக 20.02.2026 அன்று 3,99,503 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.

2026, பிப்ரவரி மாதத்தில் மட்டும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 49,11,328 பயணிகள், பயண அட்டைகளை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 38,121 பயணிகள், க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 46,91,544 பயணிகள் (Single journey Paper QR /Token 19,10,265; Online QR 1,26,618; Static QR 2,11,188; Whatsapp - 4,51,491; Paytm 3,27,534; ONDC 11,47,636; PhonePe 2,70,088; CMRL Mobile App 64,649; Chennai One App 1,59,134; Event QR - 22,941) பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், டிஜிடல் எஸ்விபி (Digital SVP), க்யுஆர் குறியீடு (OR Code) பயணச்சீட்டு, Whatsapp - (+91 83000 86000), Paytm App, PhonePe மற்றும் சிங்கார சென்னை அட்டை போன்ற பயணச்சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ ரெயில்களில் பயணிப்பவர்களுக்கு 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடியை வழங்குகிறது.

மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள பயணச்சீட்டு கவுண்டர்களில் வாங்கப்படும் ஒற்றைப் பயணத்துக்கான காகித க்யுஆர் பயணச்சீட்டுகளுக்கு (Single Journey Paper QR tickets) இந்தத் தள்ளுபடி கிடையாது.

மெட்ரோ ரெயில்கள் மற்றும் மெட்ரோ ரெயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தஞ்சாவூரில் மார்ச் 4-ல் விஜய் பங்கேற்கும் தவெக கூட்டம்: காவல் துறை அனுமதி!

**தஞ்சாவூர், மார்ச் 3:**

தஞ்சாவூரில் மார்ச் 4-ல் விஜய் பங்கேற்கும் தவெக நிர்வாகிகள் கூட்டத்துக்கு காவல் துறை அனுமதி வழங்கியுள்ளது.

தஞ்சாவூரில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பங்கேற்கும் தவெக நிர்வாகிகள் கூட்டத்துக்கு அனுமதி கோரி அக்கட்சி நிர்வாகிகள் காவல் துறையினரிடம் மனு அளித்திருந்த நிலையில், அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதி நிர்வாகிகளைத் தவெக தலைவர் விஜய் சந்தித்து பேச திட்டமிடப்பட்டுள்ளது.



இதற்காக தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி அருகே அய்யாசாமிபட்டி பிரிவு சாலை பகுதியில் 10 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் மார்ச் 4-ஆம் தேதி காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத்திலுள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட 4 ஆயிரத்து 900 நிர்வாகிகள் மட்டும் பங்கேற்பார்கள் என்றும் இவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, க்யூஆர் கோடு ஸ்கேன் செய்து திடலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தஞ்சை தவெக நிர்வாகிகள் கூட்டத்துக்கு அனுமதி கோரி, மாவட்டக் காவல் அலுவலகத்தில் காவல் கண்காணிப்பாளர் இரா. ராஜாராமிடம் தவெக மத்திய மாவட்டச் செயலர் ஆர். விஜய் சரவணன் உள்ளிட்டோர் மனு அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## வர்த்தக சிலிண்டர் விலை ரூ.30 உயர்வு

**சேலம், மார்ச் 3:**

சர்வதேச சந்தையின் கச்சா எண்ணெய் விலை, இறக்குமதி செலவு, அமெரிக்க டாலருக்கு நிகராக இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு சிலிண்டர் உள்ளிட்ட எரி பொருட்களின் விலையை, இந்திய எண்ணெய் நிறுவனங்க ளின் கூட்டமைப்பு நிர்ணயித்து வருகிறது. இதில், கேஸ் சிலிண்டர் விலை மாதந்தோறும் 1 ஆம் தேதி மாற்றிய மைக்கப்படுகிறது. ஞாயிறன்று வெளியான மார்ச் மாதத்திற்கான விலை பட்டியலில், 19 கிலோ எடை கொண்ட வர்த்தக கேஸ் சிலிண் டர் விலை ரூ.30 உயர்ந்துள்ளது. வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் மாற்றம் இல்லை.

## ஆதரவற்ற விதவையர் வருமான உச்சவரம்பு ரூ.8 ஆயிரமாக உயர்வு

**சென்னை, மார்ச் 3:**

தமிழகத்தில் ஆதரவற்ற விதவை சான்றி தழ் பெறுவதற்கான மாதாந்திர வருமான உச்சவரம்பை ரூ.4,000-லிருந்து ரூ.8,000 ஆக உயர்த்தி, தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து, தமிழக அரசின் மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சமயமூர்த்தி பிறப்பித்துள்ள அரசாணையில், "தமிழகத்தில் ஆதரவற்ற விதவை சான்றி தழ் பெறுவதற்கான மாதாந்திர வருமான உச்ச வரம்பு கடந்த 1993 ஆம் ஆண்டு ரூ.1,000 ஆக இருந்தது. பின்னர், 2006 ஆம் ஆண்டில் இது ரூ.4,000 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த உச்சவரம்பை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, குடும்ப ஓய்வூதியம், தனிப்பட்ட தொழில் வரு மானம் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களில் இருந்தும் வரும் மாத வருமானம் ரூ.8,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். கணவனை இழந்த பெண்கள் மட்டுமே இதில் அடங்குவர். விவாகரத்து பெற்றவர்கள், ஆதரவற்ற விதவை பிரிவின்கீழ் வரமாட்டார்கள். அரசுப் பணிகளில் (பே லெவல் 10 வரை) பெண்களுக்கு ஒதுக்கப்படும் 30 சதவீத இடஒதுக் கீட்டில், 10 சதவீத இடங்கள் ஆதாவற்ற விதவைகளுக்கென பிரத்யேகமாக ஒதுக்கப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடக்கம்

**சென்னை, மார்ச் 3:**

தமிழகப் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் 37,554 அரசுப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 52 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். 2026-27 ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை (மார்ச் 2) முதல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங் களில் முன்பருவக் கல்வியை நிறைவு செய்யும் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை அருகிலுள்ள அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரம் காட்ட பள்ளி களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை கணிச மாக உயர்த்த வேண்டும் எனவும் பள்ளி தலைமையாசிரியர் களுக்கு பள்ளிக் கல்வித்துறை அறிவுரை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# “நியாயமான தீர்ப்புகளை வழங்கினால் மட்டுமே நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை கூடும்” - உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த்

**திருப்பதி, மார்ச் 3:**

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் நேற்று முன்தினம் இரவு திருமலைக்கு வந்தார். அவரை திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பிஆர் நாயுடு, நிர்வாக அதிகாரி எம். ரவிச்சந்திரா உட்பட பல உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.



பின்னர், இரவு திருமலையில் தங்கிய தலைமை நீதிபதி சூர்ய காந்த், நேற்று காலை தனது குடும்பத்தாருடன் ஏழுமலையானை தரிசனம் செய்தார்.

தரிசனம் செய்த பின்னர், ரங்க நாயக மண்டபத்தில் தலைமை நீதிபதிக்கு சேஷ வஸ்திரம் அணிவித்து, வேத பண்டிதர்களால் ஆசி வழங்கப்பட்டது. அதன் பின்னர், தலைமை நீதிபதிக்கு தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவிக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சியில், அறங்காவலர் பிஆர் நாயுடு, நிர்வாக அதிகாரி எம். ரவிச்சந்திரா, கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி மற்றும் உயர் நீதிமன்ற மற்றும் மாவட்ட நீதிபதிகள் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து, திருப்பதியில் தாமினேடு பகுதியில் புதிதாகக் கட்டப்பட உள்ள 16 கட்டிடங்கள் கொண்ட திருப்பதி மாவட்ட புதிய மாவட்ட நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் தலைமை நீதிபதி பேசும்போது, “நீதிமன்றங்களில் இரு தரப்பு வாதங்களும் சரியான முறைப்படி இருத்தல் அவசியம்.

அப்படி இருந்தால் தான் நீதிபதியும் சரியான தீர்ப்பை வழங்க முடியும். அப்படி நியாமான தீர்ப்புகள் வழங்கப்படும் பட்சத்தில் தான் மக்களுக்கு சட்டம், நீதிமன்றங்கள், நீதிபதிகள் மீது நம்பிக்கை ஏற்படும்” என்றார்.

இந்நிகழ்ச்சியில் ஆந்திர மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தீரஜ் சிங் தாக்குர் உட்பட பல்வேறு மாவட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### சஞ்சு சாம்சன் அதிரடி: மே.இ தீவுகளை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா



**கொல்கத்தா, மார்ச் 3:**

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 1) நடைபெற்ற போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய மேற்கிந்திய அணியின் ஷாய் ஹோப் (32) மற்றும் ரோஸ்டன் சேஸ் (40) ஜோடி 68 ரன்கள் சேர்த்து நல்ல தொடக்கத்தை கொடுத்தது. ஜஸ்பிரித் பும்ரா மற்றும் வருண் சக்கரவர்த்தி தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தி ரன் வேகத்தைக் கட்டுப்படுத்த முயன்றனர். எனினும், ஜேசன் ஹோல்டர் 37 ரன்கள் ரோவ்மன் பவல் 34 ரன்கள் விளாசியதால், மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 195 ரன்கள் குவித்தது. 196 ரன்கள் என்ற இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணிக்குத் தொடக்கம் ஏமாற்றமாக அமைந்தது. அபிஷேக் சர்மா மற்றும் இஷான் கிஷன் தலா 10 ரன்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தனர். ஆனால், ஒன்-டவுன் வீரராக களமிறங்கிய சஞ்சு சாம்சன் ஆரம்பம் முதலே அதிரடி காட்டினார். சூரியகுமார் யாதவ் மற்றும் திலக் வர்மா ஆகியோருடன் பார்ட்னர்ஷிப் அமைத்த சஞ்சு, 50 பந்துகளில் 97 ரன்கள் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இதில் 10 பவுண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்கள் அடங்கும். கடைசி ஓவரில் 7 ரன்கள் தேவைப்பட்ட நிலையில், சஞ்சு சாம்சன் ஒரு சிக்ஸர் மற்றும் ஒரு பவுண்டரி அடித்து 19.2 ஓவர்களிலேயே வெற்றியை உறுதி செய்தார். இதன் மூலம் டி20 உலகக்கோப்பை வரலாற்றில் சேஸிங்கின் போது அதிக ரன்கள் எடுத்த இந்திய வீரர் என்ற விராட் கோலியின் சாதனையை சஞ்சு சாம்சன் முறியடித்தார்.

### 4-வது சுற்றை டிரா செய்தார் குகேஷ்

**பிராக், மார்ச் 3:**

பிராக் சர்வதேச செஸ் போட்டி செக்குடியரசின் பிராக் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் 4-வது சுற்று ஆட்டத்தில் உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ், செக்குடியரசின் டேவிட் நவராவுடன் மோதினார். இதில் வெள்ளை காய்களுடன் விளையாடிய குகேஷ் 72-வது நகர்த்தலின் ஆட்டத்தை டிராவில் முடித்தார்.

நடப்பு சாம்பியனான இந்திய கிராண்ட் மாஸ்டரான அர்விந்த் சிதம்பரம் தனது 4-வது சுற்றில் ஜெர்மனியின் வின்சென்ட் கீமருடன் மோதினார். இதில் கருப்பு காய்களுடன் விளையாடிய அர்விந்த் சிதரம்பரம் 29-வது நகர்த்தலின் போது தோல்வி அடைந்தார்.

# மகாராஷ்டிர வெடிபொருள் ஆலையில் பயங்கர வெடிவிபத்து: பலி எண்ணிக்கை 18 ஆக உயர்வு

**புதுடெல்லி, மார்ச் 3:**



மகாராஷ்டிரத்தின் நாகபுரி மாவட்டத்தில் உள்ள வெடிபொருள் தயாரிப்பு தொழிற்சாலையில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 18 தொழிலாளர்கள் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் 24 பேர் படுகாயமடைந்தனர்.

ஆந்திர மாநிலம், காகிநாடாவில் பட்டாசு ஆலை ஒன்றில் கடந்த சனிக்கிழமை நேரிட்ட வெடிவிபத்தில் 21 பேர் இறந்த நிலையில், மகாராஷ்டிரத்தில் மேற்கண்ட சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாக காவல் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ‘நாகபுரி மாவட்டத்தின் ரௌல்கான் பகுதியில், சுரங்கப் பணி மற்றும் பிற தொழில்களுக்கு தேவையான ‘டெட்டனேட்டர்’ வெடிபொருள் தயாரிக்கும் எஸ்பிஎல் எனர்ஜி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இங்கு ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் திடீரென ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 24 பேர், நாகபுரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இறந்தவர்களின் உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு கருகியுள்ளன. மரபணு பரிசோதனை மூலம் அடையாளம் காண்பதற்காக உறவினர்களிடம் இருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன’ என்றார்.

*விசாரணைக்கு உத்தரவு:* வெடிவிபத்தில் உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ், சம்பவம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படைகள், பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் பாதுகாப்பு அமைப்பினர் சம்பவ இடத்துக்கு விரைந்து, போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணியில் ஈடுபட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*ஆலை நிர்வாகம் உறுதி:* சம்பந்தப்பட்ட ஆலை நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில், ‘இந்தத் துயர சம்பவத்தால் மிகவும் வேதனை அடைந்துள்ளோம். உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல்.

பேக்கிங் பகுதியில் வெடிவிபத்து நேரிட்டுள்ளது; அந்த நேரத்தில் வெடிபொருள் தயாரிப்புப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. விபத்துக்கான காரணம் குறித்து ஆலை தரப்பிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம். இப்போதைய நிலையில், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதே எங்களின் முன்னுரிமை. காயமடைந்தோரின் மருத்துவச் செலவு முழுவதும் ஆலை நிர்வாகம் ஏற்கும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*குடியரசுத் தலைவர், பிரதமர் இரங்கல்:* மகாராஷ்டிர ஆலை வெடிவிபத்தில் நேரிட்ட உயிரிழப்புகளுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# மத்திய கிழக்கில் பதற்றம்: வெளிநாட்டு பயணிகளுக்கான விசா காலம் நீட்டிப்பு!

**புதுடெல்லி, மார்ச் 3:**




மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றம் காரணமாக அடுத்தடுத்து விமானங்கள் ரத்து செய்யப்படுவதால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணிகளுக்கு விசா நீட்டிக்கப்படும் என்று இந்தியா உறுதியளித்துள்ளது.

ஈரான், இஸ்ரேல்-அமெரிக்க மோதலால் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் நிலவுகிறது. இதனால் பல விமான நிறுவனங்கள் தங்களது விமான சேவையை ரத்து செய்து வருகின்றன. இதனால் இந்தியா வந்த வெளிநாட்டு பயணிகள் மீண்டும் தங்களது நாடுகளுக்கு செல்வதில் சிக்கல் நிலவுகிறது.

இதைக் கருத்தில்கொண்டு இந்திய வெளியுறவு அமைச்சகம் புதிய அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதில், ‘மேற்காசிய பிராந்திய நிலவரத்தால் பயணத்திட்டத்தை மாற்றியுள்ள இந்தியாவுக்கு வந்துள்ள வெளிநாட்டு பயணிகள், விசா காலத்தை நீட்டிக்க அல்லது இந்தியாவில் தங்குவதற்கு அனுமதி பெற விரும்பினால், அருகிலுள்ள வெளிநாட்டு பயணிகள் பிராந்திய பதிவு அலுவலகத்தை அணுகலாம். அவர்களுக்குத் தேவையான உதவிகள் அங்கு அளிக்கப்படும்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்தியாவில் எத்தனை வெளிநாட்டு பயணிகள் தற்போது உள்ளனர், அவர்களில் எத்தனை பேர் விமான ரத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் தெரியவில்லை.

*225 விமானங்கள் ரத்து:* இதனிடையே, மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றம் காரணமாக, தில்லியில் 100 விமானங்களும், மும்பையில் 125 விமானங்களும் ஞாயிற்றுக்கிழமை ரத்து செய்யப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல வேண்டிய விமானங்கள் எனக் கூறப்படுகிறது.

முன்னதாக, மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் தரப்பில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் மொத்தம் 444 சர்வதேச விமானங்கள் ரத்து செய்யப்படலாம் என எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இறைவனை நெருங்கிச் செல்ல யோகாவும், இசையும் உதவும்: குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன்!

**திருச்சூர், மார்ச் 3:**

கேரள மாநிலம் திருச்சூரில் ஞாயிற்றுக்கிழமை நடந்த நிகழ்ச்சியில், இதுகுறித்து அவர் பேசியதாவது: நமது பாரத நாடானது, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமையான சொந்த இசை பாரம்பரியத்தைக் கொண்டது. பாரதத்தின் இசை ஆன்மிகப் பயணமாகவும், மருத்துவமாகவும், வழிபாடாகவும், கொண்டாட்டமாகவும், கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் ஒரே தாளமாகவும் திகழ்கிறது.

சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களைப் பார்த்தால், அதில் தென்னிந்திய இசை கலாசாரம் இன்னும் வாழ்வதை அறியலாம். இதிலிருந்து நமது பாரத இசை பாரம்பரியம் மிகவும் பழைமையானது என்பது நிரூபணமாகிறது. இந்தியாவில் பல்வேறு இசைப் பாரம்பரியங்கள் உள்ளன. வடக்கில் ஹிந்துஸ்தானி இசையும், தெற்கில் கர்நாடக இசையும் உள்ளன. சிறந்த ஆசிரியர்களால் இசை பல நூற்றாண்டுகளாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

இசையானது, நமது சுவாசத்தை சீராக்குகிறது. இதயத் துடிப்பை நிலைப்படுத்துகிறது. மன அழுத்தத்தைக் குறைக்கிறது. ஒவ்வொரு இசைக்கும் தனி அடையாளம் உண்டு. ஆனால் அவை அனைத்தும் ஒருங்கிணைந்து ஒலி ஒருமைப்பாட்டைத் தருகிறது. இதுபோல மனிதர்களும் உயர்ந்த நோக்கத்துக்காக ஒன்று சேர்ந்தால், சமூக நல்லிணக்கத்தை உருவாக்க முடியும். வழிபாடு மூலம் மன அமைதி, நிம்மதி கிடைக்கும். அதுபோல யோகா, இசை ஆகியவை இறைவனை நெருங்கிச் செல்ல நமக்கு உதவும்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ்தான், யோகாவுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது. இன்று யோகாவானது, இந்தியாவின் மென்மையான அணுகுமுறையின் அடையாளமாகி விட்டது. அரசியல், பிரதேச எல்லைகள் கடந்து நாடுகளை இணைக்கும் பாலமாக யோகா திகழ்கிறது. இந்திய இசை, உலகம் ஒரே குடும்பம் என்ற பழைமையான தத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. மெல்லிசை மற்றும் இசையின் முக்கியத்துவம் இன்று வேகமாக உணரப்படுகிறது. நெருக்கடியான இந்த காலகட்டத்தில் உலகத்துக்கு அவை மிகவும் அவசியமாகும் என்றார்.

## க்ரைம் கார்னர்

### பிரியாணி கடை ஃப்ரீஸரில் இருந்த இளைஞர் உடல்!

**லக்னோ, மார்ச் 3:**

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னௌவில், மூடப்பட்டிருந்த பிரியாணி கடையின் ஃப்ரீஸரில் இளைஞர் ஒருவரது உடல் கிடந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

லக்னௌ அருகே பக்சி கா தாளாப் என்ற பகுதியில், இயங்கி வந்த சைவ பிரியாணி கடையின் ஃப்ரீஸரில், 35 வயது மதிக்கத்தக்க நபரின் உடல் மறைத்து வைக்கப்பட்டிருந்தது குறித்து காவல்துறைக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, அவர்கள் விரைந்து வந்து உடலைக் கைப்பற்றி உடல் கூராய்வுக்காக அனுப்பி வைத்தனர். முதற்கட்ட விசாரணையில், பலியானவர் விஜய் பால் என்பவர் என்றும், கிஷண் பூர் மஜ்ரா என்ற பகுதியில் வாழ்ந்து வந்ததும் தெரிய வந்துள்ளது.

மேலும், சைவ பிரியாணி கடையின் உரிமையாளர் ஷானி ராவத், தன்னுடைய தந்தை உயிரிழந்துவிட்டதால், கடையை கடந்த 4 நாள்களாக திறக்கவில்லை என்றும், ஞாயிற்றுக்கிழமை காலை கடையை திறந்த போது, கடைக்குள் இருந்த ஃப்ரீஸரில் மனித உடல் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து காவல்துறைக்குத் தகவல் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். விஜய் பாலின் குடும்பத்தினர் கூறுகையில், அவர் ஒரு தினக்கூலி வேலை செய்து வந்ததாகவும், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மனைவியிடமிருந்து பிரிந்து தனித்து வாழ்ந்து வந்ததாகவும், மதுப் பழக்கத்துக்கு அடிமையாகியிருந்ததாகவும் கூறுகிறார்கள். ஆனால், மரணத்துக்கான காரணம் உடல் கூராய்வுக்குப் பிறகே தெரிய வரும் என்று கூறப்படுகிறது.,

### காகித ஆலையில் விஷ வாயு தாக்கி 2 தொழிலாளர்கள் உயிரிழப்பு

**பழநி, மார்ச் 3:**

பழநி அருகேயுள்ள புஷ்பத்தூரில், திருப்பூர் மாவட்ட எல்லையில் தனியார் காகித ஆலை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், நேற்று காலை பழைய காகிதங்களை அரைக்கும் இயந்திரத்தின் (பாய்லர்) உட்பகுதியில் இறங்கி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த நூர் அலாம் (32), ராம் புரூஸ் மஞ்சூரி (35) ஆகியோர் விஷ வாயு தாக்கியதில் மயக்கமடைந்தனர். அங்கிருந்தவர்கள் அவர்களை மீட்டு, திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், இருவரும் வழியிலேயே உயிரிழந்தனர். இதையடுத்து, இருவரது உடல்களையும் பிரேதப் பரிசோதனைக்காக உடுமலைப்பேட்டையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். விஷ வாயு தாக்கி தொழிலாளர்கள் உயிரிழந்தது தொடர்பாக, பழநி சாமிநாதபுரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

### 13 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த தொழிலாளிக்கு 53 ஆண்டுகள் சிறை

**கோழிக்கோடு, மார்ச் 3:**

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டம் நொச்சாடு முளியங்கள் பகுதியை சேர்ந்தவர் முகமது ரைகான் (வயது 41). தொழிலாளி. இவர், கடந்த 2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் விபத்தில் படுகாயம் அடைந்து வீட்டில் ஓய்வு எடுத்து வந்தார். அப்போது ஒரு வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, அங்கு தனியாக இருந்த 13 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து பேராம்பிரா போலீசில் புகார் அளிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து, முகமது ரைகானை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை நாதாபுரம் போக்சோ விரைவு கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் 13 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. இந்தநிலையில் சிறுமியை பலாத்காரம் செய்த முகமது ரைகானுக்கு 53 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.2.10 லட்சம் அபராதம் விதித்து நீதிபதி தேவன் கே.மேனன் தீர்ப்பளித்தார்.

## வணிகச் செய்திகள்

### துபாய் விமான நிலையத்துக்கு தினமும் ரூ.2,000 கோடி இழப்பு

**துபாய், மார்ச் 3:**

ஈரான் மீது அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுப் படைகள் அதிரடித் தாக்குதலை கடந்த மாதம் 28-ம் தேதி தொடங்கிய நிலையில், ஈரானும் இஸ்ரேல் மற்றும் வளைகுடா பகுதியில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது பதில் தாக்குதலைத் தொடங்கியது.

ஜோர்டான், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியது. ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கத் தேவையான யுரேனியத்தை செறிவூட்டி வருவதாகக் குற்றம்சாட்டி இந்தத் தாக்குதலை அமெரிக்காவும், இஸ்ரேலும் மேற்கொண்டுள்ளன. இந்தப் போர்ப் பதற்றம் காரணமாக டிஎக்ஸ்பி என்று அழைக்கப்படும் துபாய் விமான நிலையத்துக்கு வரும் விமானங்களும், புறப்படும் விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால் துபாய் விமான நிலையத்துக்கு தினந்தோறும் ரூ.2,000 கோடி இழப்பு ஏற்பட்டுவருகிறது. தினமும் துபாய் விமான நிலையத்துக்கு 2.60 லட்சம் பயணிகள் வந்து செல்வர். தற்போது போர்ப்பதற்றம் காரணமாக துபாய் விமானநிலையம் வெறிச்சோடிக் கிடக்கிறது. இதனால் விமான நிலையத்துக்கு தினந்தோறும் ரூ.2 ஆயிரம் கோடி அளவுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டு வருகிறது. 2023-ம் ஆண்டில் மட்டும் 8.7 கோடி பயணிகள் துபாய் விமான நிலையத்துக்கு வந்து சென்றுள்ளனர். அதேபோல் 2025-ம் முதல் காலாண்டில் மட்டும் துபாய் விமான நிலையத்துக்கு 2.34 கோடி பயணிகள் வந்து சென்றுள்ளனர்.

# மெட்ரோ நகரங்களை இணைக்க 5, 6-வது ரயில் பாதைகள் அமைக்க முடிவு

**புதுடெல்லி, மார்ச் 3:**



அதிக போக்குவரத்து உள்ள சென்னை, டெல்லி போன்ற மெட்ரோ நகரங்களை இணைக்க 5, 6-வது ரயில் பாதைகளை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

டெல்லி, ஹவுரா, மும்பை, சென்னை ஆகிய 4 முக்கிய பெருநகரங்களை இணைக்கும் அதிக போக்குவரத்து கொண்ட ரயில் பாதைகளில் (எச்டிஎன்) 5, 6-வது ரயில் பாதைகளை அமைக்கும் திட்டம் தொடர்பான ஆலோசனையை ரயில்வே அமைச்சகம் அண்மையில் தொடங்கியுள்ளது. இவ்வாறு 5, 6-வது ரயில் பாதைகள் அமைப்பதன் மூலம் இந்த பாதைகளில் அதிக பயணிகள், சரக்கு ரயில்களை இயக்க முடியும்.

இந்த 4 நகரங்களை இணைக்கும் அதிக போக்குவரத்து கொண்ட ரயில்வே தடங்கள் (எச்டிஎன்) 11,051 கிலோ மீட்டர் தூரத்துக்கு உள்ளது. இது தான் ரயில்வேயின் முதுகெலும்பாக உள்ளது. ஒட்டுமொத்த ரயில்வே நெட்வொர்க்கில் 16 சதவீத பங்கை இந்த 4 நகரங்களை இணைக்கும் ரயில் பாதைகள் வழங்குகின்றன. இந்தப் பாதைகள் மூலம் 41 சதவீத ரயில் போக்குவரத்து நடைபெறுகிறது.

டெல்லி - ஹவுரா (1,422 கிலோ மீட்டர்), ஹவுரா - மும்பை (2,039 கிலோ மீட்டர்), டெல்லி - மும்பை (1,321 கிலோ மீட்டர்), டெல்லி - குவாஹாட்டி (1,875 கிலோ மீட்டர்), டெல்லி - சென்னை (2,041 கிலோ மீட்டர்), ஹவுரா - சென்னை (1,117 கிலோ மீட்டர்), மும்பை - சென்னை (1,238 கிலோ மீட்டர்) ஆகிய 7 பாதைகள் அதிக ரயில் போக்கு வரத்துப் பாதைகளாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்த தடங்களில் தான் தற்போது, 5, 6-வது ரயில் பாதைகளை அமைக்க மத்திய ரயில்வே அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக ரயில்வே மண்டல மூத்த அதிகாரிகளை ரயில்வே வாரிய அதிகாரிகள் அழைத்து ஆலோசனை நடத்தி உள்ளனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இரட்டை ரயில் பாதைகள், மல்ட்டி டிராக்கிங், 5, 6-வது ரயில் பாதைகள் அமைத்தல் போன்றவை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. மேலும் ரயில்வே மண்டலங்கள் சார்பாக திட்ட அறிக்கையையும் தயாரித்துத் தருமாறு ரயில்வே வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

## சத்தீஸ்கர்: 15 நக்ஸல்கள் சரண்! ராய்பூரில் நக்ஸல் தீவிரவாதம் முடிவுக்கு வந்தது!!

**புதுடெல்லி, மார்ச் 3:**

சத்தீஸ்கர் காவல் துறை அதிகாரிகள் கூறியதாவது: இந்திய கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சியின் பலாங்கீர்-பார்கர்-மஹாசாமுந்த் (பிபிஎம்) பிரிவைச் சேர்ந்த நக்ஸல் தீவிரவாத முக்கியத் தலைவரான விகாஸ், 9 பெண் நக்ஸல்கள் உள்பட 15 பேர் மஹாசாமுந்த் மாவட்ட காவல் துறை தலைமையகத்தில் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சனிக்கிழமை சரணடைந்தனர்.

ஓராண்டுக்கு முன் சத்தீஸ்கரின் ராய்பூர் காவல் எல்லை மற்றும் ஒடிஸாவின் சம்பல்பூர் காவல் எல்லைப் பகுதிகளில் நக்ஸல் தீவிரவாதிகளின் இரு பிரிவுகளும் ஏழு பகுதி குழுக்களும் செயல்பாட்டில் இருந்தன. ஆனால் தற்போது ராய்பூர்-சம்பல்பூர் பகுதி நக்ஸல் தீவிரவாதமற்ற இடமாக மாறிவிட்டது. இம்மாத இறுதியில் நக்ஸல் தீவிரவாதத்தை நாடு முழுவதும் முற்றிலுமாக ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், ராய்பூர் இதன் தொடக்கப்புள்ளியாக அமைந்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளில் சத்தீஸ்கரில் 532 நக்ஸல்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். 2,700 பேர் சரணடைந்தனர். 2,000-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றனர்.

## சூதாட்டத்தில் பணத்தை இழந்ததால் கடன் அதிகரிப்பு: மனைவி, 3 குழந்தைகளை கொன்ற வியாபாரி

**புதுடெல்லி, மார்ச் 3:**

தலைநகர் டெல்லியின் அசாத்பூர் மண்டி பகுதியை சேர்ந்தவர் முன்ஜன் கேவாட். காய்கறி வியாபாரியான இவருக்கு திருமணமாகி அனிதா (வயது 27) என்ற மனைவியும் 3 குழந்தைகளும் (குழந்தைகள் வயது 5,4,3) இருந்தனர்.

இதனிடையே, சூதாட்டத்திற்கு அடிமை யான கேவாட் பலரிடம் கடன் வாங்கி சூதாடியுள்ளார். இதில் பணத்தை அவர் இழந்துள்ளார். இதையடுத்து, பணத்தை கடன் கொடுத்தவர்கள் கேவாட் இடம் கேட்டுள்ளனர். மேலும், அவரின் கடன் அதிகரித்துள்ளது. இதனால் குடும்பத்தினரை கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்ய கேவாட் முடிவெடுத்துள்ளார்.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை கேவாட் தனது மனைவி அனிதா மற்றும் 3 குழந்தைகளை கழுத்தறுத்து கொடூரமாக கொலை செய்துள்ளார். பின்னர், வீட்டை விட்டு வெளியேறிய கேவாட் ரெயில் மூலம் ராஜஸ்தான் தப்பிச்சென்றுள்ளார்.

மனைவி, 3 குழந்தைகளை கொலை செய்துவிட்டு கேவாட் தப்பிச்சென்றது குறித்து அக்கம்பக்கத்தினர் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், 4 பேரின் உடலையும் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், 4 பேரையும் கொலை செய்துவிட்டு தப்பிச்சென்ற கேவாட்டை ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட கேவாட்டிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## காஷ்மீரில் ஊடுருவ முயற்சி; பாகிஸ்தானிய டிரோன்களை சுட்டு வீழ்த்திய இந்திய ராணுவம்

**பூஞ்ச், மார்ச் 3:**

ஜம்மு மற்றும் காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் எல்லை கட்டுப்பாட்டு கோடு பகுதியில் பாகிஸ்தானை சேர்ந்த ஆளில்லா விமானங்கள் எனப்படும் டிரோன்கள் ஊடுருவ முயன்றன.

இதில், இந்திய வான்வெளியில் அத்துமீறி நுழைய முயன்ற 3 டிரோன்களை இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது. இந்த சம்பவம் காலை 5.45 மணி முதல் 6 மணிக்குள் நடந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்திய ராணுவத்தின் பதிலடியை தொடர்ந்து, சில டிரோன்கள் பாகிஸ்தானுக்கே திரும்பி சென்றுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் மட்டுமின்றி சமீப நாட்களாக இதுபோன்ற அத்துமீறல்கள் அடிக்கடி நடந்து வருகின்றன. இந்திய ராணுவமும் தீவிர கண்காணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

ஈரான் நாட்டை நேற்று அமெரிக்காவும், இஸ்ரேலும் கடுமையாக தாக்கின. இதில் போர் ஜெட் விமானங்கள் வான் வழியே சென்று தாக்குதல் நடத்தின. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்றம் காணப்படுகிறது. இந்த சூழலில், பாகிஸ்தானின் அத்துமீறல் சம்பவம் முறியடிக்கப்பட்டு உள்ளது.

## 10 மாநிலங்களில் மாநிலங்களவை தேர்தல்; சோனியா தலைமையில் காங்கிரஸ் ஆலோசனை கூட்டம்

**புதுடெல்லி, மார்ச் 3:**




நாடு முழுவதும் வருகிற ஏப்ரல் மாதத்துடன் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவி வகிக்கும் 37 பேரின் பதவி காலம் நிறைவடைகிறது. இதனை தொடர்ந்து, அந்த 37 எம்.பி. பதவிகளுக்கான இடங்கள் காலியாக உள்ளன. இதனை முன்னிட்டு வருகிற மார்ச் 16-ந்தேதி மாநிலங்களவை தேர்தல் நடைபெறும். அதற்கான வாக்குகளும் அன்று மாலை 5 மணியளவில் நடக்கும் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்து உள்ளது.

இதனை முன்னிட்டு, தமிழகம், தெலுங்கானா, சத்தீஷ்கார், ஒடிசா, அசாம் உள்ளிட்ட 10 மாநிலங்களில் இருந்து 37 உறுப்பினர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இந்த தேர்தலை அடுத்து, டெல்லியில் காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தியின் இல்லத்தில் அவருடைய தலைமையில், காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், அக்கட்சியின் தேசிய தலைவர் கார்கே, மக்களவையின் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி மற்றும் கட்சியின் பொது செயலாளர் கே.சி. வேணுகோபால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதில், இமாசல பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களை காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிறது. தமிழகத்தில் ஆளும் தி.மு.க.வுடன் கூட்டணியில் உள்ளது.

இதனால், அந்த மாநிலங்களில் காலியாக உள்ள உறுப்பினர்களுக்கான வேட்பாளர்கள் தேர்வு நடைபெறும் என கூறப்படுகிறது. இந்நிலையில், அடுத்த 2 நாட்களில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களின் பெயர்கள் வெளியிடப்படும் என கட்சி வட்டாரம் தெரிவித்து உள்ளது.

## மேற்கு ஆசிய போரால் விமானங்கள் ரத்து! துபையில் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் பரிதவிப்பு!

**புதுடெல்லி, மார்ச் 3:**

மேற்கு ஆசியாவில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதலால் போர் மூண்டு சர்வதேச விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால், ஐக்கிய அரபு அமீரகத்தின் துபை நகரில் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் சிக்கித் தவித்து வருகின்றனர்.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், குவைத், பஹ்ரைன், ஜோர்டான் உள்ளிட்ட நாடுகளில் உள்ள இஸ்ரேல், அமெரிக்கராணுவதளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதன் காரணமாக ஐக்கிய அரபு அமீரகத்தில் விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால், துபையில் பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து, கர்நாடக மாநிலத்தின் மதச்சார்பற்ற ஜனதா தள எம்எல்சி போஜே கௌடா மற்றும் அவரின் குடும்பத்தினர், வங்காள நடிகை சுபஸ்ரீ கங்குலி மற்றும் அவரின் மகன், சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள் உள்ளிட்டோர் பரிதவித்து வருகின்றனர். ஐக்கிய அரபு அமீரகத்துக்கு வணிக மற்றும் சுற்றுலா காரணங்களுக்காக மத்திய பிரதேசத்தை சேர்ந்த 2 முன்னாள் எம்எல்ஏக்கள் உள்பட 700-க்கும் மேற்பட்டோர் சென்றனர். அவர்கள் இந்தியா திரும்ப முடியாமல் பரிதவித்து வருவதாக இந்திய பயண முகவர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. 2 முன்னாள் எம்எல்ஏக்களில் ஒருவரான பாஜக பிரமுகர் சஞ்சய் சுக்லா சமூக ஊடகத்தில் வெளியிட்ட காணொலியில், அவர் இருந்த இடத்தில் இருந்து சில கி.மீ.கள் தொலைவில் குண்டுவெடித்து புகை எழும் காட்சி இடம்பெற்றுள்ளது. அத்துடன் அவர் வெளியிட்ட பதிவில், 'ஐக்கிய அரபு அமீரகத்தில் சூழல் மோசமடைந்துள்ளது. அனைத்துப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. நாங்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்ப பிரதமர் மோடி ஆவன செய்ய வேண்டும்' என்றார்.

இதுகுறித்து மத்திய பிரதேச மாநிலம் இந்தூர் எம்.பி. சங்கர் லால்வாணி கூறுகையில், 'ஐக்கிய அரபு அமீரகத்தில் ஏராளமானோர் சிக்கியுள்ளது குறித்து வெளியுறவு அமைச்சகத்திடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூழல் இயல்பு நிலைக்குத் திரும்பியவுடன் அவர்கள் இந்தியாவுக்கு அழைத்து வரப்படுவர்' என்றார்.

## யுஏஇ அதிபருடன் பிரதமர் மோடி பேச்சு: தாக்குதலுக்கு கண்டனம்!

**புதுடெல்லி, மார்ச் 3:**

ஐக்கிய அரபு அமீரக (யுஇஏ) அதிபர் ஷேக் முகமது பின் ஸயத் அல்நஹ்யானிடம் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக ஞாயிற்றுக்கிழமை பேசினார். அப்போது யுஇஏ மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த அவர், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்தார். இந்தக் கடினமான சூழலில் யுஏஇயுடன் இந்தியா துணை நிற்பதாகவும் அங்கு வசிக்கும் இந்தியர்களுக்கு பாதுகாப்பு அளித்து வருவதற்கு நன்றி தெரிவித்தார். மேலும், மோதலை கைவிட்டு, பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிபடுத்த இந்தியா ஆதரவளிப்பதாக தனது எக்ஸ் வலைதளப் பதிவில் பிரதமர் மோடி குறிப்பிட்டார். முன்னதாக, மத்திய கிழக்கு நிலவரம் குறித்து பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. இந்தக் குழுவில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித் ஷா, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றம் காரணமாக பல்வேறு விமானங்கள் ரத்து செய்யப்பட்ட நிலையில் அங்கு சிக்கியுள்ள இந்தியர்களுக்கு உதவ மத்திய விமானப் போக்குவரத்து துறையின் கட்டுப்பாட்டு அறை தீவிரமாகப் பணியாற்றி வருகிறது. ஏற்கெனவே, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் அமைந்துள்ள இந்திய தூதரகங்கள் உதவி எண்களை அறிவித்துள்ளன. அத்துடன் 011-24604283, 011-24632987 ஆகிய எண்களையும் இந்தியப் பயணிகள் தொடர்புகொள்ளலாம். இதுதவிர ஏர்சேவா வலைதளம் மற்றும் சமூக ஊடகப் பக்கங்களிலும் பயணிகள் உதவிகோரலாம் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## துபையில் சிக்கியவர்களுடன் காணொலியில் பேசிய சித்தராமையா!

**பெங்களூரு, மார்ச் 3:**

கர்நாடகத்தின் பல்லாரி தொகுதி எம்.எல்.ஏ. உள்பட அப்பகுதியைச் சேர்ந்த 32 பேர் துபையில் சிக்கியுள்ளனர். அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாக முதல்வர் சித்தராமையா விடியோ அழைப்பில் உரையாடினார்.

இந்நிலையில் இது குறித்து தனது எக்ஸ் தளப் பக்கத்தில் முதல்வர் சித்தராமையா பதிவிட்டுள்ளதாவது:

''ஈரான் - இஸ்ரேல் இடையே பதற்றமான சூழல் நிலவிவரும் நிலையில், மத்திய கிழக்கில் உள்ள கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதில் கர்நாடக அரசு மும்முரமாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக மத்திய கிழக்கில் ஐக்கிய அரபு அமீரகம், ஈரான், இஸ்ரேல் மற்றும் கத்தார் நாடுகளில் உள்ளவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறோம்" எனப் பதிவிட்டுள்ளார். புது தில்லியில் உள்ள குடியுரிமை ஆணையருடன் நான் ஆலோசனை நடத்தி, நமது மக்களைப் பாதுகாக்கத் தேவையான மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளேன் எனப் பதிவிட்டுள்ளார்.

## அமெரிக்க ஏகாதிபத்தியம் இது..! கமேனி கொலைக்கு பினராயி விஜயன் கடும் கண்டனம்

**திருவனந்தபுரம், மார்ச் 3:**

ஈரான் போரில் உச்சகட்ட பதற்றமாக, இஸ்ரேல் - அமெரிக்க படையின் தாக்குதலில் ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா கமேனி (86) கொல்லப்பட்டார். இதனைத்தொடர்ந்து, அமெரிக்காவுக்கு ஈரான் தக்க பதிலடி அளிக்கும் என்று சூளுரைத்துள்ளது. இதையடுத்து, மத்திய கிழக்கில் நிலவிவரும் பதற்றமான சூழலில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே இப்போது பூதாகரமாகப் போர் வெடித்துள்ளது. இதனால் ஈரானில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இந்நிலையில், ஈரானில் நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து, பிரதமர் நரேந்திர மோடிக்கு கேரள முதல்வர் பினராயி விஜயன் (மார்ச் 1) எழுதியுள்ள கடிதத்தில், 'இவ்விவகாரத்தில் அரசு உடனடியாகத் தலையிட வலியுறுத்தியிருப்பதாகக்' குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் தெரிவித்திருப்பதாவது : "வளைகுடா நாடுகளில் உள்ள எங்களது (கேரள) ஆயிரக்கணக்கான சகோதர, சகோதரிகள் மிகப்பெரியதொரு பாதுகாப்பற்ற சூழலில் இருக்கின்றனர். இவையனைத்தும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடுஞ்செயல்களால் உருவாக்கப்பட்டிருப்பவையே. இத்தருணத்தில் நான் சொல்ல நினைப்பது இதைத்தான் - 'அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இச்செயல்களுக்கு எதிராக கடும் கண்டனத்தை நாம் கூட்டாக வெளிப்படுத்த வேண்டும்'" என்று பினராயி விஜயன் தெரிவித்தார்.

# பிப்ரவரி ஜிஎஸ்டி வசூல் 8.1 சதவீதம் அதிகரித்து ரூ.1.83 லட்சம் கோடியைத் தாண்டியது!

**புதுடெல்லி, மார்ச் 3:**




நாட்டில் கடந்த பிப்ரவரியில் சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) வசூல் 8.1 சதவீதம் அதிகரித்து ரூ.1.83 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. இது இறக்குமதிகள் மூலம் கிடைத்த வருவாய் அதிகரிப்பு மற்றும் உள்நாட்டு விற்பனையில் முன்னேற்றம் காரணமாக நிகழ்ந்தது. 2025, பிப்ரவரி மாதத்தை ஒப்பிடுகையில் 8.1 சதவீதம் அதிகமாகும்.

இதுகுறித்து மத்திய அரசு ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட தரவுகளில், கடந்த 2025 பிப்ரவரியில் மொத்த ஜிஎஸ்டி வசூல் ரூ.1,83,609 கோடி. இதில் உள்நாட்டு பரிவர்த்தனைகள் மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாய் 5.3 சதவீதம் உயர்ந்து, ரூ.1.36 லட்சம் கோடியாகவும், சரக்கு இறக்குமதி மூலம் கிடைக்கப்பெற்ற வருவாய் 17.2 சதவீதம் உயர்ந்து ரூ.47,837 கோடியாக உள்ளது. இது இறக்குமதிகள் மூலம் கிடைத்த வருவாய் அதிகரிப்பு மற்றும் உள்நாட்டு விற்பனையில் முன்னேற்றம் காரணமாக நிகழ்ந்தது.

திருப்பியளிக்கப்பட்ட மொத்த தொகை 10.2 சதவீத உயர்ந்து ரூ.22,595 கோடியாகவும், மொத்த நிகர ஜிஎஸ்டி வருவாய் 7.9 சதவீதம் உயர்ந்து, ரூ.1.61 லட்சம் கோடியாக உள்ளது.

கடந்த 2025 பிப்ரவரியில் ரூ.13,481 கோடியாக இருந்த நிகர செஸ் வருவாய் ரூ.13,481 கோடி, தற்போது ரூ.5,063 கோடியாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் ஜிஎஸ்டி விகிதங்கள் 5% மற்றும் 18% என இரண்டாக குறைக்கப்பட்டது. சில மிக ஆடம்பர பொருட்கள் மற்றும் புகையிலை பொருட்களுக்கு அதிகபட்சமாக 40% ஆக அதிகரிப்பட்டது. இதனால் சுமார் 375 பொருள்களுக்கான விலை ஆரம்பத்தில் குறைந்து ரூ.1.89 லட்சம் கோடி வசூலானது. அக்டோபரில் ரூ.1.96 லட்சம் கோடி, நவம்பரில் ரூ.1.70 லட்சம் கோடி, டிசம்பரில் ரூ.1.74 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது.

நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மொத்த ஜிஎஸ்டி வசூல் ரூ.20.27 லட்சம் கோடியாகும். முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் 8.3 சதவீத அதிகரித்து ரூ.18.71 லட்சம் கோடி. 2024-25 நிதியாண்டில் முன்னெப்போதும் இல்லாத அளவில் மொத்தம் ரூ.22.08 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. இந்த ஜிஎஸ்டி வசூல் சுழற்சி ஏற்ற இறக்கங்களை விட கட்டமைப்பு ஸ்திரத்தன்மையை பிரதிபலிக்கிறது.

# ஹிஸ்புல்லா தாக்குதலுக்கு பதிலடியாக லெபனானில் இஸ்ரேல் தாக்குதல்; 31 பேர் பலி

டெல்அவிவ், மார்ச் 3:



ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாகஇணைந்து வான்வழியாக நேற்று முன்தினம் கடுமையாக தாக்கியது. இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு உள்ளனர். ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர்.

இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்றம் காணப்படுகிறது. இந்த தொடக்க கட்ட தாக்குதலில் 40-க்கும் மேற்பட்ட மூத்த ராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டு விட்டனர் என இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்து உள்ளது. இந்த நிலையில், லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பு இன்று இஸ்ரேலை தாக்கியது. இதற்கு பதிலடியாக, இஸ்ரேலும் தாக்குதல் நடத்தி உள்ளது. இந்த சம்பவத்தில், 31 பேர் பலியாகி உள்ளனர் என லெபனான் சுகாதார அமைச்சகம் இன்று தெரிவித்து உள்ளது. இதுதவிர 149 பேர் காயம் அடைந்து உள்ளனர். பலியானவர்களில் 3-ல் 2 பங்கு பேர் தெற்கு லெபனானை சேர்ந்தவர்கள் ஆவர். இந்த தாக்குதல் மற்றும் பதிலடி சம்பவங்களால் மத்திய கிழக்கு பகுதியில் தொடர்ந்து போர் தொடர கூடிய சூழல் காணப்படுகிறது.

## ஈரான் டிரோன் தாக்குதல்: சவுதி அரேபியாவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தற்காலிகமாக மூடல்

துபாய், மார்ச் 3:

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கூட்டாக ஈரான் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளன. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் காமேனி, அவரது குடும்பத்தினர் மற்றும் ஈரானின் முக்கிய தலைவர்கள் உட்பட சுமார் 200-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்காவின் நேச நாடுகளாக உள்ள பஹ்ரைன், ஜோர்டான், குவைத், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் பதற்றம் நிலவுகிறது.

குவைத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது ஈரான் டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. அமெரிக்க தூதரகம் தீப்பற்றி எரிவதால் அங்கிருக்கும் பணியாளர்கள் உடனடியாக வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்திய நிலையில், தற்போது தூதரகம் மீதும் தாக்குதல் தொடங்கப்பட்டுள்ளது. பஹ்ரைனிலும் ஈரான் தாக்குதல் நடத்துவதால் அங்கு சைரன் ஒலிக்கப்பட்டு மக்கள் உஷாராக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், சவுதி அரேபியா ராஸ் தனுராவில் உள்ள சவுதி அரம்கோ (SAUDI ARAMCO) எண்ணெய் ஆலை மீது ஈரான் டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. ஆலையில் தீ பற்றி எரிந்த நிலையில், உடனடியாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் காரணமாக எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. நிலைமை கட்டுக்குள் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவது இல்லை: ஈரான் திட்டவட்டம்

அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலுக்கு பதிலடியாக ஈரான், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் மத்திய கிழக்கு முழுவதும் போர் மேகம் சூழ்ந்துள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகின்றன. ஈரான் மீதான ராணுவ நடவடிக்கை இன்னும் நான்கு வாரங்களுக்கு நீடிக்கலாம். ஈரானின் பரப்பளவு மற்றும் தற்போதைய ராணுவ நிலவரத்தை கணக்கில் கொண்டு இந்த காலக்கெடு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தாக்குதல்கள் தற்காலிகமானவை அல்ல. அமெரிக்காவின் அனைத்து இலக்குகளும் எட்டப்படும் வரை போரின் வேகம் குறையாது என்று டிரம்ப் கூறினார்.

மேலும், “ஈரான் ராணுவம், புரட்சிகர காவல்படை மற்றும் போலீசார் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும். இல்லையென்றால் மரணத்தை எதிர்கொள்ள நேரிடும். ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம். ஈரான் எங்களுடன் பேச தயாராக இருக்கிறது,” என்று டிரம்ப் தெரிவித்தார். இந்த நிலையில், அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் இல்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது. ஈரானின் உயர் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் அலி லாரிஜானி இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

## ஈரானுக்கு எதிராக களம் இறங்க தயார்.. 3 நாடுகள் கூட்டறிக்கை

மத்திய கிழக்கு பகுதியில் உள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகளான பஹ்ரைன், ஜோர்டான், குவைத், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டது. எண்ணெய் கப்பல் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. விமான சேவையும் மத்திய கிழக்கு பகுதியில் முடங்கி உள்ளது. இதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. இதனிடையே ஈரான் உச்ச தலைவர் காமேனி மரணத்துக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இஸ்ரேல் மீது லெபனான் தாக்குதல் தொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 31 பேர் உயிரிழந்துள்ளதாக லெபனான் சுகாதார அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது. இஸ்ரேல் வான்வழி தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டதாகவும் 149 பேர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக வான்வழி தாக்குதல் நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. லெபனான் மீது இன்னும் தீவிரமான தாக்குதலை முன்னெடுக்க போகிறோம் என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இந்தநிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவுடன் கைகோர்க்க தயாராக உள்ளதாக தெரிவித்து இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளது. நட்பு நாடுகளின் நலன்களை பாதுகாக்க ஈரானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவப் பயன்படும் தளங்களை அழிக்க தற்காப்புத் தாக்குதல்களை நடத்த தயார் என அந்நாடுகள் அறிவித்துள்ளது.

# ஓமனில் எண்ணெய் கப்பல் மீது நடந்த தாக்குதலில் இந்தியர் பலி

மஸ்கட், மார்ச் 3:



ஓமனின் அரசு செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், ஓமன் வளைகுடா பகுதியில் மஸ்கட் நகர கடலோரத்தில், மார்ஷல் தீவுகளின் கொடியுடன் கூடிய எண்ணெய் கப்பல் ஒன்று சென்று கொண்டிருந்தது. அதனை வெடிகுண்டுகளுடன் கூடிய ஒரு டிரோன் இன்று கடுமையாக தாக்கியது என தெரிவித்து உள்ளது.

இந்த சம்பவத்தில் கப்பலில் இருந்த இந்தியர் ஒருவர் பலியாகி உள்ளார். ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாகஇணைந்து வான்வழியாக நேற்று முன்தினம் கடுமையாக தாக்கியது. இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு உள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர். இதனையடுத்து, ஹார்முஜ் ஜலசந்தி பகுதியை நெருங்க கூடிய கப்பல்களை ஈரான் அச்சுறுத்தி வருகிறது. மத்திய கிழக்கில் பதற்றம் நிறைந்த சூழலில், பெர்சியன் வளைகுடாவின் குறுகலான நுழைவு பகுதியில் ஈரான் பல்வேறு தாக்குதல்களை நடத்தியிருக்க கூடும் என நம்பப்படுகிறது.

அவர்களில் 15 பேர் இந்தியர்கள் ஆவர். மற்ற 5 பேர் ஈரான் நாட்டை சேர்ந்தவர்கள் ஆவர். அவர்களில் 4 பேருக்கு காயங்கள் ஏற்பட்டு உள்ளன. அவர்கள் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர். எனினும், தாக்குதலை நடத்தியது யார்? எதற்காக இந்த தாக்குதல்? கப்பலுக்கு ஏற்பட்ட பாதிப்பு உள்ளிட்ட விவரங்களை ஓமன் அதிகாரிகள் உடனடியாக வெளியிடவில்லை. மத்திய கிழக்கில் பதற்றம் ஏற்பட்டு உள்ள சூழலில், இந்தியர்கள் பயணம் செய்த எண்ணெய் கப்பல் மீது நடுக்கடலில் தாக்குதல் நடந்துள்ளது.

# வளைகுடா நாடுகளின் இறையாண்மை மதிக்கப்பட வேண்டும்: மேற்காசிய மோதல் பற்றி கவலை தெரிவித்த சீனா

பீஜிங், மார்ச் 3:



ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக நேற்று முன்தினம் கடுமையாக தாக்கியது. இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு உள்ளனர். ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர்.

இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்றம் காணப்படுகிறது. இந்த தொடக்க கட்ட தாக்குதலில் 40-க்கும் மேற்பட்ட மூத்த ராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டு விட்டனர் என இஸ்ரேல் பாதுகாப்பு படை தகவல் தெரிவித்து உள்ளது. இந்நிலையில், சீன வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் மாவோ நிங் கூறும்போது, ஈரானுக்கு எதிரான அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் சீனா கவலை கொள்கிறது. இது ஈரானின் அண்டை நாடுகளையும் பாதித்துள்ளது என கூறினார்.

வளைகுடா நாடுகளின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவையும் கூட முழு அளவில் மதிக்கப்பட வேண்டும் என சீனா நம்பிக்கை கொண்டுள்ளது என்றார். இந்த மோதல் மற்றும் மத்திய கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றம் ஆகியவற்றை அடுத்து, ஈரானில் இருந்து 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சீனர்களை நாங்கள் பாதுகாப்பாக வெளியேற்றி உள்ளோம் என்றும் நிங் குறிப்பிட்டார்.

## மியான்மரில் ராணுவம் நடத்திய தாக்குதலில் 24 பேர் பலி

நைப்பியிதோ, மார்ச் 3:

இந்தியாவின் அண்டை நாடு மியான்மர். இந்நாட்டில் உள்நாட்டு போர் கடந்த 2021ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

அரசுப்படையினருக்கும், ஆயுதக்குழுவினருக்கும் இடையே தொடர்ந்து மோதல் நடைபெற்று வருகிறது. இந்த உள்நாட்டுப்போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், அந்நாட்டின் மெஹ்வே மாகாணம் மிண்டோன் நகரில் பியாங்க் பகுதியில் ராணுவத்தினர் இன்று வான்வழி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 24 பேர் உயிரிழந்தனர். மேலும், 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

## போர்ப் பதற்றம்! அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை; ஈரான் பாதுகாப்புத் தலைவர் முயற்சி

அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த ஈரானின் பாதுகாப்புத் தலைவர் புதிய கோரிக்கையை வைத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரான் மீது அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதல்களால் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்ட சில மணிநேரங்களுக்குப் பிறகு, மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டும் என ஈரான் பாதுகாப்புத் தலைவர் புதிய கோரிக்கையை வைத்திருபப்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க ஈரான் புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில், ஈரானின் பாதுகாப்புத் தலைவர் அலி லாரிஜானி, ஓமன் அமைதிப் பேச்சுவார்த்தை அமைப்புகள் மூலம் அமெரிக்காவுடன் அணுசக்தி பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க புதிய முயற்சியை மேற்கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இது பற்றி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆங்கில ஊடகத்துக்கு அளித்த பேட்டியில், ஈரானின் உச்ச தலைவரான தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி (86) கொல்லப்பட்ட அடுத்த நாளே, ஈரான் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த கோரிக்கை வைத்திருப்பதாகக் கூறினார்.

அதாவது, அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறார்கள். நான் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டேன். அவர்களுடன் நான் பேச்சுவார்த்தை நடத்துவேன். இதனை அவர்கள் முன்கூட்டியே செய்திருக்க வேண்டும். விரைவாக அவர்களால் என்ன செய்திருக்க முடியுமோ அதனை செய்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அதிக காலம் காத்திருந்துவிட்டனர் என்றும் டிரம்ப் குறிப்பிட்டிருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஆப்கன் தலிபான்களுக்கு எதிரான தாக்குதல் நிறைவடையவில்லை: பாகிஸ்தான்



இஸ்லாமாபாத், மார்ச் 3:

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் இடையே பல மாதங்களாக எல்லை தாண்டிய தாக்குதல்கள் நீடித்து வந்த நிலையில், ஆப்கானிஸ்தான் மீது நேரடியாகப் போர் தொடுப்பதாக பாகிஸ்தான் அண்மையில் அறிவித்தது.

கடந்த வியாழக்கிழமை இரவு பாகிஸ்தான் தொடங்கிய இந்தப் போர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாக தகவல் வெளியான நிலையில், அதை அந்நாட்டு நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் தாரிக் ஃபசல் சௌதரி மறுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்வதாக அவர் தெரிவித்தார்.

அந்நாட்டு தகவல் துறை அமைச்சர் அத்தாவுல்லா தரார் கூறுகையில், ‘பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகள் நடத்திய தாக்குதலில், இதுவரை சுமார் 352 தலிபான்கள் உயிரிழந்தனர். 535 தலிபான்கள் காயமடைந்தனர். 130 ராணுவச் சாவடிகள் முழுமையாக அழிக்கப்பட்டன’ என்றார்.

# அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் தாக்குதல் - ஈரானில் 150 மாணவிகள் உள்பட 555 பேர் உயிரிழப்பு

ஜெருசலேம், மார்ச் 3:



ஈரான் அணு ஆயுத தயாரிப்பை நிறுத்த வேண்டும், யுரேனியம் செறிவூட்டலை நிறுத்த வேண்டும், நீண்ட தொலைவு சென்று தாக்கும் ஏவுகணை திட்டங்களை ரத்து செய்ய வேண்டும், மத்திய கிழக்கு நாடுகளில் ஈரான் தனது கிளர்ச்சி படைகளின் செயல்பாட்டை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் வலியுறுத்தினார்.

ஆனால் இதற்கான ஒப்பந்தத்தில் ஈரான் கையொப்பமிட மறுத்தது. இதுதொடர்பாக அமெரிக்கா-ஈரான் இடையே நடைபெற்ற 2 சுற்று பேச்சுவார்த்தைகளிலும் சுமுக உடன்பாடு ஏற்படவில்லை. அதைத் தொடர்ந்து, ஈரான் உடனடியாக ஒப்பந்தம் மேற்கொள்ளாவிட்டால் மோசமான பேரழிவைச் சந்திக்க நேரிடும் என்று டிரம்ப் மிரட்டல் விடுத்தார்.


இந்த நிலையில் நேற்று முன்தினம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவத்தினர் இணைந்து ஈரான் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். ஈரான் தலைநகர் தெஹ்ரான் உள்பட பல்வேறு பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார்.

தெஹ்ரானில் உள்ள காமேனியின் இல்லம் தரைமட்டமாக்கப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்தார். இந்த தாக்குதலில் காமேனியின் மகள், மருமகன் மற்றும் மருமகள் ஆகியோரும் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. அலி காமேனி உயிரிழந்ததையடுத்து ஈரானில் 40 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பஹ்ரைன், கத்தார், சவுதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் பதிலடி தாக்குதல் நடத்தியது. அதே சமயம், ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகள் தொடர்ந்து ஏவுகணை மற்றும் டிரோன் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த 28-ந்தேதி முதல் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதல்களில் ஈரானில் இதுவரை 555 பேர் உயிரிழந்துள்ளதாக ஈரானில் உள்ள ரெட் கிரசெண்ட் என்ற தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரானில் உள்ள 131 நகரங்கள் மீது அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தொடக்கப் பள்ளி ஒன்றின் மீது நடத்தப்பட்ட வான்வழி தாக்குதலில் சுமார் 150 மாணவிகள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.



# உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை, தூதரக முயற்சி மூலம் தீர்வு: பிரதமர் வலியுறுத்தல்

# தமிழகம் எல்லாத் துறைகளிலும் ‘ஆல் ரவுண்டர்’: ஸ்டாலின் பேச்சு






# டெல்லி சென்றார் எடப்பாடி; அமித்ஷாவை சந்திக்கிறார்

# 2026 ஆண்டின் முதல் சந்திர கிரகணம்; திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 10 மணி நேரம் நடை அடைப்பு..!

# பிப்ரவரி ஜிஎஸ்டி வசூல் 8.1 சதவீதம் அதிகரித்து ரூ.1.83 லட்சம் கோடியைத் தாண்டியது!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 03.03.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ–பேப்பர்